# இலக்கியம் கூறும்
# தமிழர் வாழ்வியல்

(சங்க காலம்)

ஆக்கியோர்:

டாக்டர் சி. இலக்குவனார், M. A., M. O. L., Ph. D.


வெளியிடுபவர்:

வள்ளுவர் பதிப்பகம்,
வடக்கு இராச வீதி,
புதுக்கோட்டை

# படையல்

திருக்குறட் கொள்கைத் தெருவெலாம் முழங்க
பணிபல ஆற்றும் பண்புடை அண்ணலார்
சுப்பிரமணியரும் சொல்பணி சிறக்க
உறுதுணை நிற்கும் உயர்மனத் தம்பி
கோவிந்தசாமியாம் குணநலக் குன்றும்
ஈன்று புறந்தந்து இசைபல கொண்ட
மாதருள் மணியெனும் மாணிக்க அம்மை
திருமா லன்பும் தெய்வநூற் கேள்வியும்
அடியார் தொண்டும் அயரா உழைப்பும்
விருந்து புறந்தரலும் வேண்டி வந்தோர்
அருந்துயர் களைதலும் அணியெனப் பூண்டே
ஒருநூறாண்டு உலகினில் வாழ்ந்தே
என்னுளம் கொண்டு இறைநிலை பெற்ற
அன்னை நினைவுக் காக்கினேன் இதனையே.

ஆசிரியர்.



மாணிக்கத்தம்மாள்

# முகவுரை

இமிழ் கடல் உலகில் இனிதே வாழும் மக்கள் இனங்களுள் தமிழ் இனமே தொன்மைச் சிறப்புடையது. ஆயினும் தமிழ் இனத்தின் தொன்மை வரலாற்றைத் தமிழரே அறிந்திலர். முன்னோர் வரலாற்றைப் பின்னோரும் அறிந்து கொள்ளுதல் மக்களின் முன்னேற்றத்திற்குப் பெருந்துணை புரிவதாகும்.

தமிழர் வரலாறு இன்னும் புதைபொருளாகவே இருந்து வருகின்றது. வெளிவந்துள்ள வரலாற்று நூல்களில் தமிழரைப்பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளுள் பல உண்மையொடு பொருந்தாதனவாய் உள்ளன. வரலாற்றாசிரியர் பலருக்குத் தமிழிலக்கிய அறிவு கிடையாது. தமிழிலக்கியமே பழந்தமிழர் வரலாறு அறிவிக்கும் மூலங்களுள் முதன்மை பெற்று நிற்கின்றது. அதனை நேரே அறியாது தமிழர் வரலாறு எழுதப்புகின் குருடர் கண்ட யானை கதை போன்று அமைவது இயல்புதானே.

இந்நூல் இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியலை எடுத்து இயம்புகின்றது; சங்ககால மக்களின், கி. பி. முதல் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்தோரின், வாழ்வியல் எவ்வாறு இருந்தது என்பதைத் தமிழர் அறியத் துணை செய்யும்.

எனது ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு உதவும் வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், அண்ணல் பு. அ. சுப்பிரமணியனார், இதனையும் செம்மையாக வெளியிட்டு உதவியுள்ளனர். அன்னார்க்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

'கருமுத்து அகம்'
திருநகர்-மதுரை
3—12—62.

# பதிப்பக முன்னுரை

சங்க காலமே தமிழகத்தின் பொற் காலம் என்பர். அக்காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைத் தெளிவுறக் கூறுகின்றது இந்நூல்.

அக்கால மக்கள் எல்லா வகையினும் சிறப்புறவே வாழ்ந்துள்ளனர். உயர் நாகரிகம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் இவ்விருபதாம் நூற்றுண்டு மக்கள் வாழ்வோடு ஒப்பிட்டு நோக்கின் அக்கால மக்கள் வாழ்வு பல துறைகளில் ஏற்றம் பெற்றிருந்தது என்பதை இனிதே அறியலாம்.

மக்கள் வாழ்வியலும், வரலாறும் பல்கலைக் கழகப்பாடத் திட்டங்களில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. தமிழ் நாட்டு மாணவர்களும் மக்களும், தம்நாட்டு வாழ்வியலையும் வரலாற்றையும் விரும்பிக் கற்றல் வேண்டும். தம் நாட்டு உண்மை வரலாற்றை உலக மக்களுக்கு அறிவிக்கும் முயற்சியிலும் தமிழர் கருத்துச் செலுத்துதல் வேண்டும்.

'வள்ளுவர் பதிப்பகம்' இத்துறையில் தம்மாலியன்ற தொண்டைச் செய்து வருகின்றது. தமிழ் மக்களின் பெருமையைத் தரணிக்கு எடுத்துரைப்பதே தம் தலையாய கடனகக் கொண்டுள்ளது.

நிறைந்த உழைப்பும் மிகுந்த பொருட் செலவும் பெற்று வெளிவரும் உயர் ஆராய்ச்சி நூல்களைத் தமிழ் மக்கள் பெற்றுப் பதிப்பகத்தை ஊக்குவித்தாலன்றி மேலும் பல நூல்கள் வெளியிடுதல் இயலாததாகும். ஆதலின் தமிழக மக்கள் ஒல்லும் வகையால் எம் நூல்களைப் பெற்றுத் தாமும் பயனடைந்து, எம்மையும் பயனடையச் செய்யுமாறு அன்போடு வேண்டுகின்றேம்.

இந்நூலாசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் ஆழ்ந்த புலமையும், ஆராய்ச்சித் திறனும், தமிழ் உள்ளமும் பெற்ற பெருமகனார் என்பதைத் தமிழுலகம் நன்கு உணர்ந்ததே. அவர்கள், மக்கள் நலனைக் கருதி இந்நூலை எளிய, இனிய, தூய நடையில் எழுதி வழங்கியுள்ளார். அவர்கட்கும், இது அழகுற வெளிவருவதற்கு அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவிய நண்பர்கள், புலவர் நடராசனார் அவர்கட்கும், திரு. த. உ. நடராசப்பிள்ளை அவர்கட்கும் பதிப்பகம் தம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

புதுக்கோட்டை,
6—12—62.

பு. அ. சுப்பிரமணியன்

பதிப்பக உரிமையாளர்.

# 1. முன்னுரை

'இலக்கியம்' என்பது தூய தமிழ்ச் சொல். இதனை 'இலக்கு + இயம்' எனப் பிரிக்கலாம். இது 'குறிக்கோளை இயம்புவது' என்னும் பொருளைத் தருவது. வாழ்வின் குறிக்கோளை வகையுற எடுத்து இயம்புவதே இலக்கியமாகும். ஆகவே இலக்கியத்தின் துணைகொண்டு அவ்விலக்கியத்திற்குரிய மக்களின் வாழ்வியலை அறிதல் கூடும். தமிழிலக்கியத்தின் துணைகொண்டு தமிழ் மக்களின் வாழ்வியலை அறியலாம்.

தமிழ் மக்களின் வரலாற்றை அறிவதற்குத் துணைபுரிவனவற்றுள் முதன்மை இடம் பெறுவதும் தமிழ் இலக்கியமேயாகும்.

தமிழ் இலக்கியம் தொன்மை நலம் சான்றது. அதன் தோற்றக் காலம் யாதெனை அறுதியிட்டு உரைத்தல் எவராலும் இயலாது.

பலவகையாலும் அழிந்தனபோக எஞ்சியனவாய் நமக்குக் கிடைத்துள்ளனவற்றுள் முழுமை நூலாய் இலங்குவது தொல்காப்பியம் ஒன்றேயாகும்.

தொகை நூல்களாம் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எனப்படுவனவற்றுள்சில, தொல்காப்பியத் திற்கு முற்பட்டனவாகவும் இருக்கலாம்.

தொல்காப்பியத்தின் காலம், கி. மு. பத்தாம் நூற்றூண்டுக்கு முற்படாமலும் கி. மு. ஆறும் நூற்றுண்டுக்குப் பிற்படாமலும் இடைப்பட்டதாக இருக்கலாம். கி. மு. ஏழாம் நூற்றூண்டு என வரையறுக்கலாம். ஆகவே கி. மு. ஏழாம் நூற்றூண்டு முதல் இற்றைநாள் வரை உருவாகியுள்ள தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கைப் பின்வருமாறு வகைப்படுத்தி அறியலாம்.

1. தொல்காப்பியம்.
2. சங்க இலக்கியங்கள்.
3. காப்பியங்கள்.
4. அறநூல்கள்.
5. கடவுள் அன்பு நூல்கள்.
6. காதைகள்.
7. சமய மெய்ந் நூல்கள்.
8. சிற்றிலக்கியங்கள்.
9. சீர்திருத்த நூல்கள்.

இவ்வகைப் பிரிவுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினையும், அதன்கண் ஏற்பட்ட திருப்பங்களை யும் உணர்த்துவனவாகும்.

'தொல்காப்பியம்' ஓர் இலக்கணம் எனக் கருதப் பட்ட போதினும் அது தமிழர் வாழ்வை அறிவதற் குப் பெரிதும் துணைபுரிகின்றது. எழுத்து, சொல், பொருள் எனப்படும் அதன் முப்பிரிவுகளுள், 'பொருள்' இலக்கிய இலக்கணமாக இருப்பதோடு

தமிழர் வாழ்வியல் உரைக்கும் வரலாருகவும் அமைந்துள்ளது. இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்ற வேண்டுமென்பது மேனட்டு இலக்கிய ஆராய்ச்சியாளர் கூற்ருகும். இக்கூற்றுக்கு ஏற்பவே தொல்காப்பியத்தில் இலக்கிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

'தொல்காப்பியம்' எனும் பெயர் நூலுக்கு இடப்பட்டதேயாகும். இப்பெயர் 'பழமையானவற்றைக் காப்பது' எனும் பொருளைத் தருவதாகும். தமிழரின் வாழ்வியல் மரபுகளையும் இலக்கிய மரபுகளையும் காப்பதற்கெனவே இந்நூல் எழுதப்பட்டதெனத் தெளிதல் வேண்டும். தொல்காப்பியத்தை இயற்றியதனுல் அதன் ஆசிரியர் தொல்காப்பியர் எனப்பட்டார். பின்னர் அவரின் இயற்பெயர் மறக்கப்பட்டு மறைந்து விட்டது.

'தொல்காப்பியம்' எனும் நூலின் பெயரிலிருந்து 'தொல்காப்பியர்' எனும் ஆசிரியரின் பெயர் தோன்றியுள்ளதேயன்றித் 'தொல்காப்பியர்' எனும் ஆசிரியர் பெயரிலிருந்து 'தொல்காப்பியம்' எனும் நூலின் பெயர் தோன்றிலது. இவ்வாறு ஆசிரியர் பெயரிலிருந்து நூலின் பெயர் தோன்றுவது தமிழ் மரபு அன்று; வடமொழி மரபாகும். வடமொழி மரபையறிந்த பிற்காலத்தார் 'தொல்காப்பியம்' எனும் பெயர் 'தொல்காப்பியர்' எனும் பெயரிலிருந்து தோன்றியது எனப் பிறழ நினைந்தனர்.

தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தில் வடமொழியாளர் தமிழ் நாட்டில் குடியேறத் தொடங்கி விட்டனர். வடமொழிச் சொற்கள் தமிழில் எடுத்

தாளப்படுவதற்குத் தொல்காப்பியத்தில் விதி கூறப்பட்டுள்ளது. ஆனால் வடவர் வாழ்வியல் முறையைத் தமிழர் ஏற்றுக்கொண்டனர் என்று கூறுவதற்குச் சான்று இன்று. ஆதலின் தொல்காப்பியத்தில் கூறப்படும் வாழ்வியல் முறை முழுவதும் தமிழருடையதே எனக் கொள்ளுதல் பொருந்தும்.

சங்க இலக்கியங்கள் என்பனவற்றுள் பெரும்பாலன தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டனவே. தமிழை வளர்க்கச் சங்கம் தோன்றியதே தொல்காப்பியத்திற்குப் பின்னர்தான் என்பதில் ஐயமின்று.

மொழியைப் பேணிப் புரந்து வளர்ப்பதற்கெனப் புலவர்கள் கழகம் அமைத்த சீர்மிகு செயல் உலகிலேயே தமிழகத்தில்தான் முதன் முதல் நிகழ்ந்துள்ளது. அந்நிகழ்ச்சியும் கிருத்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டுள்ளது.

கழகப் புலவர்களும் பிறரும் இயற்றிய பாடல்களையே பிற்காலத்தார் பொருள்பற்றியும், பாவகை பற்றியும், அடிகள் பற்றியும் பல பிரிவுகளாகத் தொகுத்தனர். இவ்வாறு தொகுக்கப்பட்டவைகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இரு பிரிவினுள் அடங்கியுள்ளன.

எட்டுத்தொகை என்பதனுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை அடங்கும்.

பத்துப்பாட்டு என்பதனுள் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை,

பெரும்பாணாற்றுப் படை, முல்லை பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, பட்டினப்பாலை, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம் என்பன உள.

இவ்விருவகைப்பட்ட தொகை நூல்களே சங்க இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை களின் காலம் தொல்காப்பியத்திற்குப் பின்னரும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னருமாகும். இக்காலத்தில் வடமொழி நூல்களைத் தமிழ்ப் புலவர் கள் கற்றிருந்தார்கள். ஆனால் வடவர் பண்பாடு தமிழகத்தில் வேர் கொள்ளவில்லை.

சிலப்பதிகாரம், மணிமேகலை எனப்படும் இரட் டைக் காப்பியங்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண் டுக்கு உரியன. இக்காலத்தில் தென்னவர் நாகரிக மும் வடவர் நாகரிகமும் ஒன்றோடொன்று இணைந் தும் முரணியும் வாழத் தொடங்கின.

இவைகளை அடுத்துத் தோன்றியனவே பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் அறநூல்கள். இவைகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை என்னலாம். வட நாட்டிலிருந்துவந்தசமண புத்த சமயங்களின் செல் வாக்கை இவை எடுத்துக் காட்டும்.

சங்க இலக்கியங்களோடு ஒப்பிடுமிடத்து இவை களின் பாடல்கள் குறைந்த அடிகளைப் பெற்றிருந் தமையால் இவைகளைக் கீழ்க்கணக்கு என்றும், சங்க இலக்கியங்களை மேற்கணக்கு என்றும் பிறகாலத் தார் அழைத்தனர் என்ப. இங்குக் 'கணக்கு' என்னும் சொல் 'நூல்' என்னும் பொருளைத் தரும்.

திருக்குறளையும் அடிபற்றி இக்கீழ்க்கணக்குள் அடக்குவர். கீழ்க்கணக்கு நூல்கள் யாவை எனத் தொகுத்துக் கூறும் வெண்பாவினுள் முப்பால்* என்று குறிக்கப்பெறுவது திருக்குறளே என்பர்.

திருக்குறள் இரண்டடிகளையுடைய குறட்பாவினால் ஆக்கப்பட்டிருந்த போதிலும், பலவகையாலும் தனியாக மதித்து ஆராயப்பெறும் சிறப்பினையுடையது. திருக்குறளின் காலம் கி. மு. 31 எனக் கொண்டு இன்று அதன் ஆசிரியர் திருவள்ளுவர் பெயரால் ஆண்டு ஒன்று கொள்ளப்பட்டு வருகின்றது. திருக்குறளின் காலத்தைத் தொல்காப்பியத்தின் காலமாம் கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கும் கி. மு. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகக் கொண்டு சங்க இலக்கியங்களுள் ஒன்றாகத் திருக்குறளைக் கொள்வதே சால்புடைத்தாகும்.

அறநூல்களாம் கீழ்க்கணக்கை அடுத்துத் தோன்றியன தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலியனவாம். இவைகள் கடவுள் அன்பை வெளிப்படுத்திப் பாடப்பட்டுள்ளமையால் கடவுள் அன்பு நூல்கள் என்று அழைக்கத் தக்கன. இவைகளின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிய உள்ளதாகும்.

பின்னர் வடமொழியைத் தழுவியும் தழுவாமலும் காதை நூல்கள் தோன்றின. பெரியபுராணம், கம்பராமாயணம் போன்றனவே இவை. இக்காலம்

---

* நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

கி. பி. பத்தாம் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு முடியவாகும்.

சமய மெய்ந்நெறி நூல்கள் சிறப்புறத் தோன்றிய காலம் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டும் பதிஞன்காம் நூற்றுண்டும் ஆகுமெனக் கொள்ளலாம்.

பதினைந்து, பதிறுறு, பதினேழாம் நூற்றுண்டுகளைச் சிற்றிலக்கியங்கள் செழித்த காலம் எனலாம்.

பதினெட்டு, பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளைச் சீர்திருத்த காலம் என்று கொள்ளலாம்.

இம்முறையில் இலக்கியங்களின் துணைகொண்டு தமிழர் வாழ்வியலை ஆராய்வது நம் குறிக்கோளாகும்.

தொல்காப்பியம் சங்க காலத்திற்கு முற்பட்டதாயினும் சங்க இலக்கியங்களுள் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலப் பாடல்களும் சேர்ந்துள்ளமையாலும், தொல்காப்பியர் கால வாழ்வியலும் சங்க இலக்கிய கால வாழ்வியலும் பெரும்பான்மையும் வேறுபாடற்ற நிலையில் உள்ளமையாலும் இரண்டையும் ஒன்றுக இணைத்து "இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் — சங்க காலம்" என்ற தலைப்பில் இந்நூல் சுருங்கிய அளவில் தோன்றியுள்ளது.

நாட்டுப்பற்றும் ஒருமைப்பாடும் மக்களிடையே காழ்கொள்ள இந்நூல் பெரிதும் துணை செய்யும். பழங்காலத்தை அறிந்து நிகழ்காலத்தைக் கண்டு வருங்காலத்தை எண்ணித் திட்டமிடும் நாடே உலகில் சிறந்தோங்க முடியும். தம் பழமையை

யறியாதார், அறிந்து போற்ருதார் விலங்கு நிலையில் தான் வாழ முடியும். விலங்கு நிலையினின்றும் உயர்ந்து வாழ விரும்பும் மக்களினம் தம்முன்ஞேர் பற்றி அறிந்து மேலும் மேலும் சிறந்து வாழ முற்படுதல் வேண்டும். இன்றேல் தேங்கிய குளநீர்போல் பாழ்பட்டு அவ்வினம் அழிவுறவேண்டிய இழிநிலை தோன்றும். ஆதலின் பழம் நிலை அறிந்து புது நிலைக்குச் செல்வோம். புத்துலகம் காண்போம்.

# 2. நாடும் நகரங்களும்

இயற்கையெல்லைகளால் பிரிக்கப்பட்டுத் தமக்கென ஒரு மொழியைக் கொண்டு மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியை 'நாடு' என்று அழைத்தனர் தமிழக முன்னோர். அப்பகுதி அங்கு வழங்கும் மொழியால் வேறுபடுத்தி அழைக்கப்பட்டது. 'தமிழ்' வழங்கும் பகுதி 'தமிழ்நாடு' என்று குறிப்பிடப்பட்டது. இவ்வாறு மொழியை யடுத்தே நாடுகள் பெயரிடப்பட்டுள்ளமை உலகெங்கும் காணலாம். 'தமிழ் நாடு' 'தமிழகம்' எனவும், 'தமிழ் கூறும் நல்லுலகம்' எனவும் சுட்டப்பட்டுள்ளது. 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்ற பெயரால் பண்டைத் தமிழர்களின் உலகக் கண்ணோட்டத்தை உணரலாகும்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டின் வட எல்லை திருவேங்கடமலையாகவும், தென் எல்லை குமரியாகவும், கிழக்கிலும் மேற்கிலும் எல்லைகள் கடல்களாகவும் இருந்துள்ளன என்பது பனம்பாரனார் பாயிரத்தால் அறியலாகும். தெற்கிலிருந்த குமரி என்பது கடலா, மலையா, நாடா, முனையா என்பது நன்கு தெளியப்படாமல் உள்ளது. சங்க காலம் முடிய - கி. பி. முதல் நூற்றாண்டுவரை-தமிழ் நாட்டின் எல்லைகள் இவைகளே.

ஆனால் மிகப் பழங்காலத்தில் இமயம் முதல் குமரிவரைத் தமிழகமாகவே இருந்தது என்பது மொழியாராய்ச்சியாலும் வரலாற்று ஆராய்ச்சியாலும் நிலைநாட்டப்படும் உண்மையாக உள்ளது.

மண்ணிற் புதையுண்டு மறைந்த 'ஆரப்பா' 'மொகஞ்சதரா' நகரங்களில் வழங்கிய மொழி 'தமிழே' என்று தந்தை ஈராசு அவர்கள் நிறுவியுள்ளமையும் இவ்வுண்மையை வலியுறுத்தும். புறநானூற்றில்,

"தென்குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லை
குன்று மலை காடு நாடு
ஒன்று பட்டு வழி மொழியக்
கொடிது கடிந்து கோல் திருத்திப்
படுவ துண்டு பகலாற்றி
இனிது ருண்ட சுடர் நேமி
முழு தாண்டோர் வழி காவல." (புறம்-17)

எனக் குறுங்கோழியூர் கிழாரும்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்.

* * *

உருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல ஒருதிறம்
பற்றலி லியரோ நிற்றிறம் சிறக்க." (புறம்-6)

எனக் காரிகிழாரும், மதுரைக் காஞ்சியில்

"தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப" வரி (70-72)

என மாங்குடி மருதனாரும் கூறுவதனால் தமிழரசராட்சியின் கீழ்ப் பரதகண்ட முழுவதும் ஒரு காலத்தில் தங்கித் தழைத்தது என்ற உண்மை வெளிப்படுகின்றது.

தமிழர்கள் (திராவிடர்கள்) வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் என்றும் ஆரியர்களால் வட இந்தியாவிலிருந்து தெற்கே துரத்தப்பட்டவர்கள் என்றும் வரலாற்றாசிரியர் சிலர் கூறியிருக்கும் கூற்று பிழைபட்டது என்று இன்று தெளிவாகின்றது. உலகில் முதன் முதல் மக்கள் தோன்றியதே தமிழகத்தில்தான் என்றும் இங்கிருந்தே மக்கள் வெளியிடங்களுக்குச் சென்றனர் என்றும் புதைபொருள் ஆராய்ச்சியாளரும் வரலாற்று ஆசிரியரும் பூவியல் அறிஞரும் சான்று காட்டி நிறுவுகின்றனர். ஆதலின் ஒரு காலத்தில் இமயமுதல் பூமையக்கோட்டை யடுத்து இருந்த குமரிக் கடல்வரைத் தமிழகம் பரவியிருந்தது என்பதும், வடக்கே ஆரியத்தின் வரவாலும் தெற்கே கடல் கோளாலும் தமிழ் வழங்கும் பகுதி சுருங்கியது என்பதும் நினைவிற்கொள்ளற்பாலன.

தொல்காப்பியர் காலத் தமிழ் நாடு சேரர் சோழர் பாண்டியர் எனும் முக்குலத்தினரால் ஆளப்பட்டு அம் மூவர் பெயரால் சேர நாடு, சோழ நாடு, பாண்டியநாடு என அழைக்கப்பட்டு வந்துள்ளது. கொங்குநாடு என்ற பிரிவோ தொண்டை மண்டிலம் என்ற நாடோ அன்று தோன்றிலது. வடவேங்கடத்திற்குத் தெற்கே கன்னட நாடும் துளு நாடும் தோன்றில. பிற்காலத்தில் மலையாள நாடு என்று

அழைக்கப்பட்டது அன்று சேரநாடு எனும் பெய ரோடு தமிழ் நாடாகவே இருந்தது.

இம் முப்பெரு நாடுகளும் பன்னிரண்டு நிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன என்பதும் அப்பகுதிகளில் செந்தமிழே மொழியாக வழங்கியது என்பதும் தொல்காப்பிய நூற்பா ஒன்றால்* அறிய லாகும். ஆட்சி முறையால் மூன்று நாடுகளாக இருந்தபோதிலும், மொழியாலும் பண்பாட்டாலும் தமிழகம் ஒரே நாடாகத்தான் கருதப்பட்டு வந் துள்ளது. முழு உரிமை வாய்ந்த தனி நாடாக இருந்தபோதிலும் உலகின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது.

“வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்” என்று பனம்பாரனார் கூறுவது காண்க. புலவர்கள் நில இயற்கை வகையால் முல்லை குறிஞ்சி, மருதம், நெய்தல் எனத் தமிழகத்தை நான்கு வகையாகப் பிரித்தனர். தமிழகத்தை நான்கு நிலமாகக்கொண்டு ஆராய்ந்த கண்ணோட்டத் துடன் உலகத்தையும் நோக்கினர். ஆதலின் உல கத்தை “நானிலம்” என அழைத்தனர்.

காடும் காடு சார்ந்த இடத்தை முல்லை என்றும், மலையும் மலைசார்ந்த இடத்தைக் குறிஞ்சி என்றும், வயலும் வயல் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் அழைத்தனர்.

பாலை நிலம் அன்று தோன்றப் பெறவில்லை போலும். அன்றியும் பாலை என்பது செயற்கையால்

*“செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்” (தொல். எச்சம்-4)

உண்டாகி மீண்டும் மக்கள் உழைப்பால் மறையக் கூடிய இயல்பினது. ஆதலின் தமிழர், நிலத்த பிரிவினுள் ஒன்றாக அதனைக் கருதிலர் என்று கொள்ளலாம்.

ஒரு நாடு எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதனைச் சங்ககாலத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். 'நாடு' என்னும் சொல்லுக்கு 'விரும்பு,' 'தேடியடை' என்னும் பொருள்கள் உள. ஆதலின் மக்கள் விரும்புவதற்குரிய இடம், தேடிவந்து தங்குவதற்குரிய இடம் எதுவோ அதுவே நாடாகும். வளமற்ற வறண்ட வெற்றிடம் நாடாகும் தகுதியினையுடையது ஆகாது. அக்கால மெய்யுணர்வாளரும் அரசியல் அறிஞருமான வள்ளுவர் பெருமான் 'நாடு' என்பது எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று கூறுவது எக்காலத்துக்கும் எல்லா நாடுகட்கும் மிகவும் பொருந்துவதாகும். அவர் கூறியுள்ளதாவது:

நாடு என்பது மக்களுக்கு வேண்டியனவற்றையெல்லாம் தன்பால் பெற்றிருக்க வேண்டும்; அங்ஙனமின்றிப் பிறநாடுகளின் உதவியை என்றும் நாடிக்கொண்டிருக்கும் நாடு நாடாகாது.

அது பெருஞ் செல்வமுடைமையால் பிறநாட்டு மக்களாலும் விரும்பத் தக்க சிறப்பினதாய் இருத்தல் வேண்டும்.

எவ்விதக் கேடுமின்றி நன்றாக விளையக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

பிறநாட்டு மக்கள் புகலிடம் தேடி வந்த காலத்தில் அவர்களை ஏற்றுப் புரந்து அரசுக்கு வேண்டும் இறைப் பொருள் முழுவதையும் உளம் ஒத்துக் கொடுக்க வேண்டும்.

பகைவராலும் இயற்கையாலும் உண்டாகும் கேடுகள் அற்றும், கேடுகள் உண்டான போதும் செல்வம் குறையாத நிலையிலும் உள்ளதே சிறந்த நாடாகும்.

பெரிய நீர் நிலைகளும், மலைகளும், ஆறுகளும், உறுதிவாய்ந்த அரண்களும் நாட்டுக்கு இன்றியமையாத உறுப்புக்களாகும்.

பிணி இன்மை, செல்வம், விளைபொருள்கள், இன்பம் நுகரும் வாய்ப்புகள், அச்சமின்றி வாழும் காவல் நிலை ஆகியவை நாட்டிற்கு அணிகளாகும்.

நாட்டு மக்களுக்கு வருத்தும் பசியும், நீங்காத பிணியும், அழிவை உண்டு பண்ணும் பகையும் இல்லாமல் வாழும் நாடே நாடாகும்.

நாட்டில் ஒன்றுக்கொன்று முரண்படும் பல குழுக்களும், நாட்டைக் கெடுக்கும் உட்பகையும், அரசுக்குத் தொல்லை தரும் கொல்வினைக் குறும்பரும் இருத்தல் கூடாது.

நாட்டில் என்றும் குறையாத விளைபொருள்களும், புதியன புனையத் தக்க அறிவியற் பெரியார்களும், நுகர்ச்சிப் பொருள்களில் குறைவற்றசெல்வர்களுமாக நிறைந்திருப்பதே நாடாகும்.

எல்லாவற்றாலும் சிறந்து, நல்லாட்சியை உடையதாகவும் நாடு இருத்தல் வேண்டும். இல்லையேல் பயனற்றதாகும்.

இவ்வாறு திருவள்ளுவர் கூறியுள்ள குறிக்கோளுக்கு ஏற்ப நாட்டை அமைக்க மக்களும் மன்னனும் முயன்று உழைத்தனர்.

மக்களுக்கும் மன்னருக்கும் நாட்டுப்பற்று என்பது கருவிலே வாய்ந்த திருவாக இலங்கியது. மக்கள் அனைவரும் அவரவர் கடமையை நன்கு ஆற்றி நாட்டைப் புரத்தலே அவர் தம் தலையாய பணியெனக் கருதினர். குழந்தைகளைப் பெற்று நன்கு வளர்த்தலே தன் கடமையென அன்னை எண்ணினாள். எல்லா நற்குணங்களாலும் நிறைந்த பெரியோராக்குதல் தன் கடன் எனத் தந்தை நினைத்தான். படைக்கலன்களைப் படைத்துக் கொடுத்தல் தன் பங்கு எனக் கொல்லன் குறிக்கொண்டான். நல்லொழுக்கமுடையோராய் வாழச் செய்தல் தன் முறைமை என அரசன் கருதினான். போர்க்களத்தில் களிறுகளை வெட்டிவீழ்த்திப் பகைவரை வெல்லுதல் தனக்குரிய செயல் எனக் காளை போன்ற இளைஞர் உளங்கொண்டு வாழ்ந்தனர். பொன்முடியார் எனும் நல்லிசைப் புலமை மெல்லியலார் கூறுகின்றார் :

" ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

(புறம்-312)

இதனால் அறிவதென்ன ? மக்கள் நன்றாக வளர்க்கப்படுதலும், சான்றோர் ஆகஆக்கப்படுதலும், உயர்ந்த ஒழுக்கமுடையவராய்வாழ்தலும், படைக்கலப்பயிற்சி பெறுதலும் காளை போன்று கட்டிளமை குன்றாது இருத்தலும் நாட்டின்உரிமையைக் காப்பதற்காகவே என்று ஒவ்வொருவரும் கருதி வாழ்ந்தனர் என்

பதன்றோ அறிய இயலுகின்றது. நாட்டுப்பற்று என்பது நாட்டின் உரிமையைக் காப்பதற்காக வாழ்வது தானே? அருள் உளங்கொண்ட அன்னையர்கள் தம் அருமை மக்களை நாட்டுக்காகவே வளர்த்தனர் என்பதனையும் மக்களும் நாட்டின் நலங்கருதியே வாழ்ந்தனர் என்பதனையும் சங்க இலக்கியப் பாடங்களிற் பல நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

மக்களை ஆண்ட மணிமுடி மன்னரும் நாட்டின் நல்லுரிமையைக் காப்பதற்காகவே வாழ்ந்தனர்.

> "என்நிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
> கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றும் கோலே னாகுக;
> ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
> புலவர் பாடாது வரைக என் நிலவரை" (புறம்-72)

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினத்தால் மக்களும் புலவரும் மதிக்கவும் போற்றவும் நாட்டை நன் முறையில் ஆளுதலே மன்னன் தன்கடமையாகக் கொண்டிருந்தான் என்று வெளிப்படுகிறதன்றோ? குடிபழி தூற்றுதலும், புலவர் பாடாது நீங்குதலும் நிகழ்தல் கூடாது என்று அரசன் ஆட்சி செலுத்துதலில் மக்களாட்சித் தன்மையும் நாட்டுப் பற்றும் பொருந்தியுள்ளன அன்றோ?

இவ்வாறு ஆளப்பட்ட நாட்டில் விளைபொருள் மிக்கு உள் நாட்டு வாணிபமும் வெளிநாட்டுவாணிபமும் நன்கு சிறந்து மக்கள் வாழ்வு உயர்ந்துஇன்பம்

நிறைந்து விளங்கியது. நாடு எவரும் நாடி வந்து தங்கி வாழும் நல்லின்ப நாடாகவே திகழ்ந்தது. இதனைப் பிசிராந்தையார் கூற்றால் நன்கு தெளியலாகும்.

பாண்டி நாட்டில் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்தவர் ஆந்தையார் என்னும் தமிழ்ப் பெரும் புலவர் அவர் மூப்படைந்தும் நரையற்று இளைஞர் போன்றே தோன்றினார். அவ்வாறு என்றும் இளைஞராகவே தோன்றுவதற்குரிய காரணம் யாது எனப் பலரும் வினவினர்.

"இல்லறத்திற்கேற்ற மாட்சிமை பொருந்திய மனையாளைக் கொண்டுள்ளேன். மனைமாட்சியின் நல்லணியெனத் தகும் நன்மக்களை நிறையப் பெற்றுள்ளேன். குறிப்பறிந்து பணி செய்யும் ஏவலர்கள் எனக்குளர். என்னுட்டரசன் என் உளம் வருத்தும் செயல்களை ஒரு நாளும் செய்திலன்; எவ்வகைத் துன்பமும் மக்கள் எய்தாவாறு காத்து வருகின்றான். இவற்றிற்கெல்லாம் மேலாக நற்குணங்களால் நிறைந்து அடங்கி வாழும் பெரியோர்கள் பலர் என்னூரில் வாழ்கின்றனர். ஆகவே யான் உளமெலிவின்றி நல்லின்ப வாழ்வு கொண்டு நரைதிரையற்று விளங்குகின்றேன்" என்று தம்மை வினவியோருக்கெல்லாம் விடையிறுத்தார்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே". (புறம்-191)

தமிழ் நாட்டு ஊர்கள் எல்லாம் இவ்வாறே சிறந்து விளங்கின. வீட்டின் ஏற்றத்தாலும், நல்லாட்சியாலும், சான்ருேர் கூட்டுறவாலும் நீண்ட நாள் இளமை குன்ருது மக்கள் வாழ்ந்த நாட்டின் மாண்பு தான் என்னே!

# 3. நகரங்கள்

நாட்டுக்கு அணிகலன்கள் நகரங்களே. நகரங்கள் ஒரே நாளில் தோன்றிவிடா. விளைபொருள் மிகுதியாலும் கைத்தொழிற் சிறப்பாலும் கோயில்கள் அமைவதாலும் கப்பல் போக்குவரத்துக்குரிய வசதியாலும் வாணிபப் பெருக்காலும் தலைநகராகும் பேறு உண்டாவதனாலும் சிற்றூர்கள் பேரூர்களாக வளர்ச்சி பெற்று நகரங்கள் என அழைக்கப்பெறும். வளங்கொழிக்கும் பெரிய மாளிகையைக் குறிக்கும் 'நகர்' என்னும் சொல்லே 'நகரம்' என்பதன் அடியாகும். 'நகரம்' என்பது எவ்வாறு இருக்கும் என்பதை இச்சொல்லின் அடிச்சொல்லே நன்கு விளக்கும். பெரிய மாட மாளிகைகள் நிறைந்த இடமே நகரம் ஆகும் என்று அடிச்சொல் அறிவியா நிற்கின்றது.

பண்டைத் தமிழகத்தில் பல நகரங்கள் தோன்றி வளமுற வாழ்ந்துள்ளன. அவற்றுள் சில இன்னும் அன்று பெற்றிருந்த பெருமை குன்றாமல் இருந்து வருகின்றன.

நகரங்களைப் பற்றிய வரலாறு நமக்கு இன்று கிடைத்திலது. சங்க இலக்கியங்களில் பெண்களின்

அழகைச் சிறப்பிக்குமிடத்து, பெண்களை நகரத்திற்கு ஒப்பிட்டுக் கூறும் மரபு கையாளப்படும் பொழுதும், நாட்டு வளங்களைக் கூறுங்கால் துறைமுகப் பட்டினங்களைக் கூறுமிடத்தும், போர்களைக் குறிப்பிடுமிடத்தும், கலைஞர்களை ஆற்றுப் படுத்தும்போது இடைவழியில் வரும் நகரங்களைச் சுட்டிக் கூறும் பொழுதும் நகரங்கள் பற்றி நவிலப்படுகின்றன.

அக்காலப் புலவர்கள் மகளிர் அழகை நகரத்தோடு ஒப்பிட்டுக் கூறும் மரபை மேற்கொண்டுள்ளது புதுமை மிகு செயலாகும்.[1] எம்மொழியிலும் எப்புலவரும் இம்மரபைக் கையாண்டிலர். தமிழ்ப் புலவர்கள் தம் காலத்துச் சிறந்த நகரங்களை மகளிர் நலனுடன் ஒப்பிட்டதனுல், மகளிர் அழகினை விரும்பிப் போற்றியதுபோல் நகர் அழகினையும் விரும்பிப் போற்றினர் என்பது பெறப்படுகின்றது. அன்றியும் மகளிர் அழகு அவர்கள் காதலர்க்கே துய்த்தற்கு உரியது. ஏனையர்க்கு உரியதன்று. பிறர் அதனை அடைவதற்குரிய அருமைப்பாடு போன்று நகரங்களையும் மாற்ருர் அடைய இயலாது எனும் கருத்தையும் வெளிப்படுத்தினர். நகரை அழகு படுத்துதல் வேண்டும் என்ற கருத்தும் தம் நாட்டு மக்களே அதன் பயனைத் துய்த்தல் வேண்டும் என்ற நோக்கும் சங்க கால மக்களுக்குப் புதியன அல்ல என்பது தெளிவாகின்றது.

அன்று நாட்டின் தலைநகரங்கள் மிகச் சிறப்புற்று விளங்கின. சேர நாட்டுக்கு வஞ்சியும் சோழ நாட்டுக்கு உறையூரும் பாண்டிய நாட்டுக்குக் கூடலும் தலைநகரங்களாய் இலங்கின. ஒவ்வொரு

1. அகம் 46-231.

நாட்டுக்கும் கடற்கரைத் துறைமுகங்களும் பெரும் சிறப்புற்றுத் தலைநகரங்கள் போல் அமைந்திருந்தன. சேர நாட்டுக்குத் தொண்டியும் சோழ நாட்டுக்குக் காவிரிப்பூம்பட்டினமும் பாண்டிய நாட்டுக்குக் கொற்கையும் புகழ் பெற்ற துறைமுகங்களாம்.

தலைநகரங்கள் எல்லாம் திட்டமிட்டு அமைக்கப் பட்டனவாய் அரண்மனை அல்லது கோயிலை மையமாகக் கொண்டு ஆறுபோன்று அகன்ற பெருந் தெருக்களைப் பெற்றுக் கோட்டையும் அகழியும் கொண்டு கவினுற்று இலங்கின.

**“ மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்**
**விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை**
**தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை**
**நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்**
**மழையாடு மலையின் நிவந்த மாடமொடு”[1]**

நகரங்கள், பல்வேறு குழூஉக்கொடி பெருவரை மருங்கின் அருவியினைப் போன்று நுடங்க, பல்வேறு குழாஅத்து இசையெழுந்து ஒலிப்ப உயர்ந்தோங்கி நின்றன.

தமிழ் நாட்டுத் தலைநகரங்கள் மூன்றும் ஆற்றோரங்களிலேயே அமைந்திருத்தல் குறிப்பிடத் தகுந்தது. வஞ்சிமாநகர் பேரியாற்றங் கரையிலும், உறந்தைமாநகர் காவிரியாற்றங்கரையிலும், கூடல் மாநகர் வையையாற்றங்கரையிலும் தோன்றியுள்ளமையும் உலகப் பெரு நகரங்கள் பல ஆற்றோரங்களிலேயே தோன்றியுள்ளமையும் உலக நாகரிகத் தோற்றம் ஆறுகளையே சார்ந்துள்ளது என்னும்

1. மதுரைக்காஞ்சி 351-356.

கூற்றுக்கு அரண் செய்து, தமிழ் நாட்டுத் தலைநகரங்களின் பழமையை நிலை நாட்டுகின்றன. ஆண்மைக்கு வஞ்சியும் அறத்திற்கு உறந்தையும் தமிழுக்கு மதுரையும் தவாப்பெருஞ்சிறப்புடையன எனப் புலவர் பாராட்டுவர். இவைகள் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு இருப்பிடமாக இனிதே பொருந்தி இனிய பல இலக்கியங்களையும் பெற்றுள்ளன.

இம்முப்பெரு நகரங்களிலும் தமிழ் நிலைபெற்ற மதுரைதான் இன்றும் தன் தொன்மைச் சிறப்போடு தொடர்பு கொண்டு மீண்டும் தன் பண்டைப் பெருநிலையடையும் முயற்சிப் போரில் முனைந்து நிற்கின்றது. சேரர் தலைநகர் சிற்றூராய்த் தமிழின் தொடர்பற்று விட்டது. சோழர் தலைநகர் திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியாய் உறைகின்றது.

தலைநகரங்களும் பிற ஊர்களும் புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தனவற்றுள் பல இன்றும் பழம் பெயர்களுடனேயே இருக்கின்றன. சில பெயர்கள் சிதைந்தும் சில பெயர்கள் வடமொழியாக்கப்பட்டும் உள்ளன. பெருநகர்கள் சில சிற்றூர்களாகவும் சிற்றூர்கள் சில பெருநகரங்களாகவும் மாறுதல் உற்றுள்ளன. மேனாடுகளில் உள்ள ஊர்களின் பெயர்கள் எல்லாம் விரைவில் மாற்றம் அடைந்துவரும் நிலையில் அங்குச் சூழ்நிலைகள் உருவாகி விட்டன. ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட ஊர்கள் மிகச்சிலவேதாம் உள்ளனவாம். இருப்பனவும்முற்றிலும்மாறுபட்டுள்ளனவாம்.

இங்கு அவ்வாறு இல்லாமல் பெரும்பாலான ஊர்கள் இன்றும் உள்ளமை நமது நாட்டின் நற்பேறே ஆகும். இவற்றுட் பல இருக்குமிடம் தெரியாமலே இருந்து வருகின்றன. இவைகளுட் சில அன்று பிளினி போன்ற மேனாட்டு ஆசிரியர்களால் அறியப்பட்டு அவர்தம் நூலுள் குறிப்பிடப்படும் புகழை அடைந்துள்ளன.

# 4. மக்கள்

நாடு மக்களால் உருவாகியது. மக்களே நாட்டின் செல்வம். மக்களின்றேல் நாடு ஏது? மக்களின் சிறப்பே நாட்டின் சிறப்பு.

மக்களிடையே இன்று பல வேற்றுமைகள் உள். இவ்வேற்றுமைகளுள் மக்களை அல்லலுக்கு ஆளாக்குவன சாதியும் மதமும் ஆகும். அன்று தமிழ் மக்களிடையே சாதி வேறுபாடுகள் தோன்றில. 'சாதி' என்னும் சொல்லே தமிழ்ச் சொல் அன்று. இதனுல் 'சாதி' பற்றிய பிரிவு தமிழகத்துக்குப் புறம்பானது என்று தெளியலாகும்.

மக்களிடையே சமய வாழ்வு காழ்கொண்டிருந்தது. ஆனுல் சமயம் காரணமாகப் போரிட்டோர் இலர்.

மக்கள், அவர்கள் வாழும் திணை நிலங்களுக்கேற்ப அழைக்கப்பட்டனர். முல்லை நிலங்களில் வாழ்ந்தோர் ஆயர் என்றும், குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்தோர் குன்றவர் என்றும், மருத நிலங்களில் வாழ்ந்தோர் உழவர் என்றும், நெய்தல் நிலங்களில் வாழ்ந்தோர் பரதவர் என்றும் கூறப்பட்டனர்.

இவற்றுள் 'ஆயர்' என்பதும் 'பரதவர்' என்பதும் இன்றும் சாதிப் பெயர்களாக நிலைத்துள்ளன.

சூழ்நிலைக்கேற்ப மக்கள்வாழ்வு அமைதல் இயல்பாதலின் திணைகளுக்கேற்ப மக்கள் வாழ்வு முறைகளிலும் மாற்றங்கள் இருந்தன. ஆனால் அம்மாற்றங்கள் உயர்வு தாழ்வு எனும் வேறுபாட்டுணர்வைத் தோற்றுவித்து மக்களை அலைக்கழித்தில. பிறப்பாலும் தொழிலாலும் உயர்வு தாழ்வு தோன்றப்பெறாது தத்தம் ஆற்றலுக்கேற்ப உழைத்து, உண்டு, உடுத்து, உறங்கி, மகிழ்ந்து வாழ்ந்தனர்.

முல்லை நில மக்கள் கடவுளை மாயோன் என்று அழைத்து வழிபட்டனர்; வரகு, சாமை, முதிரை ஆயவற்றை உணவுப் பொருளாகக் கொண்டனர்; ஆடு மாடு மேய்த்தலும் வளர்த்தலும் தமக்கு வேண்டிய உணவுப் பொருளை விளைவித்தலையும் தொழிலாகக் கொண்டனர். ஏறுதழுவுதலை விளையாட்டுப் பொழுது போக்காகப் பெற்றிருந்தனர். அது பின்னர் மணவினைக்குந் துணை புரிந்தது. இசைத்துறையிலும் புலமை கொண்டு தமக்கென ஒரு பண்ணை உருவாக்கிக் கொண்டனர். அது முல்லைப் பண் என்றே அழைக்கப்பட்டது. அவர்கள் இசைக்கருவி முல்லை யாழ் எனப்பட்டது. அவர்கட்கு அப்பகுதியில் உள்ள உழை, புல்வாய், முயல் முதலிய விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. கான்யாற்றில் குளித்தனர்; முல்லை, பிடா, தளா முதலியவற்றின் பூக்களைச் சூடிக்கொண்டனர். அவர்கள் வாழ்ந்த ஊர்கள் பாடி, சேரி, பள்ளி என்று கூறப்பட்டன. ஆங்கெல்லாம் குருந்தியும், கொன்றையும்

வளர்ந்தோங்கின. கானக்கோழியும் சிவலும் வளர்ந்தன. ஏறுகோட்பறை எங்கும் முழங்கின.

ஆடு மாடுகளே அவர்களுடைய செல்வங்கள். அவைகளால் பெறும் பால், தயிர், மோர், வெண்ணெய் முதலியவற்றைப் பிற பகுதிகட்குக்கொண்டு சென்று விற்றனர்; அப்பகுதிகளிலிருந்து தமக்கு வேண்டியவற்றைப் பண்டமாற்று முறையில் பெற்றனர். ஆடவர்கள் ஆடு மாடுகளை மேய்த்து வளர்த்தலில் ஈடுபட்டிருந்தனர். மகளிர், பால், தயிர், முதலியவற்றைப் பிற இடங்கட்குக் கொண்டு சென்று விற்று வேண்டும் பொருளைப் பெற்று வந்தனர். பசும் பொன்னைக் கட்டி கட்டியாகக் கொடுத்தாலும் அதனைப் பெருமல் தமக்குரிய செல்வமாம் பால் எருமையினையும் கரிய நாகினையுமே பெற்று வந்தார்களாம்.

அளை விலையிற் பெற்ற பொருளால் தாமும் உண்டு, கிளைஞரையும் அருத்தித் தம்இல் தேடிவந்தவர்களுக்குப் பசுந்தினைச் சோறு பாலுடன் அளித்து முல்லை நில மக்கள் வாழ்ந்தனர்.

குறிஞ்சி நில மக்கள் கடவுளைச் சேயோன் என்று அழைத்து வழிபட்டனர்; ஐவனநெல், தினை, மூங்கிலரிசி முதலியவற்றைஉணவுப் பொருளாகக் கொண்டிருந்தனர். தமக்குரிய உணவுப் பொருளை விளைவித்தலையும் தேன் எடுத்தலையும் கிழங்கு அகழ்தலையும் தமக்குரிய தொழிலாகக் கொண்டிருந்தனர். இசைத்துறையிலும் சிறந்து தமக்கு விருப்பமான பண்ணுக்குக் குறிஞ்சிப்பண் என்று பெயரிட்டனர்.

அப்பண்ணை மீட்டும் யாழுக்குக் குறிஞ்சி யாழ் என்ற பெயர் உண்டானது.

அருவியிலும் சுனையிலும் குளித்தனர் ; காந்தள் வேங்கை, சுனைக்குவளை முதலிய பூக்களைச் சூடி மகிழ்ந்தனர்.

அவர்கள் வாழ்ந்த ஊர்கள் சிறுகுடி என்றும் குறிச்சி என்றும் கூறப்பட்டன. ஆங்கெல்லாம் ஆரமும், தேக்கும், திமிசும், வேங்கையும் வளர்ந்தோங்கின. கிளியும் மயிலும் வளர்ந்தன. முருகியமும் தொண்டகப் பறையும் முழங்கின.

குன்றில் வாழ்ந்தமையால் குன்றவர் எனப்பட்டனர். குன்றவர் என்ற சொல்லே காலப் போக்கில் குறவர் என்று உருப்பெற்றது.

முதன் முதல் மக்கள் தோன்றிய இடம் மலையுச்சியே என்பர். ஆகவே இங்கு மக்கள், விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்து நாளடைவில் விலங்கு வாழ்வினின்றும் வேறுபட்ட நாகரிக வாழ்வைத் தொடங்கிய இடமும் குறிஞ்சி நிலப் பகுதியே எனலாம். மூங்கில்கள் உரைசுவதால் நெருப்பு உண்டாவதைக்கண்டே, நெருப்பை உண்டாக்கிக்கொள்வதற்குத் தீக்கடைக்கோலைக் கண்டு பிடித்துக் கொண்டதும் இங்கேதான். தம்மோடு நெருங்கி உறைந்த கொடிய விலங்குகளை வேட்டையாடி அவைகளைக் கொன்று அவைகளினும்ஆற்றல் மிகுந்தோராக விளங்கத் தொடங்கியதும் இங்கேதான்.

சிறுமியர் தினைப்புனங் காத்தலும் ஆடவர் வேட்டையாடுதலும் உணவைத்தரும் பொழுது

போக்காக ஆயின. தினைப்புனம் காக்கும் இள மகளிரை வேட்டையாடும் ஆடவர் கண்டு காதலிப்பதும், பின்னர் பல்வகை நிகழ்ச்சிகளால் காதல் கடிமணத்தில் நிறைவேறுவதும் குறிஞ்சி நிலத்திற்குரிய சிறப்பு நிகழ்ச்சிகளாக இலக்கியங்களில் இடம் பெற்றன.

மருத நிலத்தில் வாழ்ந்தோர்கடவுளை வேந்தன் என்று கூறி வழிப்பட்டனர்.வேந்தன் என்றால் விருப்பத்திற்குரியவன் என்று பொருள். 'வெம்' என்ற அடியிலிருந்து தோன்றிய சொல்லாகும். கடவுள் மக்கள் விருப்பத்திற்குரியவர் ஆதலின் அவ்வாறு அழைத்தனர் போலும். முதலில். அச்சொல் தம் நாட்டுத் தலைவராம் அரசரைக் குறித்தது. பின்னர் உலகத் தலைவராம் கடவுளுக்கும் அப்பெயரை இட்டுள்ளனர். இறை, கோ என்ற சொற்கள் அரசரையும் கடவுளையும் குறிக்கும் ஒற்றுமை காண்க.

மருதநிலம்தான் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாகும். உழுதொழில் சிறந்து உணவும் பிறவும் நிறையப் பெற்று ஓய்வும் வாய்க்கப் பெற்றவர்கள் மருத நிலத்தோரே.குடிகள் தழைத்துக் கோன் உயர்ந்து புலவர்கள் நிறைந்து கலையும்இலக்கியமும் கடவுள் வழிபாடும் விழாவும் இங்கே பல்கிப் பெருகின. வடமொழியாளர் கூட்டுறவு ஏற்பட்ட பின்னர் வடமொழி நூல்களில் கூறப்பட்ட இந்திரனும், தமிழர்கள் போற்றிய வேந்தனும் ஒருவனே என்று கருதினர். பின்னர் இந்திரன் என்ற பெயர் தேவர்களுடைய தலைவனுக்குரியதாகிப் பல

கதைகள் தோன்றிக் கடவுளைக் குறிக்கும் பொருளை இழந்து விட்டது.

இந்நிலத்தோர் உணவுப் பொருளாகச் செந்நெல்லையும், வெண்ணெல்லையும் கொண்டனர். விலங்குகளாக ஆவும் எருமையும் பெற்றிருந்தனர்.

சிறப்பு மரங்களாக வஞ்சியும், காஞ்சியும், மருதமும் வளர்ந்தோங்கின. பறவைகளில் தாராவும், நீர்க்கோழியும் இங்குச் சிறப்புப் பெற்றன. மண முழவும் நெல்லரிகிணையும் இப்பகுதியினரின் சிறப்பு இயங்களாகும். இப்பகுதியினர் விரும்பிப் போற்றிய பண் மருதம் என்றே அழைக்கப்பட்டது. யாழும் மருதயாழ் என்ற பெயரைப் பெற்றது. இங்குள்ள மக்கள்தாம் உழுதொழிலையே சிறப்பாகச் செய்தனர்.

**" உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு".**

என்று உலகை நோக்கி ஓங்கி மொழிந்தனர். மக்கள் வாழும் பகுதிக்கு 'ஊர்' என்ற பெயர் இங்குத்தான் தோன்றியது. 'ஊர்' என்றால் 'குடியேறு' 'பரவு' என்னும் பொருளதாகும். மக்கள் விரும்பிக் குடியேறுவதற்குரிய பகுதியென்றும், சிறிது சிறிதாக விரிவடையும் பகுதியென்றும் பொருள் தரும்.

நீர் வளம் மிக்க பகுதி இதுதான். ஆறும் குளமும் கிணறும் எங்கும் மக்களைப் புறந்தூய்மை பெறச் செய்து அகத் தூய்மையுடன் வாழத் துணை புரிந்தன.

நெய்தல்நிலத்தோர் கடவுளை வண்ணன் என்று அழைத்தனர். அது பின்னர் வருணன் என்று ஆயது 'வண்ணம்' வருணம் என்று ஆனதுபோல. உலகிற்கு வடிவையும் நிறத்தையும் கொடுத்தவர் கடவுளேயாதலின் கடவுள் 'வண்ணன்' என்று அழைக்கப்பட்டார். பின்னர் வடமொழி நூல்களில் கூறப்பட்ட மழைக் கடவுளாம் வருணனும் தமிழ் நாட்டு வண்ணனும் ஒருவனாகக் கருதப்பட்டனர். வருணன் என்ற சொல் ஆட்சியில் நிலைத்துவிட்டது இங்கு வாழ்ந்தோர் நெடுங்கடலில் சென்று மீன் பிடித்தனர்; உணவுக்கு இன்றியமையாத உப்பு விளைவித்தனர். இவற்றை வெளியிடங்கட்குக் கொண்டுசென்று விற்று வாழ்ந்தனர். வெளியிடங் கட்குக் கொண்டு செல்வதற்குப் பகடுகள் பயன்பட்டன. வண்டிகளிலும் கொண்டு சென்றனர்.

'இரங்கல்' உணர்வை எழுப்பும் நெய்தல் பண்ணில் பற்றுக் கொண்டனர். அவர்கள் பெற்றிருந்த யாழும் நெய்தல் யாழ் எனும் பெயரைப் பெற்றது. மீன் பிடிப்பதற்குத் துணையாகப் பறைகளை முழக்கவும் அறிந்திருந்தனர். அப்பறை மீன் கோட்பறை என அழைக்கப்பட்டது.

புன்னை, ஞாழல், கண்டல் இங்கு மிகுதியாக வளர்ந்தன. அன்னமும் அன்றிலும் அவர்கள்விருப்பத்திற்குரிய பறவைகளாயின. கடலே வெளிநாட்டு வாணிபத்தைப் பெருக்குவதற்குத் துணை புரிந்தது. கடற்கரைகளில் வாணிபச் சிறப்பால் நகரங்களும் ஊர்களும் உண்டாயின. அவை பட்டினம் என்றும் பாக்கம் என்றும் அழைக்கப்பட்டன.

‘பாலை’ என்ற நிலப்பிரிவு பண்டு தமிழகத்தில் இருந்திலது. முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும்தட்ப வெப்ப மாறுபாடுகளால் வேறுபட்டுப் பாலை நிலமாக உருப்பெற்றன. அங்கு மக்கள் வாழ்தல் இயலாது. பிரிவுத் துன்பத்தை மிகுத்துக் காட்டுவதற்கு இலக்கியங்களில் ‘பாலை’த்திணையை அமைத்து அழகுறப் பாடுதல் உண்டு. அவ்வாறு பாடுங்கால் அந்நிலத்தைப்பற்றிய செய்திகளில் கொள்ளற் பாலனவற்றை உரையாசிரியர்கள் தொகுத்துக் கூறியுள்ளர்.

உணவு, ஆறலைத்தனவும் சூறை கொண்டன வும் என்றும்; மா, வலியழிந்த யானையும் புலியும் செந்நாயும் என்றும்; மரம், வற்றின இருப்பையும், ஞமையும், உழிஞையும், ஞெமையும் என்றும்; புள், கழுகும், பருந்தும், புறவும் என்றும்; பறை, சூறை கோட்பறையும் நிரை கோட்பறையும் என்றும்; தொழில், ஆறலைத்தலும் சூறை கோடலும் என்றும்; யாழ், பாலை யாழ் என்றும்; ஊர், பறந்தலை என்றும்; பூ, மராவும் குராவும் பாதிரியும் என்றும்; நீர், அறு நீர்க் கூவலும் சுனையும் என்றும் அவர்கள் கூறி யுள்ளனர்.

பாலை நிலத்திற்குரிய மக்கள் எயினர், எயிற் றியர், மறவர், மறத்தியர் எனவும், மீளி, விடலை, காளை எனவும் கூறப்படுவர்.

அவர்கட்குரிய தொழில் வழிப்பறி செய்தலும், கொள்ளையடித்தலும் என்று கூறுவது பொருத்த முடைத்தன்று. சூழ்நிலை காரணமாகச் சிலர் அத் தொழிலில் ஈடுபட்டிருந்திருக்கக் கூடும். ஆனல்

அவ்வாறு ஈடுபடுதலை நாட்டு மக்கள், குறிப்பிட்ட பகுதிக்குரிய தொழிலென ஏற்றுக்கொண்டார் என்று கூறுதல் இயலாது.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்" (குறள்-282)

என்று அறநெறி வகுத்த வள்ளுவர் வாழ்ந்த நாட்டில் ஒரு பகுதி மக்கட்கு "ஆறலைத்தலும் சூறை கோடலும் தொழில்கள்" என்று கூறுவது அடாது.

இனி இந்நால்வகை நிலத்துமக்களையும்இலக்கியங்களில் தலை மக்களாகக் கொண்டு பாடுங்கால், முல்லை நிலத்துக்குரியோர்க்கு அண்ணல்,தோன்றல், குறும் பொறை நாடன் என்றும், குறிஞ்சி நிலத்துக் குரியோர்க்கு வெற்பன், சிலம்பன், பொருப்பன் என்றும், மருத நிலத்துக்குரியோர்க்கு மகிழ்நன், ஊரன் என்றும், நெய்தல் நிலத்துக்குரியோர்க்கு கொண்கன், துறைவன், சேர்ப்பன், மெல்லபுலம்பன் என்றும் பெயர்கள் வழங்கியுள்ளன.

இங்குக் கூறப்பட்ட நாட்டுப்பிரிவும் மக்கட்பிரிவும் அவை பற்றிய செய்திகளும் கி. மு. பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்திற்குரியன. வழி வழியாக இலக்கியத்தில் கொள்ளப்பட்டு வந்தனவே யன்றி இவைதாம் அக்கால நிலைமை என்று கருதி விடுதல் கூடாது. சங்க காலத்தில் மிகவும் வளர்ச்சி யுற்ற மன்பதையே இருந்துளது. தொழில் வகையாலும் சிறப்பு வகையாலும் மக்களிடையே பல பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. அரசர், வணிகர், உழவர், படைவீரர், அமைச்சர், காவலர், அறுவையர், மருத்துவர்

என்பன தொழில்வகைப் பிரிவுகளாகும். அந்தணர், அறிவர், பார்ப்பார், ஆசிரியர், புலவர் முதலிய பிரிவினர் மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்றவராவார். நிலம், குடி, முறை கொள்கை முதலியன பற்றியும் மக்கள் அழைக்கப்பட்டனர்.

**"சிறப்பின் ஆகிய பெயர் நிலைக் கிளவிக்கும்**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்"**

(தொல். சொல். கிளவி-41)

எனும் நூற்பாவால் மக்கள் அவர்தம் சிறப்பால் பெயர் பெற்றனர் என்றும் அப்பெயரை அவர்தம் இயற் பெயருக்கு முன்னர்ச் சேர்த்து வழங்குதல் வேண்டும் என்ற முறைமை இருந்தது என்றும் அறியலாம்.

**"நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயரே**
**வினைப்பெயர், உடைப்பெயர், பண்புகொள் பெயரே**
**பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே**
**கூடிவரு வழக்கின் ஆடு இயற்பெயரே**
**இன்று இவர் என்னும் எண்ணியற் பெயரோடு**
**அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே"** [1]

என்னும் நூற்பாவால் அக்கால மக்கள் பெற்றிருந்த பெயர் வகைகள் வெளிப்படுகின்றன.

நாளடைவில் தொழில்களுள் உயர்ந்தன தாழ்ந்தன என்ற பிரிவுகள் உண்டாயின. தொழில்கள் அடிப்படையில் உண்டான பிரிவுகள் பிறவி

---

1. தொல். சொல். பெயர் 11.

அடிப்படையில் வலுப்பெறலாயின. பிறவி அடிப் படையில் வேற்றுமைகளை நிலைநாட்டிக்கொண்ட வடவர் கூட்டுறவு தமிழர்க்கு ஏற்பட்டது. அவர்கள் வகுத்துக் கொண்டிருந்த "பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர்" என்ற நால்வகைப் பிரிவுகட்கு ஏற்பத் தம்முடைய தொழில் வகையில் அந்தணர்,அரசர், வணிகர், வேளாளர் எனும் பிரிவு களைமட்டும் மதிக்கத் தொடங்கினர். ஆயினும் பிறவி வகையால் வடவர்போல் உயர்வு தாழ்வு கருதாது, ஒழுக்கம்,புலமை முதலிய சிறப்புவகையால் உயர்வு தாழ்வு கொண்டனர்.

**"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**
**கீழ்ப்பா லொருவன் கற்பின்**
**மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"** (புறம் - 183)

**"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார்; கீழ்ப்பிறந்தும்**
**கற்றுர் அனைத்திலர் பாடு"** (குறள்-409)

என்பன, பிறப்பால் உயர்வு தாழ்வு ஏற்பட்ட பின்னரும் சிறப்புக்கு மதிப்புக் கொடுத்த நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

சாதிப்பிரிவுகளும் சமயப்பிரிவுகளும் தோன்றி நிலைத்துவிட்ட போதிலும் அவை காரணமாக மக்கள் போரிட்டுக்கொண்டாரிலர். எல்லோரும் ஒருவரோடு ஒருவர் உறவாடிக்கலந்து மகிழ்ந்து வாழ்ந்தனர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்," "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற கொள்கைகள், மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தகாலமே சங்ககாலம்.

# 5. அரசு

நாடு நல்லமைதிபெற்று மக்கள் இன்புற்று வாழ வேண்டுமானல் அந்நாட்டில் அரசமுறை சிறந்து விளங்க வேண்டும். நாட்டின் சிறப்பியல்பைக் கூற வந்த திருவள்ளுவர்,

"ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயன் இன்றே
வேந்து அமைவு இல்லாத நாடு" (குறள்-740)

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனல், யானுயிர் என்பதறிகை
வேன் மிகு தானை வேந்தற்குக் கடனே" (புறம் 186)

என மோசிகீரனர் மொழிந்தருளினர். ஆகவே சங்க காலத்தில் நல்லரசின் இன்றியமையாமையை நாட்டு மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்று நாம் தெளிதல் கூடும்.

சங்ககாலத்தில் பழங்காலச் சிற்றரசுமுறையினின்று விடுபட்டுப் பலவகை அமைப்புக்களுடன்

பொருந்திய பேரரசுமுறை தழைத்திருந்தது. அக்கால ஆட்சிமுறையைக் "**குடிதழுவிய கோனாட்சி முறை**" என்று குறிப்பிடலாம். மக்களால் விரும்பப் பட்டு மக்களுக்காக அரசோச்சிய மன்னர்களே ஆண்டனர்.

"நாட்டாட்சி, மக்கள் நன்மைக்காக இயங்க வேண்டுமெனின், புலவர்களே நாட்டையாள வேண்டும்; அல்லது மன்னர்கள் புலவர்களாதல் வேண்டும்" என்றார் மேனாட்டறிஞர் ஒருவர். புலவர்கள் அரசாளும் வாய்ப்பைப் பெற்றிலர். ஆனால் மன்னர்கள் புலவர்களாக இருந்தார்கள். ஆதலின் அறநெறியிற் சென்ற அவர்கள் ஆட்சி எவரும் போற்றும் நிலையில் இருந்தது.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு" (குறள்-544)

என்பதனைத் தெளிந்திருந்தனர்.

"வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடைதாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே" [1]

என்பதனையும்.

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர் தேரும் நெஞ்சுடைய புகல்
மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' [2]

என்பதனையும் நன்கு உணர்ந்திருந்தனர்.

---

1. புறம்-35
2. புறம்-55

குடிகளால் இகழப்படுதலைக் கொடிய துன்பமாகவும் புலவர்களால் புகழ்ந்து பாடப்படுதலைப் பெரிய பரிசாகவும் கருதி நாட்டைப் பகைவர் அடையாது காத்து நல்லரசு ஓச்சினர் என்பது,

“நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கிச்
சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎ னாயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செந்நிழற் காணாது
கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடி பழி தூற்றும் கோலே னாகுக,
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை” (புறம்–72)

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினத்தால் அறியலாகும்.

அரசாள்வோன் மகன் அரசனாக அமரும் வழிமுறைக் கொள்கைப் பிற்காலத்தே நிலைத்து விட்ட போதிலும் பண்டைத் தமிழகத்தில் அரசமரபு என ஒரு மரபு இருந்திலது. அரசாள்வோர் அரசர் எனப் பட்டனரேயன்றி அரசாளும் மரபிற்பிறந்தோர்க்குத் தான் அரசு உரியது எனக்கருதினாரிலர். வடநாட்டில் இராசனுக்குரியது இராச்சியம் எனக்கருதப்பட்டதே யன்றி ‘இராச்சியம்’ புரிவோன் ‘இராசன்’ என்று கொள்ளப்பட்டிலது. அங்கு அரசாளுவதற்குரிய

மரபு எனச் சத்திரியர் மரபு தோன்றியதுபோல்தமிழ் கத்தில் தோன்றிலது. தமிழ்ச் சொல்லாம் 'அரசன்' என்பதே வடமொழியில் 'இராஜன்' ஆக உருப் பெற்றது. சிலர் கருதுவதுபோல் 'இராஜன்' 'அரசன்' ஆகவில்லை.

ஆளும் முறையால் அரசர் எனப்பட்டோர் தாமே தம் உளம் சென்ற வழி நாட்டை ஆண்டிலர். ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும் அரசர்க்குத் துணைபுரிந்தன. புலவர்கள் அவ்வப்போது வேண்டும் அறிவுரைகூறி அறநெறிகோடாது ஆளும் முறை யில் அரசரைச் செலுத்தினர்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" (குறள்-448)

என்பது நாடறிந்த நல்மொழியாகும்.

அரசாளும் உயர்நிலையை எய்துவோர் அரசியல் துறைகளிலும் பிற துறைகளிலும் கற்றுத்துறை போகிய வல்லுநராய் இருந்தனர்; அஞ்சாமை, ஈகை, தூங்காமை, துணிவுடைமை உடையராய்க் காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல்லற்று விளங் கினர்; இயற்றலிலும், ஈட்டலிலும், ஈட்டியவற்றைக் காத்தலிலும், காத்தவற்றைப் பல்வகைத்திட்டங் கட்கு உரிய முறையில் வகுத்தலிலும் திறம்பெற் றிருந்தனர்; என்றும் இனியசொல்லினராய் மக்கள் வேண்டியனவற்றை வேண்டியாங்கு நிறைவேற்றி நாட்டைத்தம் ஆணைவழி இலங்கச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தனர்; மக்கள் முறையீடு செவிகைப்ப இருப்பினும் அதனைப்பொறுமையாகக் கேட்டு மக்கள் குறைபோக்கும் மாண்புறுபண்பு பெற்றிருந்தனர்.

இவ்வாறு நன்முறையில் நாட்டையாண்ட அரசர் மக்கட்கு இறையென்று போற்றப்பட்டனர்.

"உலகம் மழையை நோக்கி வாழ்வதுபோல் நாடு அரசனின் செங்கோன்மையை நோக்கி வாழ்கின்றது" என்று தெளிந்த அரசர் செங்கோன்மை வழுவாது ஆண்டனர். அறம்நிலைத்தலும் அறவோர் அகமகிழ்வுடன் வாழ்ந்து நன்னெறி பரப்பலும், அறிவியல் நூல்கள் பெருகுவதற்கேற்ற சூழ்நிலை அமைதலும் செங்கோன்மை ஆட்சியில் சிறக்க நிகழ்ந்தன.

அரசர் நாட்டை நன்முறையில் காத்தனர்; அவரை அவருடைய நல்லாட்சி காத்தது. நாட்டு மக்கட்குத் தீங்கு செய்து தீநெறியில் சென்றோரை இரக்கமின்றி ஒறுத்து, விளை நிலத்தில் தோன்றிய களையைப் போக்குவது போல்போக்கினர். குடிபுறங் காத்து ஓம்ப மக்கள் குற்றத்தைக் கடிதல் அரசரின் ஆளும் தொழிலுக்குரியதே என உலகம் கருதியது.

அரசாட்சி முறையை நன்கு ஆராய்ந்து ஆள வில்லையேல் நாடு கெடும் என்பதை அரசர் அறிந்திருந்தனர். நல்லாட்சி நிலவாத நாட்டில் மழை பெய்யாது என்று மக்கள் நம்பினர். கொடுங்கோன்மை நிலவும் நாட்டு வாழ்க்கையினும் கடும் புலி வாழும் காட்டு வாழ்க்கையே மேலெனக் கருதினர். அரசர் நாட்டை ஆளுவதற்கு வேண்டும் வரிப் பொருளை உளம் உவந்து கொடுத்தனர். ஆனால் அளவுக்கு மேல் வரி வேண்டிய காலத்து, வேலொடு நின்று வழிப்பறி செய்யும் திருடராக அரசரை மதித்தனர். புலவர்கள் அறிவுரை கூறி அரசரைத் தெருட்டினர்.

பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சென்ற பிசிராந் தையார், வரி பெறும் முறைபற்றிக் கூறியுள்ள அறிவுரை எக்காலத்துக்கும் பொருந்துவதாகும். "யானை வளர்ப்போர் நிலத்தில் விளைந்த நெல்லை அறுவடை செய்து வைத்துக் கொண்டு அளவோடு யானைக்கு உணவிடின் ஒரு மா அளவு நிலத்தில் விளைந்ததும் பல நாட்களுக்குப் போதுமானதாகும். யானையைக் கட்டவிழ்த்துவிட்டுத் தானே உண்ணு மாறு விட்டுவிடின் நூறு மா அளவு நிலத்தில் விளைந்ததும் சில நாட்களுக்குக் கூடப் போது மானது ஆகாது. யானை உண்ணுவதினும் அதன் கால்களால் அழிவது மிகுதியாக இருக்கும். அது போல அரசர், பெறும் நெறியறிந்து வேண்டிய அளவு மக்களிடம் இறை பெற்றால் செல்வம் பெருகி நாடு மிகவும் முன்னேற்றம் அடையும் நெறியில் செல்லும். அரசர் இவ்வரசியல் அறிவற்றுத் தீயோர் அறிவுரைக்குச் செவிமடுத்து மக்கள் வருந்துமாறு மிகுந்த பொருளை வரியாகப்பெறநினைந்தால், யானை புகுந்த வயல் போல நாடு அழியும்; அரசரும் பயன் பெறார்."

"காய் நெல்லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே." (புறம்-184)

இவ்வறிவுரைக்கேற்பவே அக்கால அரசர்கள் வரி பெறும் நெறியறிந்து மக்களிடம் வரி வேண்டிப் பெற்று மக்களுக்கு வேண்டும் நல்லாட்சி புரிந்தனர், ஆட்சி முறைப்பற்றிப் புலவர் கூறும் பொன் மொழி களைச் செவி மடுத்து ஆளுவது அக்கால அரசரின் இயல்பாக இருந்தது.

வெள்ளைக்குடி நாகனர் என்ற பெரும் புலவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கண்டு "அரசே! அறக்கடவுளே வந்து ஆட்சி செய் வதுபோன்று செங்கோன்மை செலுத்துவதில் கருத்துக்கொண்டு, மக்கள் முறை வேண்டும் பொழு தில் செவ்வி எளியராய் இருப்போர், வேண்டும் காலத்தில் மழை பெறுவர். நல்லாட்சியின் அடை யாளமாகப் பெற்றிருக்கும் பெருங்குடை வெயிலை மறைப்பதற்காக அன்று. குடிமக்களின் குறைகளைத் தடுப்பதற்குரிய அடையாளமாகும். போர்க்களத்தில் பகைவரை வென்று போர்ப்படை அடையும் வெற்றி உழவரின் உழுபடையால் உண்டாவதாகும். மக்களுக்குப் பலவகை இன்னல்கள் தோன்றும் போதெல்லாம் இவற்றிற்குக் காரணமானேன் அர சனே என்று உலகம் பழித்துரைக்கும். ஆதலின் குடிமக்களை நன்கு புரந்தருளுக. அவ்வாறு புரத் தலே பகை வெல்லும் நெறியாகும்" என்று கூறியுள்ளார்.

"'பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"
"குடிபுறந் தருகுவை யாயின் நின
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே'' (புறம்-35)

என்று கூறியுள்ள கருத்துக்கள் மக்கள் ஆற்றலை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு கூறிய புலவரின், குறையாதெனஅரசன்அறிந்தான். நாட்டு மக்கள் நல்விளைவினைப் பெறாது வருந்துகின்றமையால் அரசர்க்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்த இயலாமல் அல்லல் உறுகின்றனர் என்பதனை அறிந்த கிள்ளிவளவன் கட்ட வேண்டிய வரிப் பகுதியைத் தள்ளுபடி செய்தான். பழஞ் செய்க் கடனிலிருந்து நாட்டு மக்களை மீட்டார் வெள்ளைக் குடி நாகனார். புலவர் அறிவுரை வழி நின்று மக்கள் துயர் போக்கிய மன்னன் மக்களால் போற்றப்பட்டிருப்பான் என்பதில் ஐயமுண்டோ ?

பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் என்னும் குடிமக்கள் புலவர் சென்றார். "செல்லும் உலகத்துச்செல்வம் வேண்டினும், இவ்வுலகத்தில் இனிய புகழை நாட்ட விரும்பினும் செய்யத் தக்கதைக்கேட்பாயாக. உணவால் நிலைப்பது உடல். உணவு உண்டாக்குவது நிலத்தாலும் நீராலும் விளைவுக்கேற்ற நிலனும் நீரும் படைப்போர் உடம்பும் உயிரும் படைத்தோராவர். வயலில் விதைத்து விட்டு நீர்க்கு வானத்தை நோக்கி இருப்பது இறைவன் என்று சிறப்பித்துக் கூறப்படும் அரசன் முயற்சிக்கு அடுத்தது ஆகாது. ஆதலின் நீர் நிலைபெருகச் செய்தல் அரசரின் தவிர்க்கலாகாக் கடனாகும். அவ்வாறு செய்பவரே தம் புகழை இவ்வுலகில் நிலை நிறுத்தியோராவார். செய்யாதவர் தம் புகழை இவ்வுலகத்தில் நிலைக்கச் செய்யாதவரே" என்று அரசரை நோக்கி அறிவுரை புகன்றார்.

நாட்டில் நீர்நிலை பெருக வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அரசருக்கு அறிவுறுத்தப்பட்டது. "நீரின்றியமையா யாக்கைக் கெல்லாம்" என்று அன்று எழுப்பிய முழக்கம் இன்றும் சில பகுதிகளில் எழுப்பப்பட வேண்டிய நிலையில் நாடு இருப்பினும் அன்றைய அரசர் தம்மாலியன்றதை அக்காலச் சூழ்நிலைகட்கு ஏற்பச் செய்து மக்களைப்புரந்து மாண்புற்றனர்.

அக்கால அரசர்கள் கற்க வேண்டியவற்றைத் தாமும் கற்றும் புலவர்வாய்க் கேட்டும் அரசியல் உண்மைகள் பலவற்றை அறிந்திருந்தனர். தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசர் "உருளையையும் பாரையையும் கோத்துச் சகடத்தைச் சேற்று வழியின்றி நன்கு செலுத்துதல் போன்று உலகம் என்ற வண்டியையும் இனிய நல்வழியில் செலுத்த வேண்டுமாயின் அதைச் செலுத்தும் அரசன் எல்லா வகையிலும் மாட்சிமையுற்றோனாய்இருத்தல்வேண்டும்.இன்றேல்உலகம்நன்கு இயங்காது; நாளும் பகையென்னும் சேற்றில் அழுந்திப் பலதீயதுன்பங்களுக்கு ஆளாகும்" என்று தெளிவுறக் கூறுகின்றார்.

"கால் பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே
உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்
பகைக் கூழ் அள்ளல் பட்டு
மிகப் பல் தீநோய் தலைத்தலைத் தருமே." (புறப்-185)

பாரி முல்லைக்குத் தேரீந்ததும், பேகன் மயிலுக்குப் படாம் அளித்ததும், ஏனைய உயிர்களிடத்தும்

தமிழரசர்கள் கொண்டிருந்த இரக்க உணர்வினைத் தெளிவுபடுத்தும்.

புலவர்களின் செவியறிவுறூஉவினையும் அமைச்சர்களின் நல்லாய்வுரையினையும் ஆர்வத்துடன் உளங் கொண்டு ஆட்சி செலுத்திய அரசர்கள் நாட்டை அளந்தும், கோட்டம், கூற்றம், பேரூர், ஊர் எனப்பகுத்தும், அறங்கூறவையங்களையும் ஆட்சி மன்றங்களையும் அமைத்து, தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் என்றும் நீங்காராய், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பதனைத் தெளிந்து தமிழ்நாட்டை நன்கு ஆண்டு நானிலம் போற்றுமாறு வாழ்ந்தனர். தாமும் புலவராய் விளங்கிப் புலவரைப் போற்றி மொழியை ஓம்பினர். முத்தமிழும் சிறப்புற வளரத் துணை நின்றனர்.

## 6. கல்வி.

பழந்தமிழ் நாட்டில் கல்வியின் சிறப்பை யாவரும் உணர்ந்திருந்தனர், கல்வியற்ற மக்களை விலங்குகளோடொப்பவே கருதினர் என்பது,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர்" (குறள்-410)

என்னும் வள்ளுவர் வாய்மொழியால் அறியலாகும். அரசரும் இவ்வுண்மை தெளிந்து தம் கடனாற்றினர் என்பது பின்வரும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூற்றால் தெளியலாகும்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே." (புறம் -183)

திருக்குறட் பொருட்பாலில் இறைமாட்சிக்குப் பின்னர் கல்வி, கல்லாமை, கேள்வி எனும் தலைப்புக்களில் கல்வியின் இன்றியமையாமையும் பயனும்

வற்புறுத்தப்படுகின்றமையாலும் கல்வியைப்பற்றி அக்கால மக்கள் கொண்டிருந்த கொள்கை தெற்றெனப் புலனாகும். வாழும் மக்களுக்குக் கல்வி கண்ணெனவே போற்றப்பட்டு வந்துள்ளது. ஆண் பெண் சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் கல்வி பெறவேண்டும் என்ற கொள்கையே நாட்டில் நிலவியது. அக்காலப் புலவர்களில் பல தொழிலினரும் கொள்கையினரும் நிலையினரும் பெண்களும் இருந்துள்ளமையே இதற்குச் சான்றாகும்.

அக்காலத்திலும் கல்வியை அறிவியல் (**Science**) என்றும் கலையியல் (**Arts**) என்றும் கூறுபடுத்தியுள்ளனர்; அறிவியலை 'எண்' என்றும், கலையியலை 'எழுத்து' என்றும்அழைத்துள்ளனர். அதனாலேயே திருவள்ளுவரும்,

> **"எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்**
> **கண் என்ப வாழும் உயிர்க்கு"** (குறள்-392)

என்று கூறியுள்ளார் என்று கருதுதல் வேண்டும், 'எண்' என்பதற்கு வெறும் கணக்கு என்றும். 'எழுத்து' என்பதற்கு வெறும் இலக்கணம் என்றும் பொருள் கூறுதல் பொருந்தாது. அறிவியலுக்கு எண்ணுதலும் கலையியலுக்கு எழுதுதலும் முதன்மையாக உள்ளனவாதலின் தமிழகப் பெரியோர் அறிவியலை எண் என்றும் கலையியலை எழுத்தென்றும் அழைத்து வந்துள்ளனர். 'என்ப' என்று கூறுவதிலிருந்து இக்குறியீடுகள் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே வழக்கில் இருந்துள்ளன என்று தெளியலாகும். ஒருவருக்கு இவை இரண்டும் உயிர் போன்று

இன்றியமையாதென என்று கூறியுள்ளதன் நயம் பாராட்டதக்கது.

அறிவியல் அறிவுக்குரியது; கலையியல் உள்ள வியல்பாம் பண்புக்குரியது. அறிவு முதிர்ச்சியும் பண்பு முதிர்ச்சியும் ஒரு சேர வாய்க்கப் பெற்றால் தான் கற்றோர் என்பவர் மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவர். இன்றேல் கூர்த்த அறிவியலறிவால் அழிவுச் செயல்களும், முதிர்ந்தகலையியல் அறிவால் களிஇன்பச் செயல்களும் மிகுந்து உலகம் கேடுறும். ஆகவே இன்றைய பல்கலைக் கழகப் பாடத் திட்டம் இவ்விரண்டு பகுதிகளிலும் ஒருவர் புலமை பெறுவ தற்குரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை நம் முன்னோர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அறிந்து மேற்கொண்டு ஒழுகினர் என்பது அறிந்து வியத்தற்குரியதன்றோ ?

அக்காலக் கல்வித்திட்டம் பொதுக்கல்வி, சிறப் புக்கல்வி, ஆராய்ச்சிக்கல்வியென மூவகை நிலைகளைப் பெற்றுள்ளது. பொதுக் கல்வி ஏழாண்டுகளும் சிறப்புக் கல்வி மூன்றாண்டுகளும் கற்ற பின்னர் ஆராய்ச்சிக்கல்வி (Postgraduate)க்கென வெளியிடங் களுக்குச் சென்றுள்ளனர். சிறப்புக் கல்வியென்பது தாம்விரும்பும் தொழில் அல்லது கலை பற்றிப்பயில் வதாகும். இன்று பல்கலைக் கல்வி பயிலும் நாட்கள் ஏறக்குறைய ஆறு திங்களேயாகும். பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விபெற ஐந்துஅல் லது ஆறு ஆண்டுகள் செலவழிக்கவேண்டியுள்ளது. ஆண்டில் பாதிநாட்கள் விடுமுறை கொண்டுள்ள

இன்றைய ஆறு ஆண்டுகளும் விடுமுறையில்லா அன்றைய மூன்று ஆண்டுகளுக்குச் சமமேயன்றோ?

அன்று தொழிற் கல்விக்குரியனவாயிருந்தன மருத்துவம், வாணிபம், கட்டிடக் கலை, வான நூல், நெய்தல் கலை, உழவுத்தொழில், படைக்கலம் பயிறல், ஆட்சியியல், மனையியல், ஓவியக் கலை, படிவக் கலை(சிற்பம்), ஆசிரியரியல், புலவரியல் முதலியன என்று தமிழிலக்கியக் குறிப்புக்களைக் கொண்டு அறிதல் இயலுகின்றது. தமிழ்நாட்டு அறிவியல் கலை இயல் அறிஞர்கட்கும் வெளிநாட்டு அறிவியல் கலை இயல் அறிஞர்கட்கும் நெருங்கிய தொடர்பு இருந்துளது. இருசாராரும் இங்கும் அங்கும் கலந்து உறவாடிப் பழகியுள்ளனர்.

கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் எவ்வாறு இயங்கின என்று கூறுவதற்குரிய குறிப்புகளில் ஒன்றும் இன்று கிடைக்கப்பெறவில்லை யென்றாலும் அவை இருந்தில என்று முடிவு கட்ட முடியாது. ஒவ்வொரு துறையிலும் கற்றுத் துறைபோகிய பேராசிரியர்கள் இருந்துள்ளனர். அவர்கள் "பல் கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்" என்று அழைக்கப்பட்டனர். நாட்டில் தொடர்ந்து வந்த மரபுமுறையில் கற்றுச் சிறந்தமையானே "தொல்லாணை" எனும் அடையொடு சிறப்பிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அடையாளக்கொடி உண்டு. ஒவ்வொருவருடைய வீடும் ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு கல்லூரியாக விளங்கியது.

நல்லொழுக்கமுடைய சான்ருேராக வாழும் நெறியறிவதற்கே அன்று கற்றனர். கசடறக் கற்றுக் கற்றவாறு ஒழுகலே கல்வியின் பயன் என்று கருதப் பட்டது. பட்டத்திற்காகவோ பதவிக்காகவோ கற்கும் முறை அன்று இன்று. ஆனுல் கற்றுப் புலமை பெற்றுச் சிறந்தோரைப் பட்டமும் பதவியும் தேடிவந்தன. இன்று பட்டத்திற்கும் பதவிக்கும் விருப்பங்கொண்டு கல்வி பெறுவதனுல் கற்றகல்விக் கும் வாழ்வுக்கும் தொடர்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கற்பதற்குரிய காலம் இளமைப்பருவமே ஏற்றது என்று கருதினர்; ஆயினும் இளமைப் பருவத்தில் கல்வி பெறும் வாய்ப்பிலாதவர், முதுமைப் பருவத் தில் வாய்ப்புநேரும்போதெல்லாம் கற்றல்வேண்டும் என்று மக்கள் அறிவுறுத்தப்பட்டனர் என்பது,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள் 397)

என்று கூறும் திருக்குறளால் தெளியலாம். வாழ்வில் நன்கு வெற்றி பெறவும், எல்லோரும்கூடி உறவாடி இன்புற்று வாழவும், மன்பதையில் மேலோராக மதிக்கப்படவும், செல்வத்தை ஈட்டவும், ஈட்டிய செல்வத்தை நன்கு துய்க்கவும், தாம் இயல்பாகப் பெற்றுள்ள ஒட்பமும் அழகும் சிறப்புறவும், ஆட்சி முறையில் பங்குகொண்டு பணியாற்றவும், வாலறி வன் நற்ருள் தொழவும், கல்வியே பெருந்துணையா வது என்று கருதி, எல்லோரும் "உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்ருர்." அவ்விதம் கல்லாதாரைக் 'கடையர்' என்று இகழ்ந்தனர்.

அக்காலத்தில் புத்தகங்களைப்பலவாகப்பெருக்கி வெளியிடுவதற்குப் பெருந்துணை புரியும் அச்சுக் கூடம் தோன்றப் பெறவில்லை. எழுத்தாணியால் பனையோலை ஏட்டில்தான் எழுதிப்படித்தனர். அவ் வாறு ஒவ்வொருவரும் எழுதிப்படித்தல் என்பது எல்லார்க்கும் எளியதன்று. ஆதலின் கற்றலினும் கற்றோர்வாய்க் கேட்டல் எளிதும் இனிதும் என்று கருதினர். கற்றாரும் கல்லாரும் கேள்விச் செல்வத் தைப் பெரிதென மதித்தனர்.

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை"** (குறள்,411)

என்று போற்றினர். கேள்விச் செல்வம் உணவினும் பெரிதாகவும், உயர்பண்பின் விளை நிலமாகவும் கருதப்பட்டது. இத்தகைய சீரிய செவிச் செல்வம் பெறாதார் செவிகள் செவிடெனவே கருதப்பட்டன.

'சினங்கொள்ளுதல் தீது' என்று அறிவுறுத் தும் திருவள்ளுவர் கூடச் சினங்கொண்டு "செவிச் செல்வம் பெறாதார் வாழ்ந்தாலென்ன செத்தா லென்ன" என்று செப்புகின்றார்.

ஆதலின் அக்காலத்தில் கற்று வல்ல பெரியார் கள் தாம் கற்றவற்றை மக்களுக்கு அவ்வப்போது எடுத்துரைத்தனர் என்றும், மக்களும் அவ்வுரை களைக் கேட்டுப் பயன் எய்தினர் என்றும் அறிய லாகும்.

அக்கால மக்கள் கற்றலாலும் கேட்டலாலும் புலமை பெற்று நல்வாழ்வு எய்தினர்; நாடு நாடா கவே இருந்தது.

# 7. இல்லறம்

'இல்லறம்' என்பது வீட்டிலிருந்து வாழும் அற நெறி என்னும் பொருளதாகும். இல்லற வாழ்வே மக்களை மாக்களினின்றும் வேறு பிரித்து உயர்த்து வதாகும். மக்களும் மாக்கள்போல் பசித்தபோது கிடைத்தனவற்றை உண்டு, உறக்கம் வந்தபோது உறங்கி, அவ்வப்போது பொருந்தியோருடன்விரும் பிய ஞான்று மணந்து, வேண்டாத ஞான்று தணந்து நாளைக் கழித்த காலம் உண்டு. மரங்களி லும் மலைப்புழைகளிலும் விலங்குகளோடு விலங்கு களாய் வாழ்ந்த காலம் அது. நாளாக நாளாக அறிவு வளர்ச்சி சிறந்து, பண்பாடு வாய்க்கப் பெற்றுக் காதலித்தோரை மணந்து,ஒருவனும்ஒருத் தியுமாய் ஓரிடத்தே இல்லமைத்து மக்களைப் பெற் றுத் தம் மக்களுக்காகவும் பிறருக்காகவும் உழைத் தலே தம்கடன் என்று கொண்டு வாழத்தொடங்கிய காலமே மக்கள் நாகரிக வாழ்வை நண்ணிய கால மாகும். அதுவே இல்லறவாழ்வின் இனிய தோற்றக் காலமாகும். இவ்வில்லற வாழ்வினைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ்மக்கள் கொண்டிருந் தனர் என்பது தொல்காப்பியத்தாலும் திருக்குறளா லும் ஏனைய சங்க இலக்கியங்களாலும் எளிதில் இனிதில் அறியலாகும். தொல்காப்பியப் பொருட்

படலம் இலக்கியம் பற்றிய நெறிமுறைகளைக் கூறப் புகுந்து இலக்கியத்திற்குரிய பொருள்களில் ஒன்ரும் இல்லற வாழ்வைப்பற்றி அழகுற இயம்புகின்றது. திருக்குறள், வாழ்வியலை வகையுற விளக்கப் போந்து, இல்லறத்திற்கே முதன்மை கொடுக்கின்றது. ஏனைய சங்க இலக்கியங்களோ இவை இரண்டின் நெறியில் இல்லறவாழ்வைச் சொல்லோ வியப்படுத்துகின்றன.

இல்லறத்திற்குரிய முதன்மையாளர்கள் கணவனும் மனைவியும் ஆவார். இவர்கள் தலைவன் தலைவி என்றே அழைக்கப் பெறுவர். இல்லறத்திற்கு இருவரும் தலைவர்களே என்பதனை இப்பெயர்கள் அறிவிக்கின்றன. அன்றியும் தலைவி, மனைவி, இல்லாள் எனும் பெயர்கள் இல்லறத்தில் பெண்ணினம் பெற்றுள்ள உயர்வினையும் மதிப்பினையும் எடுத்துக் காட்டுவனவாகும். கணவனை, மனைவன் என்ருே இல்லான் என்ருே அழைக்கும் மரபு இன்மையான் தலைவனிலும் தலைவிக்கே இல்லறப் பொறுப்பும் கடமையும் தலைமையும் மிகுதியும் உள எனப் புலனாகும். பெண்ணினத்திற்கு மதிப்புக்கொடுக்கும் இனமே பண்பாடுமிக்க இனம் என்பர். ஆதலின் சங்க காலத் தமிழர் உயர் பண்பாட்டின் உச்சியை எய்தி இருந்தனர் என்று உணரலாகும்.

ஆடவன் ஒருவனும் பெண் ஒருத்தியும் கணவனும் மனைவியுமாக ஆகும் உறவுமுறையாலும் ஓரின மக்களின் உயர்வு புலப்படும். பண்டைத் தமிழகத்தில் ஆணும் பெண்ணும் எவ்வாறு கணவனும் மனைவியும் ஆகி இல்லறத்தை நடத்தினர்கள் என்ப

தனைத் தொல்காப்பியத்தால் அறிந்து தமிழர் உயர்வைத் தெளியலாகும். ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்கு முதல் நிலையாய் இருந்த நிகழ்ச்சியைத் தமிழர் திருமணம் என்று அழைத்தனர்.

'மணம்' என்பது நறுநாற்றத்தையும் குறிக்கும். இல்லறமே மக்கள் வாழ்வின் புகழ் எனும் மணம் பரப்பும் வாழ்வாகும். மணப்பதற்கு முன்னர் தமக்கென வாழ்பவர், மணந்த பின்னர் பிறர்க்கென வாழத் தொடங்குகின்றனர். பிறர்க்கென வாழ்தலே பெரும்புகழ் தருவதாகும். ஆதலின் இல்லற நெறியில் இருவரையும் செலுத்தும் நிகழ்ச்சியை 'மணம்' என அழைத்தல் மிகவும் பொருத்தம் உடைத்தன்றோ? உயர்வுக்குரிய எவர்க்கும் எதற்கும் 'திரு' எனும் அடைசேர்த்து வழங்குதல் தமிழரின் தொன்று தொட்ட நெறியாகும். ஆதலின் மணமும் திருமணம் ஆயது.

இத்திருமணம் காதல் துணையாக நிகழ்ந்ததேயன்றி ஏனைய சாதி, குலம், பொருள், செல்வாக்கு, பதவி துணையாக நிகழ்ந்திலது. திருமணத்திற்குரிய பருவம் எய்திய ஆணும் பெண்ணும் தாமே எதிர்ப்பட்டுக் காதலித்து மணந்துகொண்டனர். இவ்வாறு எதிர்ப்பட்டுக் காதலிப்பது அவரவர் விதியின் வழியே நிகழும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

> "ஒன்றே வேறே என்றிருபால் வயின்
> ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோ னாயினும் கடிவரை யின்றே" [1]

---

1. தொல், பொருள் – 93.

முன்பின் அறியாத இருவர் விதியின் ஆணையால் கூடுவர்என்றாலும் அவரிருவரும் ஒத்தநிலையில்தான் இருப்பர் என்று கருதப்பட்டது.

> "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்,
> நிறையே, அருளே, உணர்வொடு திருஎன
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே" [1]

எனத் தொல்காப்பியர் அவரிடையே காணப்பட வேண்டிய ஒப்புமைகளைத் தொகுத்து உரைத்துள்ளார். ஆதலின் ஒரு காலத்தில் எதையும் கருதாது காதலித்தனர் என்றும் பின்னர் மேற் சுட்டப்பட்ட பத்தினும் ஒப்புமையுடையராய் இருத்தல், திருமணத்தில் கூடிய இருவரும் இல்லறத்தை இனிதுநடாத்த மிகவும் துணைபுரியும் என்று கருதினர் என்றும் உணரலாம். 'காதலுக்குக் கண்ணில்லை' என்பது சங்ககாலத் தமிழரிடையே பொய்த்து விட்டது. காதலுக்கும் கண்ணுண்டு. கண்ணுள்ள காதலே முறிவுறாத இல்லற வாழ்வையளிக்கும்; நினைந்தவுடன் மணந்து சினந்தவுடன் தணந்து போகும் இழிநிலையைத் தடுக்கும்.

இவ்வாறு ஒத்தநிலையை ஆராய்ந்து காதல் வயப்பட்டோர் பெற்றோர்க்கு அறிவித்துத் திருமணம் செய்துகொண்டனர். பெற்றோர் இசைவு கிடைக்கப் பெறாவிடின் தலைவி தன் வீட்டைவிட்டுப் பெற்றோர் அறியாமல் தலைவனுடன் சென்று மணம் புரிந்து கொண்டாள்.

பிறர் அறியாமல் காதலித்து ஒழுகுவதைக் களவு என்றும் பின்னர் எல்லோரும் அறிய மணந்து

1. தொல். பொருள் 273

கொள்வதைக் கற்பு என்றும் அழைத்தனர். களவின்றிக் கற்பில்லை; கற்பின்றிக் களவில்லை. எல்லோரும் அறிய மணம் நிகழ்ந்ததாலுல் அது நாடறி நன்மணம் என்று அழைக்கப்பட்டது. திருமணச் சடங்கைக் 'கரணம்' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆனல் திருமணச் சடங்கு நிகழும் முறைபற்றி அவர் குறிப்பிட்டாரிலர். அகநானூற்றுப் பாடல் (86) ஒன்ருல் அக்காலத் திருமணம் எவ்வாறு நிகழ்ந்தது என்று அறிய இயலுகின்றது. அப் பாடலிற் கூறப்பட்டுள்ளதாவது:—

திருமணம் நிகழவிருக்கும் வீடு நன்கு அணி செய்யப்பட்டுள்ளது. வீட்டின் முன்னர்ப் பெரிய பந்தர் இடப்பட்டுள்ளது. எங்கும் புதுமணல் பரப்பப்பட்டுள்ளது. பந்தரிலும் வீட்டு முகப்பிலும் மாலைகள் அணி அணியாகத் தொங்கவிடப்பட்டுள்ளன. வீடெங்கணும் விளக்குகள் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. பொழுது புலர்ந்த கவின் பெறு காலை நேரம். உழுத்தங் களியும் பெருஞ்சோறும் வழங்குவதற்கு ஆயத்தம் செய்து வைக்கப் பட்டுள்ளன.

எங்கும் ஒரே ஆரவாரம். மணம் செய்துகொள்ளும் நாள் வந்ததே என்று மகிழ்ந்த உள்ளத்தோடு உரையாடிக்கொண்டு செம்மைசால் முதுபெண்டிர் வந்தனர். பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைத் தலைமீது தாங்கியிருந்தனர். குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசிகள் நால்வர் வந்தனர்; முறை முறையாகக் குடங்களைப்பெற்று மணமகள் மீது பூவும் நெல்லும் விளங்குமாறு நீரையூற்றிமுழுக் காட்டினர். முழுக்காட்டும்போது "கணவனுக்குத்

தகுந்த மனைவியாக இருப்பாயாக" என்று வாழ்த்தொலி எழுப்பினர். இத்திருமணச் சடங்கு கழிந்ததும் சுற்றத்தார் ஆரவாரம் செய்து கொண்டு உடனே அவண் புகுந்தனர்; "பெருமைமிகு வீட்டிற்குரிய தலைவியாகுவாய்" என்று கூறித் தலைவியைத் தலைவனிடம் தந்தனர்; பின்னர் அன்றிரவே தலைவனும் தலைவியும் ஓரில்லில் தங்கி இன்புறச் செய்தனர்.

இவ்வளவே திருமணச்சடங்கு நிகழ்ச்சியாகும். திருமணக் காலத்தில் புத்தாடை யுடுத்தலும் புது நகை புனைதலும் உண்டு என்று அப்பாடலில் வரும் குறிப்புகளால் அறியலாம்.

திருமணத்தில் பெண்ணுக்குத் தாலியணிதல் பற்றி ஒன்றும் கூறப்பட்டிலது. பெண்ணுக்குத் தாலி எனும் அணி உண்டு என்பது கணவனோடு வாழுகின்றவர்களை " வாலிழை மகளிர்" என்று அப்பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளமையால் தெரியலாம். 'வாலிழை' - உயர்ந்த அணி - என்பது தாலியைத்தான் குறிக்கும்.

திருமணத்தில் மணமகளுக்கு தாலி கட்டுதல் தமிழரிடையே மட்டும் காணப்படும் தொன்று தொட்டு வரும் பழக்கமாகும். திருமணத்தோடு தொடர்புடைய இன்னொரு சடங்கும் இருந்துளது, அது சிலம்புகழி நோன்பு' என்று கூறப்படும். திருமணம் ஆவதற்கு முன்னர் மகளிர் கால்களில் சிலம்புகள் அணிந்திருப்பர். திருமணம் நடைபெறுங் கால் சிலம்புகளைக் கழற்றும் சடங்கொன்று மணமகள் வீட்டிலேயோ, மணமகன் வீட்டிலேயோ நடைபெறும் என்று இலக்கியங்களால் புலனாகின்றது.

கால்களில் அணிந்துள்ள சிலம்புகளைக் கழற்று தலும் தாலி அணிந்து கொள்ளுதலும் மகளிர்க்குரிய திருமண நிகழ்ச்சிகளாகும்.

காதலித்து மணம்புரியும் வழக்கத்தைப் போற் றும் நாட்டில் இவை இன்றியமையாதனவே.

தமிழகத்தில் மணமானவளைக் காதலித்தல் என் பது பிறர் மனை விழைதல் என்னும் பெருங் குற்றத் தின் பாற்படும். மங்கை நல்லாள் மணம் ஆனவளா ஆகாதவளா என்று ஆடவர் அறிதற்கு ஏதேனும் அடையாளம் வேண்டுமன்றோ? அவ்வடையாளங் களே இவை. சிலம்பு அணிந்திருந்தால் மணமாகா தவள் என்றும் தாலி யணிந்திருந்தால் மணம் ஆனவள் என்றும் தெள்ளிதிற் புலனாகும்.

ஏன் இவ்வடையாளங்கள் ஆடவர்க்கு வேண்டாவோ என்று சிலர் வினவலாம். பண்டைத் தமிழகத்தில் ஆடவர்ஒருவர் ஒருத்திக்கு மேற்பட்டும் மணம் புரிந்து கொள்ளலாம் என்ற நிலையிருந்தது. ஆதலின் ஆடவர் மணமானவரா ஆகாதவரா என்று அறியவேண்டிய கடப்பாடு இருந்திலது.

இக்காலத்தில் ஆடவர் ஒருத்திக்குமேல் மணந்து கொள்ளக்கூடாது என்று இருத்தலினால் காதல் மணத்தைப் போற்றுவோர் ஆடவர்க்கும் ஏதேனும் அடையாளங்களை ஏற்படுத்தலாம். காதல் மணம் நிகழ்வது அரிதாக இருத்தலின் இதுபற்றி யாரும் இன்று கவலைகொள்வாரிலர்.

சங்க காலத் தமிழகத்தில் காதலின்பம் துணையாகத் திருமணம் செய்து கொண்டாலும்,

காதலின்பத்திற்காக மட்டும் வாழ்வதே தம் குறிக்கோள் என்று கொண்டிலர். பழிக்கு அஞ்சிப் பொருளை யீட்டித் தாமும் துய்த்துப் பிறர்க்கும் அளித்து வாழ்தலே இல்லறத்தின் சிறப்பு என்று கருதினர்.

கல்வி பயிலும் மாணவர், மொழிவளம்படுத்தும் புலவர், கலை வளர்க்கும் கலைஞர் முதலியோரையும், பிறர்க்கென வாழ்வதற்குத் தம் வாழ்வைத் துறந்தோர், உழைக்கும் ஆற்றலின்றி வறியரானோர், தம் வீட்டை விட்டு வெளியேறியோர் முதலியோரையும், தென்புலத்தார், தெய்வ அருள்பெற்ற பெரியோர், விருந்து, ஒக்கல் என்போரையும் போற்றிப் புரக்கவேண்டியவர் இல்லறத்தினரே என்பது,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள்-41)
"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (குறள்-42)
"தென்புலத்தார் தெய்வம்விருந்து ஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள்-43)

எனும் வள்ளுவர் மொழிகளால் தெளியலாம். இல்லறத்தின் பண்பாக அன்பும், பயனாக அறனும் இருத்தல் வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

தலைவன் ஒருவன் தான் விரும்பிய தலைவியைத் தவறாது மணப்பதாக உறுதிமொழி கூறுங்கால்,

"சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி யடிசில்

வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு
அறம்புணையாகத் தேற்றிப் பிறங்கு மலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது" (201-9)

என்று குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. வருவோர்க் கெல்லாம் வரையாது நல்லுணவு அளித்தல் இல்லறத்தின் கடமைகளுள் தலையாய ஒன்று என்று அன்று கருதியிருந்தனர் என்பதனை இவ் வுறுதி மொழி புலப்படுத்துகிறதன்றோ?

கணவன் வெளியிற் சென்று அயராது உழைத்துப் பொருளீட்டலும் மனைவி வீட்டிலிருந்து இல்லறம் ஓம்பலும் அற்றைநாட் பணி முறைகளாகும்.

"வினையே ஆடவர்க்கு உயிர்; மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" எனக்கருதி ஒழுகினர். மனைவி அடுப்பூதிச் சமைக்கும் அடிமைப்பெண்ணாகக் கருதப்பட்டிலள். அதனாலேயே திருவள்ளுவர் மனைவியை வாழ்க்கைத் துணை என அழைத்து அவர் தம் மாட்சிமையை வகையுறப் புகலுகின்றார்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" (குறள்-52)

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" (குறள்-53)

என்னும் குறட்பாக்களை நோக்குமின்! மனைவியின் பெருமையை இதனினும் சிறப்பாக எவர் தாம் கூற இயலும்? சங்க காலத்தில் பெண்ணின் பெருமை இருந்தவாறென்னே!

இங்ஙனம் கணவனும் மனைவியும் இருதலைப் புள்ளின் ஓருயிராய் இல்லறம் நடத்துங்கால், ஈதலும்

இசைபட வாழ்தலுமே யன்றி மக்கட்பேற்ருலும் இன்பம் துய்த்தனர். மக்கட்பேற்றை, மனை மாட்சியை மங்கலமாகப் பெற்ற இல்லறத்தின் நன் கலமாக நன்கு போற்றினர்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள்- 64)
"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (குறள்-65)
"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்" (குறள்-66)

எனப் பல்வேறு இன்பங்களைக் குழந்தைகள்பால் கொண்டனர்.

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே" (புறம்-188)

என முழங்கினர்; மக்கட்பேறில்லார் மாழ்கினர் "மக்கள் வேண்டாம்; வேண்டாம்" என்று அன்று உரைத்தாரிலர். மாருக "மக்களைப் பெறுக; பெறுக" என வாழ்த்தினர். அதற்குரிய வழி முறைகளையும் காட்டினர். ஆகவே மக்களைப் பெற்று மனையறம் காத்துச் சுற்றம் தழுவிச் சோர்விலாது சிறந்தன செய்து வாழ்தலே இல்லறம் என்று கொண்டிருந்தனர்.

"காமம் சான்ற கடைகோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்பொ.192)

என ஆசிரியர் தொல்காப்பியர் அழகுற இல்லறத்தின் பயனை எடுத்துரைத்தார். அதனாலேயே தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்" (குறள்-46)

என உலகத்தாரை நோக்கி உரத்த குரலில் வினவினார்.

பிறரையும் நன்னெறியில் ஒழுகச்செய்து தாமும் அறநெறி பிறழாது வாழ வகை செய்யும் இல்லறம் துறவறத்தினும் பெருமை யுடையது; நோன்மை யுடையது. ஆதலின் இல்லற நெறியே பிற எந்நெறியினும் மேம்பட்டதாகும். இல்லற நெறியின் இயல்நெறி வழாது வாழ்பவர் இவ்வுலகின் கண்ணிற் காணும் கடவுளெனக் கருதப்பட்டுப் போற்றப் படுவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்-50)

இல்லறச் சிறப்பே நாட்டின் ஏற்றத்திற்குரிய நல்லறச் சிறப்பாகும். இதனைத் தெளிந்த சங்க காலத் தமிழர் இல்லறத்தை இனிது போற்றி எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழ்ந்தனர்.

"இல்லறமல்லது நல்லறமில்லை."

# 8. கடவுட் கொள்கை

சங்க காலத் தமிழ் மக்கள் உயர் பண்பாடு உடையவர்கள் என்பதனை அவர்கள் கொண்டிருந்த கடவுட் கொள்கையும் நன்கு நிறுவும். 'கடவுள்' என்னும் சொல்லே அவர்கள் கடவுளைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தினை நன்கு விளக்கும். 'கடவுள்' என்றால் "உள்ளத்தைக் கடந்தது" என்பதாகும். உள்ளத்தாலும் உணர இயலாத இயல்பினது 'கடவுள்' என்பதுதானே கடவுளைப்பற்றிய உண்மைக் கொள்கையாகும். இதனை நன்கு தெளிந்திருந்தனர் என்பதனைக் 'கடவுள்' எனும் சொல் தெற்றெனப் புலப்படுத்துகின்றதன்றோ?

ஆகவே சங்ககாலமக்ககள் அச்சத்தால் பாம்பையும் மின்னலையும் இடியையும் பேயையும் வழிபட்டனர் என்னும் கூற்று உண்மையொடு பொருந்தாதாகின்றது. கடவுளைப் அருவப் பொருளாகவேஅறிந்து என்றும் கடவுள் உணர்வுடையவர்களாகவே வாழ்ந்தார்கள். கடவுட் கொள்கைக்கு மாறான கொள்கையை அவர் அறியார்.

யாவரும் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு உணவே இன்றியமையாதது என்பதனை அறியாதார் இலர். உணவுக்குப் பிறகுதான் ஏனைய.

ஆயினும் சங்ககாலத் தமிழ் மக்கள் உணவினும் முதன்மையாகக் கடவுளைக் கருதி வாழ்ந்தனர். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தில் பாடற் பொருள், முதல், கரு, உரி எனவகுக்கப்பட்டுள்ளது. கருப்பொருள் பற்றிய நூற்பா:

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
இவ்வகை பிறவும் கருவன மொழிப"[1]

என அமைந்துள்ளது. இதில் உணவுக்குமுன்பு தெய்வத்தை வைத்துள்ள சீர்மையை ஓர்ந்து 'உணவினும் தெய்வமே முதன்மையாகப் போற்ற வேண்டிய ஒன்று' என்று அன்று கருதியிருந்தனர் என்பதனைத் தெளியலாம்.

இன்னும் முதற் பொருளாம் நிலம்பற்றிக் கூற வந்தவிடத்து, நிலத்துக்குரிய பிற சிறப்புகளை விடுத்து கடவுட் சிறப்பையே தொடர்புபடுத்திக் கூறியுள்ளமையாலும், கடவுட் கொள்கைக்கு அக்கால மக்கள் வைத்திருந்த ஏற்றத்தை எளிதேஅறியலாம். கடவுளை வாழ்த்தியும் வணங்கியும் வழிபட்டார்கள்.

கடவுளை உள்ளங்கடந்த உரைக்கு அப்பாற்பட்ட அருவப் பொருளாகக் கருதிய போதினும், அதற்குப் பல்வேறு உருவங்களைக் கற்பித்துப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு முறைகளில் வழிபட்டனர். தம் குறை அகலவும் பிறர் குறை நீங்கவும் கடவுளைப் போற்றியுள்ளனர். பூவும் நெல்லும் படைத்தும் பரவியுள்ளனர். மக்களின் அறிவு நிலை

1. தொல், பொருள்-18.

பண்பு நிலை முதலியவற்றிற்கு ஏற்ப கடவுள் வழி பாட்டு முறையும் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் கடவுளைக் குறிஞ்சி நில மக்கள் 'சேயோன்' என்றும், முல்லை நில மக்கள் 'மாயோன்' என்றும் மருத நில மக்கள் 'வேந்தன்' என்றும், நெய்தல் நில மக்கள் 'வண்ணன்' அல்லது 'வருணன்' என்றும் அழைத்துள்ளனர் என்று முன்பு சுட்டிக் காட்டினோம். வெற்றி பெறுவதற்குத் துணை புரியும் கடவுள் 'கொற்றவை' என்று கூறப்பட்டுள்ளது. 'கொற்றம்' என்றால் 'வெற்றி' — கொற்றத்திற்குரியள் கொற்றவையாவாள். கடவுளைப் பெண்ணாக வழிபடும் முறைத் தமிழகத்திற்கே உரித்து என்பர்.

தொல்காப்பியம் தோன்றி ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குப் பின்னர் வந்த உரையாசிரியர்கள் வடமொழி நூல்களைக் கற்றதன் பயனால் மாயோனைத் திருமால் என்றும்,வேந்தனை இந்திரன்என்றும் வண்ணனை மழைக் கடவுளாம் வருணன் என்றும், கொற்றவையைத் துர்க்கை என்றும் அறிவித்தனர். ஆனால் பழந்தமிழர்கள் கடவுள் ஒருவரே என்றும் அவருக்குப் பல்வேறு பெயர்கள் உண்டு என்றும் அறிந்திருந்தனர். காடு இடையிட்டும் மலை இடையிட்டும் கடலிடையிட்டும் பிரிக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் அவரவர் உணர்ச்சி நுகர்ச்சிக்கேற்ப கடவுளுக்குப் பெயரிட்டனர். பின்னர் வடமொழிப் புராணங்களும் சமய வெறியும் ஏற்பட்டு ஒவ்வொரு பெயரும் வெவ்வேறு கடவுளைக் குறித்ததாகக் கொண்டு தத்தம் கடவுள் பெயரால் போரிட்டுக்

கொண்டனர். சங்க காலத்தில் இந்த அவல நிலை இல்லை. ஒரு குறிப்பிட்ட சமயமும் அதற்குரிய தனி அடையாளங்களும்வழிபாட்டு முறைகளும்இருந்தன என்று கூறுவதற்குரிய சான்றுகள் இல.

தொல்காப்பியத்தில் கூறப்படாத பெயர்கள் அதற்குப் பின்னர்த் தோன்றிய சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.

திருக்குறளில் ஆதிபகவன், வாலறிவன், மலர் மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு வமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான் முதலிய பெயர்கள் கடவுளைக் குறிக்க வந்துள்ளன. இவையெல்லாம் கடவுளின் இயல்பு, பண்பு, ஆற்றல் அடிப்படையில் தோன்றியுள்ளன. இப்பெயர்களுட் சில புத்தமதத் தலைவரையும் சமண மதத் தலைவரையும் குறிக்கும்பெயர்களோடு ஒப்புமை யுடையனவாய்க் காணப்படுவதனால் "சமயக் கணக் கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது வென்ற" திருவள்ளுவரை இச்சமயங்களுக்கு உரிய வராக்கி இப்பெயர்கள் தம் சமயக் கடவுளையே குறிக் கும் என்று முழங்குவர். தொல்காப்பியரையும் பௌத்தர் அல்லது சமணராக்குவர் சிலர்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் புத்த சமண சமயங்களுக்கு உரியவர் அல்லர் என்பதனை அவர்கள் நூல்களே தெளிவுற அறிவுறுத்துகின்றன. தொல் காப்பியர் அவ்விரண்டு சமயங்களும் தோன்றுவதற்கு முன்னர் தோன்றியவர். திருவள்ளுவரோ சமயச்

சார்பற்ற கடவுளுணர்வோடு கூடிய ஒழுக்கமுறை வாழ்க்கையை உலகுக்குக் காட்டியவர். பௌத்தராகவோ சமணராகவோ இருந்திருப்பின் தம் நூலை இவ்வாறு சமயச் சார்பற்றதாய் இயற்றியிருக்கமாட்டார். ஆகவே திருவள்ளுவர் காலம் வரை தமிழர் சமயம், கடவுட்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் முறையாகவே இருந்துள்ளது. பின்னரும் கி. பி. முதல் நூற்றாண்டு வரையும் அவ்வாறே இருந்தபோதிலும் கடவுள் பற்றிய கதைகளில் பயின்றுள்ள பெயர்களும் வழக்கில் இருந்துள்ளன. அருவமாய், உள்ளத்திற்கும் எட்டாது உரை கடந்து நின்ற ஒரே கடவுள் நால்வராக உலகம் காப்பதாகக் கருதப்படும் நிலை உருவாகிவிட்டது.

"ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றரும் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல் வெந் நாஞ்சில் பனைக்கொடியோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி ஒண் செய்யோனும் என
ஞாலங் காக்கும் கால முன்பில்
தோலா நல்லிசை நால்வர்." (புறம்-56)

என நக்கீரனார் கூறியுள்ளார்.

இக்கூற்றில் உருவம் பெற்றுள்ள நான்கு கடவுளர்களும் அவரவர்க்குத் தனித்தனி நிறம், ஊர்தி, கருவி, கொடி முதலியனவும் காண்கின்றோம்.

மணிமிடற்றோனை நீலகண்டன் என்றும், பனைக் கொடியோனைப் பலராமன் என்றும், விறல்

வெய்யோனைத் திருமால் என்றும், ஒண் செய்யோனை முருகன் என்றும் மக்கள் அழைத்துள்ளனர் என்று உய்த்துணரலாம்.

தொல்காப்பியத்தில் (எழுத்து- உயிர் மயங்கியல் நூற்பா-83) பனையும் கொடியும் சேருங்கால் உண்டாகும் ஒலி மாறுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'பனைக்கொடி' என்பது தொல்காப்பியர் காலவழக்காயின் பனைக்கொடியோன் எனக் கடவுள் அழைக்கப்பட்ட வழக்கும் அன்று முதலாக இருந்திருக்க வேண்டும். ஆகவே கடவுளை அருவப் பொருளாகவே கருதிக் கற்றோர் வழிபட்ட போதிலும் பொதுமக்களிடையே உருவக்கடவுட் கொள்கையே உரம் பெற்றிருந்தது என்று உணரலாம். உருவக் கடவுட் கொள்கையே அருவக் கடவுட் கொள்கையினும் தொன்மை வாய்ந்ததாகும்.

தொடக்க காலத்தில் உருவக் கடவுட்கொள்கையைக் கொண்டிருந்த மக்கள் படிப்படியாகப் பண்பட்டு உணர்ச்சியால்தான் கடவுளின் அருவ இயல்பை அறிந்திருக்க வேண்டும். எனவே இருவகை வழிபாட்டு முறையும் நிலவியதில் வியப்பில்லை. "கடவுள் ஓருருவம் ஒரு நாமம் ஒன்றுமிலார்" ஆயினும் அவர்க்கு உருவமும் பெயரும் கொடுத்து மக்கள் நிலைக்குக் கொண்டுவந்து வழிபடுதலே இனியதும் எளியதும் ஆகுமென பழந்தமிழர் கண்டனர். அதனாலேயே கோயில்கள் தோன்றின.

முருகனுக்குரிய முதன்மையான கோவில்கள் ஆறு பற்றித் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் அழகுறக் கூறியுள்ளார். முருகனைப் பல்வேறு முறை

களில் வழிபட்ட நெறியையும் ஆங்காங்கு இயம்பி யுள்ளார். பிறவடிவுகளில் வழிபட்ட செயல் முறை பற்றிப் பிற்கால இலக்கியங்களில் பெரிதும் காண லாம். ஆனால் முருகனை வழிபட்ட முறைபற்றித்தான் சங்க இலக்கியமாம் திருமுருகாற்றுப்படையில் விரித் துக் கூறப்பட்டிருப்பதால் கடவுளுக்கு முதலில் இடப்பட்ட பெயர் முருகன் என்றும் அவனை வழி பட்ட முறையே தொன்மையான தென்றும் உணர லாகும். முருகனை மலைப்பகுதிக்குரிய கடவுள் என்பர். கடலால் சூழப்பட்டிருந்த உலகில் முதலில் வெளிப் பட்டது மலைப் பகுதியே யாகும் என்பர். ஆதலின் ஏனைய முல்லை (காடு), மருதம் (வயல்), நெய்தல் (கடற்கரை) பகுதிகளிலும் குறிஞ்சிப் (மலை) பகுதியே மக்கள் தோற்றத்தின் முதலிடமாகும். அங்குத் தோன்றிய முதற்கடவுளே முருகன்.

'முருகு' என்னும் சொல்லுக்கு இளமை, அழகு, மணம் முதலிய பல பொருள்கள் உள. 'முருகன்' எனில் இளைஞன், அழகன், மணமுடையோன் எனும் பொருள் தரும். இளமை, அழகு, மணம் இவற்றை விரும்பாதார் யார்? பழந்தமிழர் இவற்றில் பெரு விருப்புடையோராய் இருந்தமையால் தாம் வழிபட எண்ணிய கடவுளுக்கும் இவை இருத்தல் வேண்டும் என்று கருதினர் போலும். மக்களின் கருத்துக் கேற்பவே கடவுள் வடிவம் அமைவது இயல்பு.

கடவுளை ஆண்பால் முருகனாக அமைத்துக் கொண்டதிலிருந்து அக்காலத்தில் ஆண்களின்செல் வாக்கு மிகுந்திருந்தது என்பதும், ஆணினமே தலைமை தாங்கி மன்பதையை நடத்திச் சென்றது

என்பதும் அறியப்படும். பெண்களின் மதிப்பு உயர்ந்து அவர்களை நாடு கொண்டாடத் தொடங்கிய காலத்தில்தான் பெண் வடிவிலும் கடவுளை வழிபடத் தொடங்கி இருப்பர். தொல்காப்பியர் காலத்தில் இருவகை வடிவிலும் கடவுளைப் போற்றினர். ஆனால் ஒரே வடிவில் இருபால்களை (ஆண், பெண்) யும் கொண்ட உமையொருபாகர் வழிபாடு அவர் காலத்தில் இருந்திலது போலும். பின்னர் கடவுளுக்கும் கணவன் மனைவி மக்கள் முதலிய உறவு முறைகளைக் கற்பித்தனர். கற்பித்துச் சொல்லும் ஆற்றல் மிக மிக கடவுளைப்பற்றிய பல கதைகளைக் கற்பித்து மக்களிடையே பரப்பினர். சங்க காலத்தில் இக்கதைகளும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. பண்புகளைப் பண்பிகளாக உருவகப் படுத்திச் சொல்லும் முறையாலும் கடவுட் கதைகள் வளரலாயின. ஆயினும் "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண் மூடி வழக்கம்" கால்கொண்டிலது. கோயில்களும் விழாவும் பூசை முறைகளும் மிகுந்திருந்த போதிலும் புரோகித முறையும் வேற்று மொழிமந்திரமும் தலைகாட்ட வில்லை. கடவுளின் அருவ இயல்பில் ஆழ்ந்து உருவ இயல்பைக் கொண்டாடிச் சங்க கால மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

# 9. மெய்யுணர்வுக் கொள்கை

வாழ்வியல் உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்த முற்படுபவர்கள் சான்றோர்கள் எனச் சிறப்பிக்கப்படுவார்கள். இவர்களே உயர்ந்தோர் என மதிக்கப்படும் தகுதியுடையவர்கள். இவ்வுயர்ந்தோர் வழியே ஏனையோர் செல்லுதல் வேண்டும் என்பது பழந்தமிழர் கொள்கை.

உயர்ந்தோர் வழக்குத்தான் உலக வழக்காகக் கருதப்பட்டது. உலக நிகழ்ச்சியை இயக்க வேண்டியவர்கள் உயர்ந்தோர்களே என எண்ணினர்.

> "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான" (தொ. பொ. 647)

என ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் உரைத்துள்ளார். உயர்ந்தோரை மதித்து அவர் வழி இயங்கும் நாடுதான் எல்லா வகையாலும் சிறப்புற்று இயங்கும். சங்க காலத் தமிழகம் பல்வகையானும் சிறப்புற்று விளங்கியமைக்குக் காரணம் அக்காலத்தில் சான்றோர்கள் நன்கு மக்களை நடத்திச் சென்றமையே யாகும்.

ஏனைய நாடுகளில் புலவர்கள் மெய்யுணர்வுக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும்

மெய்யுணர்வாணர்களிற் பெரும்பான்மையினர் புலவர்களாய் இருந்ததில்லை. ஈங்கோ எனின் மெய்யுணர்வாணர்கள் அனைவரும் பெரும் புலவர்களாகவும் விளங்கி யுள்ளனர். சாக்கிரடீசு, புத்தர், இயேசு, மகம்மது முதலிய மெய்யுணர்வுப் பெரியார்கள் மொழித்துறைப் புலமையற்றவர்களே. ஆனால் தமிழ் நாட்டு மெய்யுணர்வாளராம் திருவள்ளுவர் மொழித்துறைப் புலமைமிக்க முதுபெரும் புலவருமாவார். தாம் உலகுக்கு அறிவிக்க விரும்பிய வாழ்வியல் உண்மைகளை இனிய குறள் வெண்பாவால் எடுத்துரைத்தார். உலகோர் வியப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாய் உள்ள 'தாசுமகால்' எனும் கவினுறு கட்டிடத்தில் ஒரு கல்லை அகற்றிவிட்டு அவ்விடத்தில் வேறொரு கல்லைப் பொருத்தி, எடுத்ததும் வைத்ததும் அறிய இயலாதவாறு செய்து விடலாம். ஆனால் திட்ப நுட்பம் செறிந்த திருக்குறளில் ஓரசையையோ சீரையோ மாற்றி அமைத்துப் பிறர் அறியாதவாறு மறைத்து வைத்தல் இயலாது. யாப்பமைதியானும், உவம நலத்தானும், பொருட் சிறப்பானும் திருக்குறள் சிறந்த இலக்கியமாகவும் கருதத்தகும் நிலையை அடைந்துள்ளமையால் திருவள்ளுவரைப் பெரும்புலவர்களுள் ஒருவராகவே கருதி சாக்கிரடீசு, இயேசு முதலிய மெய்யுணர்வாளர் குழுவினுள் ஒருவராக மதிக்கத் தவறி விட்டனர் உலகோர். ஆனால் ஏனைய உலக மெய்யுணர்வாளர்கள் எல்லோரும் அவரவர் காலத்துக்கும் நாட்டுக்கும் ஏற்பவே வாழ்வியல் உண்மைகளைக் கூறியிருப்பவும், திருவள்ளுவர் எக்காலத்துக்கும் எந்நாட்டுக்கும் ஏற்பவே கூறியுள்ளார். பிறநாட்டு

மெய்யுணர்வாளர்களைப் பின்பற்றியோர் தனித் தனி மதத்தினராக வேறுபடும் நிலையை அடைந்து மதப் பூசல்கள் தோன்றுவதற்குரிய வாழ்வினராய் விட்டனர். ஆனால் திருவள்ளுவரைப் பின்பற்றுவோர் உலக மன்பதைக்குரியோராய் ஒன்று பட்டு வாழும் நெறியினராய் இலங்குவர். ஆதலின் திருவள்ளுவரே நாடு, மொழி, இனம், சமயம் கடந்த உலக மெய் யுணர்வாளராகக் கொள்ளத்தகும் பெருமைக்கும் தகுதிக்கும் உரியவராவார்.

தொல்காப்பியர்க்கும் திருவள்ளுவர்க்கும் மிக மிக முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்வியல் பற்றிய உண்மைகளைப் பழந்தமிழர் பகுத்தறிந்துள்ளனர். அறநெறியில் பொருளை ஈட்டி, இன்பம் துய்த்து வாழ்தலே தமிழர் கண்ட வாழ்வியல் உண்மை யாகும். அறம் பொருள் இன்பம் எனும் மூன்றுமே மும்முதற் பொருள் எனப்பட்டன. இவ்வுண்மை களை மக்களுக்கு விளக்கவே இலக்கியங்கள் இயற் றப்பட வேண்டும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

"அந்நிலை மருங்கின் அறம் முதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொ. பொ. 418)

பொதுவாகவன்றிச் சிறப்பினால் எவரேனும் ஒரு வர்க்கோ பலர்க்கோ வாழ்வியல் உண்மைகளை அறி விக்கப் பாடப்படும் பாடல்கள் புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ எனப்படும் எனக்கூறி, அவை இயற்றுவதற்குரிய இலக்கண மும் ஆசிரியர் கூறியுள்ளார். இவற்றால் 'இலக்கியம்' என்பது மெய்யுணர்வுக் கருத்துக்களை வெளிப்படுத்

துவதாக இருத்தல் வேண்டுமென்பதே ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தாகும் என்று தெளியலாம். அன்றியும் தொல்காப்பியப் பொருட் படலத்தில் வந்துள்ள காஞ்சித் திணை உலகியல் மெய்யுணர்வுக் கொள்கைகளை உரைக்கும் இலக்கியம் பற்றியதாகும். காஞ்சியென்பது உலக நிலையாமையைக் குறித்து வருவதாகும்.

**" பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்**
**நில்லா வுலகம் புல்லிய நெறித்தே "** (தொ. பொ. 78)

என்பதே அதன் இலக்கணம். உலகம் நிலையற்றது என்று அறிவுறுத்தியது. உலக வாழ்வில் வெறுப்புக் கொள்வதற்காக அன்று; அதை விரும்பி நன் முறையில் வாழ்ந்து மறைய வேண்டும் என்பதற்காகவேயாகும். இந்நிலையாமை உணர்வு நாள்தோறும் சோம்பரின்றிக் கடனாற்றவும், செயற்கரும் செயல்களை விரைந்து செய்யவும், கிடைத்தவற்றை உரிய காலத்தில் தானும் துய்த்துப் பிறர்க்கும் உதவவும் பெருந்துணை புரியுமன்றோ?

திருக்குறள், தொல்காப்பியத்தைப் பின்பற்றி வாழ்வியல் உண்மைகளை உணர்த்தவே எழுந்ததாகும் என்பது வெளிப்படை. உலகில் தோன்றிய பெரியார்கள் எல்லாரும் " வாழ்வே துன்பமானது; அதனின்றும் கடைத்தேறுவதற்கு முயல்வதே பிறந்ததன் பயன் " என்று அறிவுறுத்தினர். ஆனால் திருவள்ளுவர்தாம் " வாழ்வு இன்பமானது; அது வாழ்வதற்குரியது " என்று கட்டுரைத்தார். திருக்குறளைச் செருமானிய மொழிபெயர்ப்பில் கற்றறிந்த பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவிட்சர் என்பவர் இதனைச்

சுட்டிக்காட்டி, " இது போன்றதொரு உயர்பேருண்மைகளைக் கொண்டதொரு மெய்யுணர்வுத் தொகுப்பு உலக இலக்கியங்களில் காண்பதரிது" எனத் தம் " இந்திய எண்ணமும் அதன் வளர்ச்சியும் "(Indian thought and its Development) எனும் நூலில்பாராட்டிக் கூறியுள்ளார். திருக்குறளாம் மெய்யுணர்வு நூலைத் தமிழர் பெற்றிருப்பதனால்தான் தமிழர்க்குப் பெருமை என்பதனை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனும் பாரதியார் புகழுரையால் அறியலாகும். திருக்குறளுக்கு முன்னும் பின்னும் தோன்றிய சங்க இலக்கியங்களுள், பல மெய்யுணர்வுக் கொள்கைகள் ஆங்காங்கு இலைமறை காய் போல் பொதிந்து கிடக்கின்றன.

இவ்வுலகு நாடக மேடை போன்றது. அதில் வாழும் மக்கள் நடிகர்கள் ஆவார்கள். நாடகமேடையில் நடிகர்கள் தாம் கொண்டுள்ள கோலத்திற்கேற்ப நடித்துவிட்டு மறைவது போன்று மக்களும் அவரவர் தோன்றியுள்ள நிலைக்கு ஏற்ப வாழ்ந்துவிட்டு மறைகின்றனர். மேடையில் திறம்பட நடிப்போர் சிறப்புறுவது போன்று உலக வாழ்விலும் திறம்படச் செயலாற்றுவோர் இசை பெறுகின்றனர். இவ்வுலகியல் உண்மையை உறையூர் முதுகண்ணன் சாத்தனர் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியைப் பாடுங்கால்,

" விழவிற் கோடியர் நீர்மைபோல முறை முறை ஆடு நர்
கழியும் இவ்வுலகம்" (புறம்-29)

என்று குறிப்பிட்டுள்ளார்.

"உலகம் ஒன்றே; ஒன்றே உலகம்" என்னும் முழக்கம் இப்பொழுது எங்கும் முழங்குகிறது. இதனை யாவரும் வரவேற்றுப் போற்றுகின்றனர். இக்கொள்கை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழரால் போற்றப்பட்டது.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" (புறம்-192)

என்பதனை நோக்குமின்.

இவ்வுலகம் நன்றாவதும் தீதாவதும் மக்களால் தான் எனும் உண்மையை நன்கு அறிந்திருந்தனர்.

"நாடாகொன்றோ; காடா கொன்றோ
அவலாகொன்றோ; மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்-187)

என வாழ்த்தினர்.

உழைப்போரும் உயர் பண்புடையோரும் மிக்குள்ள இடம் எதுவாயினும் அது சிறந்து விளங்கும். உலகை நன்றாக்குதற்குரிய பொறுப்பினைப் பெண்டிரினும் ஆடவர்க்கே மிகுதியும் உரித்தாக்கியுள்ளது சிந்திக்கற்பாலது. மகளிர் என்றும் நல்லவரே; ஆடவரைச் சார்ந்து உலகை எழிலாகவும் இன்பமாகவும் இருக்கத் தொண்டு புரிவோர். தலைமைப் பொறுப்பும் முன்னின்று செயல் புரியும் திறனும் கடமையும் பெரும்பான்மையும் ஆடவர்க்கே இயல்பாயமைந்த குண நலன்களாய் இருத்தலின் உலக நன்மை ஆடவரையே சார்ந்துள்ளது என்ற உண்மை வெளியிடப்பட்டுள்ளது போலும். உலகம் இன்பம் துன்பம் எனும் இரண்டிற்கும் நிலைக்களமாயது. அவரவர் உள நிலைக்கு ஏற்ப, வாழ்வு இன்பமாகவோ

துன்பமாகவோ அமையும். இனிய நிகழ்ச்சிகள் தோன்றுங்கால் இன்பம் உறுவது போன்று துன்ப நிகழ்ச்சிகள் தோன்றுங்காலும் அவற்றுளும் இன்பம் காணும் இயல்பை உலகோர் பெற்றிடவேண்டும்.

> "இன்னு தம்ம இவ்வுலகம்;
> இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே" (புறம்-194)

ஆதலின் துன்பத்தைக் கண்டு உலகை வெறுத்து விடுதல் கூடாது. அங்ஙனம் வெறுப்போர் உலகியல் அறியாதவரே யாவர்.

> "இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
> நண்பகல் அமையமும் இரவும் போல" (அகம்-327)

உளவாகும் என்பதனைச் சங்ககாலத் தமிழர் அறிந்து வாழ்ந்தனர்.

உலக வாழ்வுக்கு உயிர் போன்றது செல்வம். செல்வத்தை வெறுக்கும் கொள்கைகளை உடையோரும் செல்வமின்றி வாழ முடியாது என்று அறிந்து செல்வத்தைத் தேடிக்கொண்டே வாயினல் வெறுத்துக்கொண்டிருப்பர். பொருள் நிலை அடிப்படையில் தான் உலகியல் வாழ்வு முறைகள் அமைகின்றன என்பதை யாராலும் மறுத்தல் இயலாது. இதனைச் சங்க காலத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர்.

> "அறன் கடைப்படாஅ வாழ்க்கையும் என்றும்
> பிறன் கடைச்செலாஅச் செல்வமும் இரண்டும்
> பொருளி னுகும்" (அகம்-155)

எனப் பொருளைப் போற்றினர். மக்கள் அறநெறி கோடித் தீய வழிகளில் செல்வதற்கும், பிறரிடம் அடிமையாவதற்கும் பொருளின்மையே காரணம்

என்று தெளிவாக உரைத்திருப்பது இக்காலப் பொருள் நூலார் கோட்பாட்டுக்கு ஒத்ததாக அன்றோ உளது.

"பொருள் நிலை சீருறின் உலகப் பொல்லாங்கு எல்லாம் ஒழியும்" எனும் பொருளுரையைப் போற்றாதார் தம்மைப் போற்றாரே. எனவே இதனை நன்கு வற்புறுத்தினர் சங்க காலப் பெரியோர்கள்.

> **"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்**
> **செய்வினைக் கைம் மிக எண்ணுதி"** (குறுந்தொகை 63)

> **"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
> **அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு இல்"**
> (நற்றிணை-214)

என உழைத்துப் பொருளீட்டாதார்க்கு ஒன்றுமே இல்லென உணர்ந்திருந்தனர்.

தம் வாழ்வு நலங்களைப் பெருக்கவே பொருளினை ஈட்டினும், பொருளின் பயன் அது மட்டுமன்று. அவ்வாறு கருதுவோர் வாழ்வின் பயனை அறியாதோரே.

> **"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
> **ஊதிய மில்லை உயிர்க்கு"** (குறள்-231)

என்றார் பொய்யா மொழியார். பொருளை ஈட்டிப் பெட்டியில் வைத்துப் பூட்டி மகிழ்வோர் இழப்பன பலவாகும். இவ்வுலகு முழுதும் ஆளும் அரசரேயாயினும், காட்டில் வேட்டையாடி வயிறு வளர்க்கும் வேடரேயாயினும் உண்ணல், உடுத்தல், பிற நலங்களைத் துய்த்தல் என்பனவற்றுள் ஒரே நிலையினரே. அக்கால வாழ்வு முறையின்படி—ஏன் இக்

காலத்திற் கூட—உலகையாளும் அரசர் என்பதனல் ஒரு மூட்டை அரிசியை ஒரே வேளையில் உண்டல் இயலாது. யாவர்க்கும் அளவு நாழி அரிசிதான். உடுப்பதற்குக் கீழ் ஓர் ஆடை; மேல் ஓர் ஆடை. மணத்தலும் மக்களைப் பெறுதலும் பிறரைப் போன்றுதான் அரசனுக்கும். ஆகவே எல்லோரும் ஓர் நிலை என்பதனை உணர்ந்து, பெற்ற செல்வத்தைப் பிறர்க்கு ஈதல் வேண்டும் என்ற மெய்யுணர்வைப் புலவர்கள் பரப்பி வந்தனர்.

**"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி**
**வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்**
**நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி; உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே"** (புறம்-189)

இவ்வாறு ஈதற்குப் பயன்படும் செல்வத்தை உழைத்து ஈட்டாது பிறரை இரந்து வாழ்வோர் அன்றுமிருந்தனர். ஈதல் வேண்டுமென்ருல் இரப்போர் இருந்துதானே ஆகவேண்டும். ஈதலறம் செய்வதற்காக இரந்து வாழுங் கூட்டத்தை உருவாக்குதல் நன்ருகுமோ? ஈதல் சிறப்பிக்கப்படும் பொழுது இரத்தலும் சிறப்பிக்கப்பட்டுத்தானே ஆக வேண்டும். இரத்தலை ஊக்குவிக்கும் மெய்யுணர்வு ஏற்றமுடைத்தன்றே. ஆதலின் திருவள்ளுவர்,

**"நல்லா றெனினும் கொளல்தீது; மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று".** (குறள்-222)

என இரத்தலின் தீமையையும் ஈதலின் நன்மையை யும் எடுத்து மொழிந்தார்.

“ஈதலும் வேண்டும்; இரத்தலும் கூடாது என்பது முரண்படுகின்றதே. இரப்போரின்றி ஈதல் நிகழ்தல் எவ்வாறு?” என வினவலாம். ஆம்; ஈதலுக்கு இரப்போர் வேண்டும்தான். இழித்துக் கூறப்படும் இரத்தலைச் செய்து வாழ வேண்டியவர் களும் உளர். அவர்கள் “காணார், கேளார், கால் கை முடப்பட்டோர், பிணி நடுக்குற்ரோர்” முதலியோர் ஆவார்கள். தம்மால் உழைத்து வாழ முடியாத வர்க்கு உதவ வேண்டியது உடையோர் கடனன்றோ? ஆதலின் அவரை நாடி ஈதல் வேண்டும்.

இரத்தல் இழிவுதான்; ஆனல் ஒருவர் இரக்குங் கால் ஈயாமல் இருத்தல் அதனினும் இழவாகும். கொடுத்தல் உயர்வுதான்; ஆனல் ஒருவர் வலிய வந்து கொடுக்குங்காலும் கொள்ளேன் என்றல் கொடுத்தலினும் உயர்வாகும். இவை வாழ்வியலில் உயர்வுபெற விரும்புவோர் அறிந்து கொள்ள வேண் டிய உண்மைகள். இரத்தல் கூடாது என்பதனை இரப்போன் அறிதல் வேண்டுமேயன்றி ஈயும் நிலை யில் உள்ளோர் ஈயாது இருத்தல் கூடாது. கொடுப் பதன் உயர்வையறிந்து உடையோர் கொடுக்க வருங்கால் கொள்வதன் இழிவை யறிந்து வேண் டாம் என மறுத்தல் கொடுத்தலினும் உயர்வுடைய தாய் விடும். இவ்வுண்மைகளைக் கழைதின்யானையார் எனும் பெரும் புலவர் அழகுறக் கூறியுள்ளார்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று:
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"
(புறம்-204)

உடைமையும் இன்மையும் உலகில் உள்ளவரை ஈதலும் இரத்தலும் இருந்துதான் ஆகும். ஆயினும் என்றும் ஈதல் நன்றுதான்; இரத்தல் தீதுதான். இன்று நாட்டுக்குநாடு ஈதலும் இரத்தலும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. 'இரத்தல் கூடாது' என்று சட்டமியற்றிய நாடுகள்கூட பிற நாட்டுக்கு ஈதலும், பிற நாடுகளிலிருந்து (இரத்தலும்) கொள்ளலும் ஆற்றிக்கொண்டுதான் உள்ளன. ஈயும் நாடு உயர்வாகவும் இரக்கும் நாடு தாழ்வாகவும் மதிக்கப்படும் நிலை இல்லாமலும் இல்லை.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (குறள்-751)

எனப் பொருளின் இன்றியமையாமையை யறிந்து பொருளீட்டலைச் செய்தனராயினும் காதல் வாழ்வில் பொருளுக்கு முதன்மையளித்திலர். பொருளீட்டலும் காதல் துய்த்தலும் ஒருங்கே நிகழ முடியாத காலத்தில் காதலே பெரிது என்று கருதிப் பொருளீட்டலைப் புறத்தே தள்ளும் கொள்கையும் உருவாகியுள்ளது.

"தாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இழிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சிய தருமையும்"

அறிந்திருந்த காதலர் பின்வருமாறு எண்ணினர்.

"சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணுதும் செல்லார்
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்
ஒரோஒ கைதம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன் கூறுடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு." (பாலைக்கலி-17)

காதலின் முன் செல்வம் மதிப்பிழந்து விட்டது. இளமையின் முதன்மையும் அதன் நிலையற்ற தன்மையும் இவ்வாறு எண்ணுமாறு செய்து விட்டது. ஆயினும் தம் முன்னோர் ஈட்டிய பொருளே துணையாக வாழ்ந்து மேலும் பொருளீட்டாது வறுமைப் படும் இளிவரல் வாழ்க்கையை வெறுத்தனர். இருக்கும் பொருளைச் செலவழித்துக் கொண்டிருப் போரை இறந்தோராகவே கருதினர். "வினையே ஆடவர்க்கு உயிர்" என்று எண்ணி வாழ்ந்த மக்கள் அவ்வாறு கருதியதும் இயல்புதானே? ஆதலின்,

"உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு"

எனும் மெய்யுணர்வு மேலோங்கி நின்றது. பொருளின் சிறப்பறிந்து வாழ்ந்து அதனை ஈட்டி வாழ்ந்த மக்கள்,

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு" (குறள் - 336)

என்னும் உண்மையையும் அறிந்திருந்தார்கள். ஆதலின் என்றும் நிலைத்துஇருக்க முடியாத உலகில் நிலைத்த ஒன்றைச் செய்யவேண்டும்என்றகொள்கை

பலராலும் வற்புறுத்தப்பட்டது. உலகம் முழுதும் ஒரு குடைக் கீழ் ஆண்ட பெருமன்னரும் ஒரு நாள் இறப்பது உறுதி என்னும் பேருண்மையை நன்கு அறிந்திருந்தனர்.

''இருங்கடல் உடுத்த இப்பெருங்கண் மாநிலம்
உடையிலே நடுவணது இடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே; சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே;

*  *  *  *

உடம்பொடு நின்ற உயிரு மில்லை." (புறம்-363)

என்ற உணர்வு வாணுளை வீணுளாக்காது உரையும் பாட்டும் பெறும் புகழொடுபட்ட செயற்கரும் செயல் களைச் செய்யத் தூண்டியது. எவ்வளவு சிறக்க வாழ்ந்தாலும் அவ்வாழ்வு தாம்வகுத்துக் கொள்ளும் சீர்பட்ட முறையால் உண்டாகும்.

'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (குறள்-505)

ஆக இருப்பதனுல் "தீதும்நன்றும் பிறர்தர வாரா" என அறிந்து, பிறரை "நோதலும் தணிதலும்"இன் றிச் "சிறியோர் என இகழ்தலும் பெரியோர் என வியத்தலும்" இலராய்த் "தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர் உண்மையாண்" உலகம் என்றும் உண்டு என்ற மெய்யுணர்வை நன்கு பெற்றிருந்தனர். மெய் யுணர்வு பெற்ற ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ரோர் பலர் ஒவ்வொரு ஊரிலும் இருந்தனர்.

# 10. பண்பாடு

நல்லாட்சியின் கீழ்க் கல்வி முதலியன பெற்று இல்லற வாழ்வில் சிறந்து கடவுளுணர்வுடையராய் மெய்யுணர்ந்த மக்கள் பண்பாட்டில் உயர்ந்தோராய் இருந்திருப்பர் என்பதில் ஐயமின்று. 'பண்புடைமை'யே மக்களை மாக்களினின்றும் பிரித்து உயர்த்துவதாகும். பண்படுத்தப்படும் வயல் நல்ல விளையுளைத் தருதல் போன்று பண்படுத்தப் படும் உள்ளமும் உலகிற்கு உயர் பயனை நல்கும். பண்புடையாளரால்தான் உலகம் வாழ்கின்றது என்று திருவள்ளுவர் தெளிவுறக் கூறியுள்ளார்.

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்'' (குறள்-996)

கல்வி கேள்விகளாற் சிறந்து கூர்த்த மதியுடையராயினும் மக்கட்கே யுரிய பண்பினைப் பெற்றிராவிடின் அவர் மரத்துக்கே ஒப்பாவார் என்பதும் திருவள்ளுவரின் சீர்சால் கருத்தாகும்.

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்'' (குறள்-997)

மக்களுக்குரிய சிறந்த இயல்பு பிறருடன் கூடி வாழ்தலே. பிறருடன் கூடி வாழ்வதற்கு இன்றிய மையாது வேண்டப்படும் இயல் பிறர் கூட்டுறவால் உள் மகிழ்ந்து நகையாடுதலாகும். இவ்வியல்பு ஒருவர்க்கு இல்லையேல் அவர்க்கு உலகம், ஞாயிறு விளங்கும் பகற்பொழுதினும் இருளடைந்ததாகும் என்பதும் பொய்யா மொழியாரின் மெய்ம்மொழி யாகும்.

''நகல் வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்." (குறள்-999)

கோடி பலயாத்து நாடு பெரிது நந்தும் பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றக் கூடிய பெருஞ் செல்வம் ஒருவர் பெற்றிருப்பினும் அவர்க்குப் பண்புடைமை யின்றேல் அச்செல்வம் முழுவதும் மாசுடைக் கலத்தில் ஊற்றிய பால்போல் கெட்டுப் பயனற்றுவிடும்.

''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று" (குறள்-1000)

என்பது செந்தமிழ்ப் பாவலரின் திருவாய் மொழி.

இவ்வாறு உலகுக்கு உயிரெனவும் ஒளி எனவும் மக்களுக்கு மாண்பு அளிப்பதெனவும் வாழ்வுக்குறு துணையாம் செல்வத்தைச் செந்நெறியில் துய்ப்பதற் குப் பயன்படு கருவி எனவும் புகழப்பட்டுள்ள பண்புடைமையில் சங்க கால மக்கள் சாலச் சிறந்து விளங்கியுள்ளார்கள்.

**பண்புடையார் இயல்புகள் யாவை?**

தமக்கென வாழாது பிறர்க்கென முயலுதல், கிடைத்தற்கரிய அமுதமே கிடைப்பினும் தாமே

உண்ணுது பிறருடன் கலந்து உண்ணுதல், வாழ்வில் வெறுப்பற்று இருத்தல், மடியைக் மடியாக்கொண்டு ஒழுகுதல், தீயவற்றிற்கு அஞ்சுதல், தம் செயலால் புகழ் உண்டாகுமாஞல் உயிரையும் கொடுத்துக் கடஞற்றுதல், உலகத்தையே கொடுத்தாலும் பழி யொடுபடும் செயலைச் செய்யாதிருத்தல், தாம் மேற்கொண்டுள்ள கருமத்தில் அயர்வற்று இருத்தல் என்பவை உயர் பண்புடையார்க்குரியனவாம்.

பிறர் நமக்கு அறிந்தோ அறியாமலோ பிழை செய்யுங்கால் நாம் நம்முடைய நற்பண்பை இழந்து விடுகின்ருேம். பிறர் பிழை பொறுத்தலும் பிழை இழைத்தார்க்கு அவர் நாணுமாறு நன்மை செய்த லும் தலையாய பண்புகளாகும்.

திருவள்ளுவர் 'இன்ஞ செய்யாமை' எனும் தலைப்பில் கூறும் கருத்துக்கள் பண்புடையார் போற்றி ஒழுக வேண்டியன.

" இன்ஞசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்" (குறள்-314)
" அறிவிஞன் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தம்நோய்போற் போற்ருக் கடை" (குறள்-315)
" இன்ஞஎனத் தான் உணர்ந்தவை துன்ஞமை
வேண்டும் பிறன்கண் செயல்" (குறள்-316)

என்பனவற்றை உளத்திற்கொண்டு எவர் ஒழுகு கின்றனரோ அவரே உயர் பண்பாளர் ஆவார். நற்பண்புகளைக் கொண்டிலங்கும் நல்லியல்பைச் 'சான்ருண்மை' என அழைப்பர் நம் வள்ளுவர் பெருமான். 'சான்ருண்மை' என்பது பல நற்குணங் களாலும் நிறைந்து அவற்றைஆளுந்தன்மையாகும். சான்ருண்மையுடையோர் சான்ருேர் எனப்படுவர்.

சான்ருண்மைக்குரிய இயல்புகள் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை, பிறர் தீமை சொல்லாமை, பணிவுடைமை, தம் தோல்வியை எவரிடமும் ஒப்புக்கொள்ளுதல், இன்ஞ செய்தார்க்கும் இனியனவே செய்தல் என்பனவாம்; இவை யுடையோரே உண்மையான பண்பாளர்; சான்ருேர். சங்க காலத்தில் இவை பண்பியல்புகள் என வற்புறுத்தப் பட்டன. பண்புடைமைக்கு உரியன எனக் கூற இவையன்றி வேறு யாவுள?

உண்மைப் பண்பு எந்நாட்டாருக்கும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய் அமையும். நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம், மாறுவது உண்மைப் பண்பாகாது. உண்மைப் பண்பு இஃது என அறிந்திருந்த சங்ககால மக்களின் சிறப்புத்தான் என்னே!

குறமகள் இள எயினி எனும் பெண்பாற் புலவர் ஏறைக்கோனின் பண்பியல்புகளைச் சிறப்பித்துக் கூறுகின்ருர்.

"தமர் தன்தப்பின் அதுநோன் றல்லும்
பிறர் கையறவு தான்நா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆதலும்
வேந்துடை யவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன வல்ல...

* * * *

பெருங்கல் நாடன்எம் ஏறைக்குத் தகுமே" (புறம்-157)

இங்கு, "தம்மைச் சார்ந்தவர் குற்றம் செய்யின் அதனைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிறர் ஒழுக்கம் கெட்ட நிலைக்குத் தான் நாணுதலும், படைக்குப் பழியளிக்காத வலிமையினைப் பெற்றிருத்தலும், அரச அவையில் செம்மாந்து நடத்தலும்"

பண்புடைச் செயல்களாகக் கூறப்பட்டுள்ளன. 'பிறர் ஒழுக்கக்கேட்டுக்குத் தான் நாணுதல்' என்பது பொன்னெழுத்தில் பொறித்து வைக்கத்தக்கது அன்ருே? உண்மைப் பண்பாளர் தம் குற்றத்திற்குத் தாம் நாணுதலன்றிப் பிறர் குற்றத்திற்காகவும் தாம் நாணுவர். ஏன்? தாம் பிறந்த மனித இனத்தைச் சார்ந்த ஒருவன் இவ்வாறு பண்பு தவறி விட்டானே என்று எண்ணுவதனுல். ஆ! ஆ! இஃதன்ருே பண்புடைமையின் உயர் உச்சியாகும். இவ்வாறு நாணுவோர் பலராக இருப்பின் மனித இனம் பண்புடைமையால் சிறந்து விளங்குமன்ருே? பண்புக் குறைபாடு உடையோரும் விரைவில் திருந்திப் பண்பு நலம் சான்றவராக இலங்குவர் அன்ருே?

கபிலர் என்னும் புலவர் பெருமான் தமது குறிஞ்சிக் கலியில் தலைவன் ஒருவன் இயல்பை வண்ணிக்கின்ருர்.

''ஒன்று இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும்; உலகம்
புரப்பான் போல்வ தோர் மதுகையும் உடையன்;
வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்
நல்லார் கண்தோன்றும் அடக்கமும் உடையன்;
இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையும் உடையன்"[1]

எனத் தோழியின் கூற்ருக அமைந்துள்ள இதில் பணிவுடைமையும், அடக்கமும், பிறர் துயர் போக்கும் வண்மையும் தலைவன் பண்பாக அமைந்துள்ள முறை எவ்வளவு இனிமையாக வெளிப்படுத்தப்படுகின்றது. இப்பண்பு நலன்கள் யாவரிடமும் இருக்க வேண்டியன அல்லவோ?

1. குறிஞ்சிக்கலி-47.

நல்லந்துவனர் எனும் நற்பெரும் புலவர் தமது நெய்தற் கலியில் பண்பு நலன்கள்சிலவற்றைக்கூறு கின்ற இனிமை போற்றிக் கொள்ளத் தக்கது.

ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை முறை,பொறை, என்பன நற்பண்பிற் குரிய இயல்புகள் இவை யாவென விளக்குகின்ருர்.

''ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவருக்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந் தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப்படுவது தன் கிளை செருமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியதுமருஅமை
நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணேடாது உயிர் வௌவல்
பொறை எனப் படுவது போற்ருரைப் பொறுத்தல்"

இங்கு விளக்கப்பட்ட இவை எவர்க்கும் வேண்டி யவை. 'பண்பு' என்பதற்குக்கூறும் விளக்கம் எவரும் கூருத ஒன்று. பிறர் தன்மை யறிந்து ஒழுகுதல்தான் பண்பாட்டின் தனி இயல்பாகும். அதனை இங்கு அழகுறச் சுட்டிக் கூறியுள்ள நலம் தான் என்னே!

'முறை' என்பது அறங்கூறும் அவையத் தார்க்கு இருக்கவேண்டிய இயல்பு; நடுநிலைபிறழாத் தன்மை. கொலையிற் கொடியாரைப் பைங்கூழ்க் களை கட்டல்போல் ஒறுத்தல் அறங்கூறு அவையத் தின் கடனன்ருே? அதில் உறுப்பினராய் அக்காலத் தில் சான்ருேர்தாம் இருந்தனர். ஆதலின்

---

1. நெய்தற் கலி-16.

சான்றோர்க்குரிய பண்புகளை விளக்கப்போந்த அதனை உடன் கூறியுள்ளார்.

இவ்வாறு சங்க கால மக்கள் உயர் பண்புகளைப் போற்றி ஒழுகி வந்துள்ளனர்.

"பண்பாடு என்பது வாழ்வுபற்றிக் கொண்டுள்ள கொள்கை, மனித இனம், உலகம், கடவுள் ஆய முதலிய இவைபற்றிக் கொண்டுள்ள கருத்து ஆயவற்றின் துணைகொண்டு மதிப்பிடப்படுவதாகும். மாறுதலுறும் நிலைக்கேற்ப அமையும் உடை, நடத்தை, சொல், எண்ணம், பழக்கம் முதலியவை பற்றி மதிப்பிடுவதற்கு உரியதன்று" எனப் பேரறிஞர் மாத்தியு ஆர்னல்டு கூறியுள்ளார். சங்க கால மக்களின் வாழ்வியல், கடவுட் கொள்கை, உலகக் கண்ணோட்டம் ஆயவற்றால் அவர்கள் உயர்ந்த பண்பாடு உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்று தெரிந்து மகிழலாம்.

# 11. நாகரிகம்

பண்பாடு அகத்தின் - உள்ளத்தின் - தொடர்புடையது. நாகரிகம் புறத்தின் பாற்பட்டது. உணவு, உடை, அணிகலன்கள், வசதி, வாய்ப்புகள், ஊர்தி, வீடு நகர், வாழ்க்கை முறை முதலியவற்றின் சிறப்பால் அறியப்படுவது. உள்ளச் சிறப்பால் உரையாலும் செயலாலும் பண்பாடு வெளிப்படும். செல்வச் செழிப்பால் நாகரிகம் உயர்ச்சியும் வளர்ச்சியும் பெறும். பண்பாட்டால் நாகரிகம் மாற்றமுறுதலும், நாகரிகத்தால் பண்பாடு வெளிப்படுதலும் உண்டு. திருவள்ளுவர் புறத்தோற்ற நாகரிகத்திற்கு மிகு மதிப்புத் தராது பண்பாட்டுச் சிறப்பையே நாகரிகம் என்று கூறியுள்ளார்.

"பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (குறள்-580)

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து" (குறள்-667)

என்னும் குறட்பாக்களை நோக்குக.

'நாகரிகம்' என்னும் சொல் 'நகர்' என்பதன் அடியாகத் தோன்றியது. 'நகர்' என்பது முதலில் பலவகையாலும் சிறப்புற்று விளங்கும் பெரிய

மாளிகையைக் குறித்தது; பின்னர் அம்மாளிகைகள் நிறைந்த இடமாம் பேரூரைக் குறித்தது. நகர் அல்லது நகரம் வழக்குக்கு வந்த பின்னர், பேரூர் வழக்கிழந்து விட்டது. நகர் இன்று இந்திய மொழிகள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளது.

நகர் வாழ்க்கை நாகரிக வாழ்க்கையாகி விட்டது. நாகரிகத்தின் பிறப்பிடம் மாளிகைதான். ஆனல் பண்பாடு குடிசையிலும் தோன்றும். 'நகர்' என்பதும் 'நாகரிகம்' என்பதும் தூய தமிழ்ச் சொற்கள். தமிழர்கள் பிறருடைய கூட்டுறவைப் பெறுவதற்கு முன்னரே நாகரிகத்தாற் சிறந்து நாகரிகத்தை மதித்துப் போற்றினர் என்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

'பண்பாடு' உலகுக்கெல்லாம் என்றும் பொது வாகும். நாகரிகம் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், காலத்துக்கு காலம் வேறுபடும் இயல்பினது. ஆதலின் சங்க காலத் தமிழ் மக்களின் நாகரிகத்திற்கும் இன்றைய தமிழ் மக்களின் நாகரிகத்திற்கும் இடையே வேறுபாடுகள் காணப் படலாம்.

உணவு முறையில் சங்க காலத் தமிழ் மக்களுக்கும் நமக்கும் வேறுபாடு உண்டு. அன்று புலால் உணவை யாவரும் விரும்பி உண்டனர். 'புலனழுக் கற்ற அந்தணாளர்' என்று பாரட்டப் பெற்ற கபிலரே தாம்,

"புலவு நாற்றத்த பைந்தடி பூநாற்றத்த
புகைகொளீஇ, ஊன்துவை, கறிசோறுண்டு" (புறம்-14)

வாழ்ந்ததாக அறிவிக்கின்றார்.

முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் தம்மிடம் வந்த புலவர்கட்கும் பாணர்கட்கும் கறியும் மீனும் பல்வகையாகச் சமைத்துப் பெருவிருந்து அளித்துள்ளனர். சமைக்கும் முறையில் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளனர். சமைக்கப்பட்டது இன்னது என்று அறியா வகையில் கூடச் சமைத்துள்ளனர். சமையல் பற்றிய நூல்கள் இருந்துள்ளன. நூல்களில் கூறப்பட்ட முறை தவருது சமைப்பதில் தேர்ந்தவர்களும் இருந்துள்ளனர். [1]

உணவு முறை வீட்டுக்கு வீடு மாற்றமுற்றிருந்ததை ஆற்றுப் படைகளால் அறியலாகும். மறை காப்பாளர் வீட்டில் மரக்கறி உணவுதான் இடப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கருவேப்பிலையுடன் வெண்ணெய்யில் வறுக்கப்பட்ட மாதுளங்காய்ப் பொரியலும் மாங்காய் வடு ஊறுகாயும் பல்வகைச் சோற்று வகைகளும் அங்கு இடப்பட்டனவாம். [2] புலால் உணவும் மரக்கறி உணவும் நாகரிக முறையில் சமைக்கப்பட்டதாக உள்ளன என்பது தான் இங்குக் குறிப்பிடதக்கது. மிகமிகப் பழங் காலத்திலிருந்தே புலால் உணவை நீக்கி மரக்கறி உணவைக் கொள்வோர் தமிழகத்தில் இருந்து வருகின்றனர் என்பது அறியத்தக்கது.

குடி வகைகள் மிகுதியாக இருந்துள்ளன. கள், தேறல், மட்டு, மது என அவை பலவகையாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளை ஆக்கியும் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்தும் நாட்பட வைத்திருந்து

1. சிறுபாணாற்றுப்படைவரி-241
2. பெரும் பாணாற்றுப் படைவரி-306-310.

விறுவிறுப்புச் சுவையை மிகுத்து உண்ணும் வழக்கமும் அறிந்திருந்தனர். "தேட்கடுப்பென்ன நாட்படு தேறல்" என்றும் (புறம்-392), "பாம்பு வெகுண்டன்ன தேறல்" என்றும் (சிறுபாண்-23) சிறப்பிக்கப்பட்டுள்ளன. புலவரும் புரவலரும் பொது மக்களும் உண்டாட்டு, விருந்து, விழா ஆய சிறப்புக் காலங்களிலும் பிற நேரங்களிலும் தேறல் அருந்தும் வழக்கம் சிறப்புற்றிருந்துள்ளது. பிறரை வாழ்த்துங் காலத்தில் கூட "நன்ருகத் தேறல் அருந்தி வாழ்வாயாக" என வாழ்த்தியுள்ளனர். மதுரைக் கணக்காயஞர் மகஞர் நக்கீரஞர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வாழ்த்துங்கால்,

''யவனர் நன்கலந்தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற'' (புறம்-56)

எனக் கூறியுள்ளார். யவன நாட்டிலிருந்து தேறல் வந்த செய்தியும் அழகிய பொற்கலங்களில் ஆரணங்குகள் ஊற்றிக் கொடுக்கும் நிலையும் குடித்துக்கொண்டே 'வாழ்க' என வாழ்த்தும் முறையும் அறியத்தக்கன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதஞர்,

''மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந் தினிது உறைமதி பெரும
வரைந்து நீ பெற்ற நல்லூழியையே" (மதுரைக்காஞ்சி)

என வாழ்த்துவதூஉம் காண்க.

உண்பதற்கும் பருகுவதற்கும் பொன்ஞலும் வெள்ளியாலும் புனைந்து செய்யப்பட்ட கலன்களைப் பயன்படுத்தியுள்ளனர். "இளங்கதிர் ஞாயிறு

எள்ளும் தோற்றத்து விளங்கு பொற்கலம்"[1] என்றும், "மீன் பூத்தன்ன வான் கலம்"[2] எனவும் "பெறலருங் கலம்"[3] எனவும் அவை சிறப்பிக்கப் பட்டுள்ளன.

இன்றுபோல் அன்றும் அவர்கள் உண்கலன்களிலும் இலைகளிலும் உணவு கொள்ளும் உயர் நாகரிக முறையைப் பெற்றிருந்தனர்.

உடையை அற்றம் மறைப்பதற்கோ, மிகு தட்ப வெப்ப நிலையினைத் தடுப்பதற்கோ அன்றி அணி நாகரிகத் தோற்றத்திற்காகவும் அணிந்துள்ளனர் உடை, ஆடை, வேட்டி, துணி, துண்டு, சீரை, மெய்ப்பை முதலிய யாவும் தனித் தமிழ்ச் சொற்களே. தமிழகத்தில் ஆடவரும் பெண்டிரும் அன்று முதல் இன்று வரை ஆடை உடுத்துவதில் பெரு மாற்றம் இன்றியே வாழ்ந்து வருகின்றனர். இந் நாட்டில் எளிய வாழ்வினை மேற்கொள்வோர்க்கு நான்கு முழமே சாலும் என்றனர். "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" (நல்வழி-28) என்று பிற் காலத்தார் கூறியிருப்பினும் கீழாடையும் மேலாடையுமாக இரண்டு ஆடைகளைச் சங்க காலத்தார் அணிந்திருந்தனர் ("உண்பது நாழி உடுப்பவை இரண்டே". புறம்-189) மேலாடை ஆடவர்க்கு மதிப்பிற்குரிய ஆடையாகக் கருதப்பட்டது. அரசரும் புலவரும் வேளிரும் செல்வரும் மேலாடையின்றி வெளியில் செல்லார். மேற் சட்டையை

1. சிறுபாணாற்றுப்படை வரி 243-244
2. பெரும்பாணாற்றுப்படை வரி -477
3. பொருநர் ஆற்றுப்படைவரி-156

மெய்ப்பை என்றனர். கால்சட்டையைக் கச்சை[1] என்றனர். போர் வீரர்களும் மன்னர்களும் கால் சட்டை அணிந்திருந்தனர். அவை பூ வேலைப்பாடு கள் பொருந்திப் பொலிவுற விளங்கின. தலையில் பாகையும் கொண்டிருந்தனர். காலில் செருப்பும்[2] கவினுற அணிந்திருந்தனர். கொட்டைக் கரைய பட்டுடையும், பாலாவியன்ன மேலாடையும் விரும்பிக் கொண்டனர். மகளிரும் மார்பினை மறைக்கக் கச்சு[3] அணிந்திருந்தனர். 'பூங்கரை நீலம்' புடை தாழ உடுத்திருந்தனர்.[4]

தாம் ஈடுபடும் செயல் முறைக்கு ஏற்ப ஆடையை மாற்றி மாற்றி யணியும் நாகரிகமும் கொண்டிருந்தனர் (பட்டினப் பாலை). மெல்லிய ஆடையையே விரும்பி மேவினர்; என்பதனை ஆடையை 'நூலாக் கலிங்கம்', 'அரவுரியன்ன அறுவை', 'ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம்', 'பல்கலைச் சில் பூங்கலிங்கம்', 'நேர்கரை நுண்ணூற் கலிங்கம்', 'இழை மருங்கறியா நுழை நூற் கலிங் கம்', காம்பு சொலித் தன்ன அறுவை' எனப் பாராட் டிச் சிறப்பித்துள்ளமையால் அறியலாம். ஆடை களை வெளுத்தலும், வெளுக்குங்கால் கஞ்சியூட்ட லும் நன்கு அறிந்திருந்ததோடு அதற்கெனத் தொழில்புரிவோரையும் கொண்டிருந்தனர். ஆடை கட்குக் கண்ணுக்கு இனிய சாயம் ஏற்றலும் கை வரப் பெற்றிருந்தனர்.

1. புறம் 274
2. அகம் 129: பெரும் பாணாற்றுப்படை வரி-169
3. முல்லைப்பாட்டு வரி-47
4. முல்லைக் கலி 1: மருதம்-27

நூலாடை, பட்டாடை, மயிராடை எனப் பல வகை யாடைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

அணிகலன்கள் அணிந்து கொள்வதில் ஆடவரும் பெண்டிரும் பெருமகிழ்வு காட்டினர். தலை முதல் கால் வரையில் அணியக்கூடிய அணிகலன்களைப் பெற்றிருந்தனர் (புறம்-378). அணிகலன்கள் பொன்னாலும் முத்தாலும் மணியாலும் செய்யப்பட்டிருந்தன (குறிஞ்சிப் பாட்டு).

மணமகளுக்குத் தாலியணிதலும் அதனை 'ஈகை யரிய இழையணி, (புறம்-127) எனலும் உண்டு.

மணமகன், மணமகளுக்குக் கையுறையாக அணிகலன்கள் அளித்தலும் அவற்றுள் காதலை அறிவிக்கும் அடையாளம் பொருந்திய மோதிரம் உண்டென்பதும் (மருதக்கலி-19) அக்கால நாகரிகச் சிறப்பை உணர்த்துவனவாம்.

கணவனை இழந்த மகளிர் தம் துயர மிகுதியால் அணிகலன்களைக் கழற்றி விடுதல்உண்டு. அதனால் அவர் 'கழிகலன் மகளிர்' எனப்பட்டனர். அணி கலன் தமக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சியை யளித்தலால் அதனை 'நகை' என்றும் அழைத்தனர் போலும். உணவு உடை அணிகளால் சிறந்து மகிழ்ந்துவாழ்ந்தவர்கள் தமக்கென இல்லங்களையும் கொண்டிருந்தனர். 'நாகரிகம்' எனும் சொல்லே 'நகர்' என்பதன் அடியாகத் தோன்றியது என்றோம். 'நகர்' என்பது முதலில் பெரிய மாளிகையைத்தான் குறித்தது என்றோம். ஆதலின் பெரிய பெரிய கவினுறு மாளிகைகளைக் கட்டி வாழ்ந்தவர்கள் சங்ககால மக்கள் என்று

அறியலாம். 'நெடுஞ் சுவர் நல்லில்' [1] என்றும் 'விண் பொரு நெடுநகர்' [2] என்றும் 'சுடுமண் ஓங்கிய நெடு நகர்' [3] என்றும் கூறப்பட்டுள்ளமையால் வீடுகள் எல்லாம் மிகஉயர்ந்தோங்கி இருந்தன என்று தெரிய லாம். அவ்வீடுகளில் கண்டார் கண்களைக் கவரும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. 'ஓவத்தன்ன வினை புனை நல்லில்,' [4] 'ஓவத்தன்ன உருகெழு நெடுநகர்', [5] 'கதிர்விடு மணியில் கண்பொரு மாடம்' [9] எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளமை காண்க.

வீடுகளுக்குக் கதவுகளும் கதவுகளுக்குத் தாழ்ப் பாள்களும் பூட்டுகளும் இருந்தன. பூட்டுக்குரிய திறவுகோல் 'தாழ்க்கோல்' [7] எனப்பட்டது.

வீடுகளைக் காப்பதற்குக் காவலர்கள் இருந் தனர்; நாய்கள் வளர்ந்தன.

வீடுகள் கட்டுவதற்கு நல்ல நாளில் மனை நூற் புலவரைக்கொண்டு ஏற்ற இடமும்காலமும் அறிந்து அடிப்படைக்கல் நாட்டி அழகுற வீடு கட்டும் முறை பற்றியும் அதன் சார்பான பிற பற்றியும் 'நெடுநல் வாடை'யில் நீளப் புனைந்து கூறப்பட்டுள்ளன.

**"பீடுகெழு சிறப்பின் பெருந்தகை யல்லது**
**ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்**
**வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு**
**வில்கிடந்த தன்ன கொடிய பல்வயின்**

---

1. ஐங்குறு நூறு 386
2. அகம் 167
3. பெரும் பாணாற்றுப் படை வரி-405,
4. பதிற்றுப்பத்து பாடல் 61
5. பதிற்றுப்பத்து பாடல் 87
6. புறம் 534
7. தொல், எழுத்து 4

வெள்ளி யன்ன விளங்கு சுதைஉரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பு இயன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்இல்"

என அரசிக்குரிய தனியறை அழகுற வண்ணிக்கப் பட்டிருப்பதை நெடுநல் வாடையில் (வரிகள் 106-114) படித்தறிந்து மகிழலாம்.

இத்தகைய எழுநிலை மாடங்களில் பாவை விளக்குகள் நம் நாட்டிற் செய்யப்பட்டனவும், யவன நாட்டிலிருந்து பெறப்பட்டனவுமாய பல சுடர் விட்டு ஒளி செய்தன. காற்றால் அணையாதனவும், எரி நெய்யை ஏந்து சுரை வழியாய்ப் பெற்று எரிந்தன வும் அக்கால விளக்குகளின் சிறப்பியல்பைத் தெரி விப்பனவாம்.

உறங்குவதற்குரிய கட்டில்களும், கட்டில்களில் இடப்பெற்றிருந்த மெத்தைகளும், இக்காலப்பெருஞ் செல்வர் இல்லங்களிலும் காண்டற்கரிதாகும்.

"வரைகுயின் றன்ன வான்தோய் நெடு நகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து" [1] உறங்கினர்.

இன்றுயிற்கு இடையூறு இல்லாத வகையில் மங்கிய ஒளி விளக்கு மணியால் பெற்றிருந்தனர்.

இவ்வீடுகளில் "கடவுட்கற்பொடு குடிக்கு விளக் காகிய புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் நன்ன ராட்டி"கள் [2] நற்றலைமை பூண்டு இல்லறம் இனிதே

1. அகம் 93
2. அகம் 184

நடாத்தினர். அவர்கள் தம்மை ஒப்பனை செய்து கொண்ட முறைமை இக்காலத்தையும் வென்று விடும். மகளிர் தம் தலைமயிரைக் கத்தரித்து ஒழுங்கு செய்து கொண்டமை [1] யும், நறுமணங் கமழும் எண்ணெயாலும், அகில் புகையாலும் தம் கூந்தலை என்றும் மணங்கமழுமாறு வைத்துக் கொண்டமை யும் அக்கால அரிவையர் பெற்றிருந்த நாகரிக மேம் பாடாகும். நகங்களுக்கும் உதடுகளுக்கும் செவ்வண் ணம் ஊட்டுதலையும் செவ்வனே அறிந்திருந்தனர்.

வீடுகள் எல்லாம் தெருத்தெருவாக அழகுற அமைந்திருந்தன. தெருக்கள் எல்லாம் அகன்று போக்குவரவுக்கு இடையூறின்றிப் பொலிந்தன. 'ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு'[2] என்பது காண்க.

தெருக்களில் இரவு நேரங்களில் இருள் போக் கும் விளக்குள் எரிந்தன. காவலர் சுற்றிக் கடுங் காவல் புரிந்தனர்.

" கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோல் அடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறம்கூவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலன் அகழ் உளியர் கலன் நசைஇக் கொட்கும்
கண்மா றாடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்

---

1. கலி பாலை-31
2. நற்றிணை 200

**அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி
ஊர்க்காப்பாளர்"**

என மதுரைக் காஞ்சியில் (வரிகள் 635-647) திருடர்களின் நிலையும் ஊர்க்காப்பாளர் சிறப்பும் கூறப்பட்டுள்ளமை கொண்டு அக்காலக் காவற் சிறப்பை அறிந்து மகிழலாம்.

மாடங்களில் வரைமிசையிழிதரும் அருவியினைப் போல் வளிமுனை அவிர்வரும் கொடிகள் நுடங்கவும் தெருவில் சொரி சுரைகவரும் நெய்வழி புராலில் பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழலவும் நன்னுதல் விறலியர் நகரில் (வீட்டில்) அரசர் புகழ் பாடி ஆடினர் (பதிற்றுப் பத்து-7)

ஆடலும் பாடலும் அக்கால மக்கள் வாழ்வை அணி செய்தமையும் நாகரிகச் சிறப்பன்றோ? "குழலகவ யாழ் முரல, முழவதிர முரசியம்ப விழவறு வியலா வணங்கள்" நகரங்கள் தோறும் காட்சி தந்தன.

காலத்தை ஆண்டு, திங்கள், கிழமை, நாள் எனப் பகுத்திருந்தனர். ஓராண்டு பன்னிரண்டு திங்களும், ஒரு திங்கள் நான்கு கிழமைகளும், ஒரு கிழமை ஏழு நாட்களும், ஒரு நாள் ஆறு பிரிவுகளும் கொண்டிருந்தன. ஓராண்டு ஆறு பருவங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒரு நாளின் பொழுதறிந்து கடனுற்ற குறுநீர்க் கன்னல் எனும் நாழிகை வட்டில் பெற்றிருந்தனர். அரண்மனைகளிலும் அரசியல் அலுவலகங்களிலும் பொழுதறிந்து நுவலும் பணியாட்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

முகத்தல் அளவை, நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை யாவும் கொண்டிருந்தனர்.

ஒன்று முதல் கோடிவரை எண்ணவும் தெரிந்திருந்தனர்.

பிறந்தநாளும், இறந்தநாளும், வெற்றிபெற்றுச் சிறந்த நாளும் கொண்டாடும் நாகரிக வாழ்வும் அவர்கள் அறியாததன்று.

# 12. பொழுதுபோக்கு

திட்டமிட்ட பொழுதுபோக்கும் ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை வெளிப்படுத்துவனவாகும்.

உழைப்போர்க்கு ஓய்வு இன்றியமையாதது. ஓய்வு, ஒன்றும் செய்யாது மடிந்திருப்பதனால் மிகு பயன் தாராது. எப்படியாவது பொழுதைக் கழிக்க வேண்டும் என்பதற்காக எதிலும் ஈடுபடுதலும் நற் பொழுதுபோக்கு ஆகாது. பொழுது போக்கால் உள்ளத்திற்கு இன்பம், உடலுக்குப் பயிற்சி ஏற்பட்டு மீண்டும் தம் கடமையிலீடுபடப் புத்துணர்ச்சியும் புது மலர்ச்சியும் பெறுதல் வேண்டும். தாமே தனியாகப் பொழுதுபோக்கில் ஈடுபடுவதினும் பிறருடன் கூடிப் பொழுதுபோக்கலே நற்பயன் தருவதாகும்.

சங்க காலத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை ஆடவரும் பெண்டிரும் ஏதேனும் ஒரு பொழுது போக்கில் இன்பம் கண்டுள்ளனர். விளையாட்டும், ஆடலும், பாடலும், இன்ப உரையாட்டும் எல்லா ருடைய உள்ளங்களையும் கவர்ந்துள்ளன.

பூங்காக்களுக்குச் சென்றும் நகரைவிட்டு வெளி யிடங்களை அடைந்தும் அன்றும் பொழுது போக்கி யுள்ளனர்.

கடற்கரையில் அலவனாட்டுதல், வண்டல் விளை யாடுதல், பாவையை வைத்துக்கொண்டு விளையாடு

தல், விளையாட்டுக் குதிரை, தேர் முதலியவற்றை இழுத்து விளையாடல், ஒருவரோடு ஒருவர் கை கோத்து ஆடல், பந்தாடல், நீர்நிலைகளிற் சென்று முழுகி விளையாடல், கிளி வளர்த்தல், திருவிழாக் களுக்குச் செல்லல், ஆடவர் பெண்டிர் இருசாரார்க் கும் உரிய அக்காலப் பொழுது போக்குகளாகும்.

ஆடவர் மற்போர் புரிதலையும், கோழிப் போர், யானைப் போர் காண்டலையும், வேட்டையாடுதலையும் தமக்குரியனவாகக் கொண்டுள்ளனர். ஆடவரில் முதுமையுற்றோர் ஓரிடத்தில் அமர்ந்து வல்லாட்டம் (சூதாட்டம்) ஆடிப் பொழுதுபோக்கியுள்ளனர். சூதாடுவதற்கெனத் தனி அகங்கள் இருந்துள்ளன (புறம்-52). வல்லாட்டத்திற்குரிய பலகை, காய் முதலியன பற்றித் தொல்காப்பியத்தில் கூறப்படுவ தனால் கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டில் வல்லாட்டம் பொழுது போக்காக அமைந்துள்ளது என்று அறியலாம்.

தடவரல், பண்ணை, ஓரை முதலியன விளையாட் டின் பெயர்களாகும்.

'ஓரை' என்பது மகளிர்க்குரிய விளையாட்டு என்பதும் அதில் ஆடவரும் சேர்ந்து விளையாடுவர் என்பதும் "ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்" (நற்றிணை-155) என்பதிலிருந்து அறியக் கிடக்கின்றது.

ஊஞ்சல் ஆடுதல் மகளிர்க்கே உரிய விளை யாட்டு. 'தெற்றி' என்பதும் மகளிர்க்கே உரிய விளை யாட்டாகும் (புறம்-53). அது இன்ன விளையாட்டு

என அறிய முடியவில்லை. "கழங்கு ஆடுதல்" என்பதும் (அகம்-334) மகளிர்க்குரிய ஒன்ருகும்.

கடற்கரையில் நண்டுகள் ஓடி ஓடி மறைதலைக் காண்பது வியத்தகு காட்சியாகும். அதனைக் கண்டு பொழுது போக்கலைச் சிறு விளையாடலாகக் கருதினர் என்பது "செம்பேர் ஈரளை அலவற் பார்க்கும் சிறு விளையாடல்" (நற்றிணை-123) என்று கூறுவதனல் அறியலாம்.

காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் எவ்வாறு பொழுது போக்கில் ஈடுபட்டு மகிழ்ந்தனர் என்பது பட்டினப்பாலையில் கற்போர் உள்ளம் கவருமாறு கவினுறக் கூறப்பட்டுள்ளது (வரிகள் 62–117).

தொழிலாளர்கள் கடற்கரைக்குச் சென்று கடல் இரு மீனைச் சுட்டுத் தின்பர்; வயலாமையைப் புழுக்கி உண்பர்; அடும்பு மலரையும் ஆம்பல் மலரையும் அழகுறச் சூடிக் கொள்வர். ஆடவர்கள் பலர் கூடி கையாலும் கருவிகளாலும் போர் செய்வர். ஒருவரை ஒருவர் சுற்றிச் சுற்றிப் பொருது கொள்வது நாள் மீன்கள் (நட்சத்திரங்கள்) கோள்மீனைச் (கிரகம்) சுற்றிவருவது போல் இருக்கும். கவண் வீசுவர்; ஆட்டுச் சண்டை, கோழிச் சண்டை, கவுதாரிச் சண்டை முதலியன கண்டு களிப்பர்; பெண்கள் சுரு மீன் கோடு நட்டு வணங்கி வாழ்த்துவர். பரதவர் உவா நாளில் மீன் வேட்டைக்குச் செல்லாது வீட்டி லிருந்து பெண்களுடன் உண்டு ஆடி மகிழ்வர். கடலில் குளிப்பர்; பின்னர் நன்னீர்க் குளத்தில் முழுகி மகிழ்வர்; அலவனாட்டியும், அலைகளில் நடந்தும் பதுமைகளைப் புனைந்தும் ஐம்பொறிகளால்

நுகரும் பொருள்களை நுகர்ந்து மயங்குவர்; பகலில் இவ்வாறு விளையாடிய பின்னர் காதலனும் காதலியும் பட்டாடையை நீக்கிப் பருத்தியாடையை அணிவர்; மட்டு நீக்கி மது மகிழ்வர். மைந்தர் கண்ணியை மகளிர் சூடுவர்; மகளிர் கோதையை மைந்தர் மலைவர்; பாடலோர்ப்பர்; நாடகம் நயப்பர். வெண்ணிலாவில் வீற்றிருந்து மகிழ்வர். பின்னர் அங்குள்ள மணல் மேடுகளில் துயின்று இரவைக் கழிப்பர்.

இவ்வாறெல்லாம் அக்கால மக்கள் பொழுது போக்கி மகிழ்ந்தனர்.

எளிய மக்களும் இனிய முறையில் பொழுது போக்கினர் என்பதைப் பின்வரும் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

**"நெல்லரியும் இருந் தொழுவர்**
**செஞ்ஞாயிற்று வெயில் முனையின்**
**தெண்கடல்திரை மிசைப் பாயுந்து**
**திண் திமில் வன்பரதவர்**
**வெப்புடைய மட் டுண்டு**
**தண் குரவைச் சீர் தூங்குந்து**
**தூவற் கலித்த தேம்பாய் புன்னை**
**மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்**
**எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து**
**வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்**
**முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்**
**இரும் பனையின் குரும்பை நீரும்**
**பூங் கரும்பின் தீம் சாறும்**
**ஓங்கு மணல் குவவுத் தாழைத்**
**தீ நீரோடு உடன் விராஅய்**
**முந் நீருண்டு முந்நீர்ப் பாயுந்து"** (புறம்-24)

கடலில் குளித்தலும் கள்ளுண்டலும் குரவையாட லும் மாலைகளைச் சூடி விளையாடலும், மகளிருடன் நடனமாடுதலும் மூன்று வகை நீரும் கலந்த கலவை நீரையுண்டு மகிழ்ந்து கடலில் பாய்ந்து விளையாட லும் இன்றைய மேனாட்டார் பொழுதுபோக்கோடு ஒத்திருக்கின்றனவன்றோ?

மற்போர் பற்றி ஆமூர் மல்லனை சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி வென்ற நிலை வண்ணிக்கப்பட்டுள்ளது. அக்கால மற்போர் இக் கால மற்போர் போலவே நடந்துள்ளது. சாத்தந்தை யார் எனும் புலவர் அம்மற்போரை நேரிற் கண்டு பின் வருமாறு கூறியுள்ளார்.

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்ஒதுங் கின்றே;
நல்கினும் நல்கா ஞயினும் வெல்போர்ப்
போர் அருந் தித்தன் காண்கதில் அம்ம
பசித்துப்பணை முயலும் யானை போல
இரு தலை ஒசிய எற்றிக்
களம்புகும் மல்லன் கடந்தடு நிலையே" (புறம்-80)

மற்போரைக் கண்டவர் ஆர்ப்பரவம் ஏழ் கடல் ஒலி யினும் மிகுதியாய் இருந்தது என்று அப்புலவரே கூறியுள்ளமையால் (புறம்-81) மற்போரைக் கண்டு போதுபோக்கியோர் கூட்டம் இக்காலம் நடைபெறும் மற்போர், விளையாட்டுப் பந்தயங்கள் முதலிய வற்றைக் கண்டுகளித்துப் பொழுதுபோக்கும் பெருங் கூட்டத்தைப் போன்று இருந்திருக்கும் என்று உய்த்துணரலாம்.

மற்போரைக் கண்டு மகிழ்ந்தது போன்றே யானைப் போரைக் கண்டும் மகிழ்ந்தனர் என்பது

"குன்றேறி யானைப்போர்கண்டற்றால் தன்கைத்துஒன்று
உண்டாகச் செய்வான் வினை" (குறள்-758)

எனும் திருக்குறளால் தெளியலாம்.

"நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லாராயினும் புறம் மறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்கும் அவன்சுற்றத் தொழுக்கமும்"

என்னும் மலைபடுகடாம் அடிகளால் (77-80) இயற்றமிழும்,

"குழலினிது யாழினிது என்ப" எனும் திருக்குறளால் இசையும்,

"கூத்தாட்டவைக் குழாத் தற்றே" எனும் திருக்குறளால் நாடகமும், அக்கால மக்களின் பெரும் பொழுதுபோக்காய் அமைந்திருந்தன என்று அறிய இயலும் பாடும்புலவரும் பாணரும் ஆடும் விறலியும் பொருநரும் அக்காலத்து நன்கு மதிக்கப்பட்டுப் போற்றப்பட்டனர் என்பதனாலும் இவை மக்களுக்குப் பயன் விளைக்கும் பொழுதுபோக்காய் அமைந்திருந்தன என்றும் தெரியலாம் சங்ககாலத் தமிழ் மக்கள் பொழுது போக்கு முறையிலும் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தனர் என்பதில் ஐயமின்று.

# [redacted]ழக்க வழக்கங்கள்

மக்கள் அன்றாடம் வாழ்வில் கொள்ளும் பழக்கங்கள் வழக்கங்களாக அமைந்து பின்னர் அவையே நாகரிகப் பண்பாட்டுச் செயல் முறைகளாக மாறி விடுகின்றன. எல்லாப் பழக்க வழக்கங்களும் அவ்வாறு அமைந்து நிலைத்து நிற்கும் என்று கூறுவதற்கின்று. இப்பழக்க வழக்கங்கள் என்றும் ஒரு தன்மையாய் இருக்கும் என்றும் கூற இயலாது. சில மறையும்; சில தோன்றும். உயர் பண்பாட்டுக் குரியனவாய் உள்ளன மட்டும் கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும். பழமை பாராட்டும் மக்களியல் பாலும் மூடநம்பிக்கையாலும் காலத்துக்கொவ்வாத சில பழக்க வழக்கங்கள் காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும்.

ஆகவே பழக்க வழக்கங்கள் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், காலத்துக்குக் காலம் வேறுபடுவனவாயுள்ளன.

மக்கள் வாழ்வில் பிறத்தல், திருமணம் செய்தல், இறத்தல் ஆயவை முதன்மையான நிகழ்ச்சிகளாகும். இவை யடிப்படையில் பல வழக்கங்களும் சடங்குகளும் எல்லா நாட்டிலும் இன்றும் நடைபெறுகின்றன. சங்க காலத்தில் இவை பற்றித் தோன்றியன யாவையெனக் காண்போம்.

குழந்தை பிறந்த பின்னர் சில சடங்குகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன என்பது,

> "புதல்வர்ப் பயந்த புனிறுசேர் பொழுதில்
> நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
> ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
> செய்பெரும் சிறப்பொடு சேர்தற் கண்ணும்"[1]

எனும் தொல்காப்பிய நுற்பாவால் அறியலாம்.

குழந்தைப்பேறு நிகழ்ந்த சில நாட்களுக்குப் பின்னர் எண்ணெய்தேய்த்து முழுகுதலும் பின்னர்ப் பெரியவர்கட்கும் வீரர்கட்கும் சிறப்புச் செய்தலும் சடங்குகளாக நிகழ்ந்திருக்க வேண்டும். 'செய்பெரும் சிறப்பு' என்பதில் 'சிறப்பு' என்பதற்கு "பிறந்த புதல்வன் முகம் காண்டலும், ஐம்படை பூட்டலும், பெயரிடுதல் முதலியனவும், எல்லா முனிவர்க்கும் தேவர்க்கும் அந்தணர்க்கும் கொடுத்தலும்" என நச்சினார்க்கினியர் விரிவுரை எழுதியுள்ளார். இவை எல்லாம் சில செல்வக் குடும்பங்களில் இன்றும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன.

'ஐம்படை' என்பதை ஐவகைக் கருவிகளைக் குறிக்கும் சொல்லாகப் பிற்காலத்தார் கொண்டு திருமாலுக்குரிய ஐவகைக் கருவிகளையும் குழந்தைகட்கு அணிதல் என்பர். இதனை ஐம்படைத் தாலி என்றும் கூறுவர். இத்தாலியைச் சிறு குழந்தைகட்கணிவது ஒரு மரபாக இருந்துள்ளது.

குழந்தைகள் பிறந்தவுடன் இறந்தாலோ இறந்து பிறந்தாலோ அவற்றை வாளால் வெட்டித் தான் புதைப்பாராம். குழந்தை வடிவம் பெருமல்

1. தொல் கற்–146

வெறும் சதைத் திரளாக இருந்தாலும் இப்பழக்கத்தி னின்றும் தப்பமுடியாதாம்.

"குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன் றன்று வாளில் தப்பார்" (புறம்-74)

இவ்வாறு வெட்டிப் புதைக்கும் பழக்கம் இன்னொரு பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. பிறந் தோர் யாவரும் (ஆடவர்கள்) நாட்டுக்காகப் போர்க் களத்தில் மடிய வேண்டும் என்று கருதினர். அவ்வாறு மடிந்தால்தான் துறக்க இன்பம் கிட்டு மென்று நம்பினர். ஆதலின் போர்க்களத்தில் இறக் கும் நிலை பெருது குழந்தைப் பருவத்தில் மடிந்தா லும் முதுமைப் பருவத்தில் மடிந்தாலும் மடிந்த பின்னர் வாளால் வெட்டித்தான் புதைத்தனர்.

நோயால் இறந்தவர்களை, போர்க்களத்தில் இறவாத குற்றம் நீங்க, பசும்புல் மீது கிடத்தி அறநெறியிற் செல்லும் நான்மறை முதல்வர்கள் "வீரமே துணையாகப் போர்க்களத்தில் இறந்தோர் செல்லுமிடம் செல்க" என வாளால் வெட்டும் செய்தியை,

"அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந்தாக நல்லமர் வீழ்ந்த
நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க என
வாள் போழ்ந் தடக்கல்" (புறம்-93)

எனப் புறநானூறு அறிவிக்கின்றது.

முதியோர் இறந்தால் இவ்வாறு செய்யாவிடி னும் குழந்தை இறந்தால் புதைப்பதற்கு முன்பு வடுப்படுத்துதல் இன்றும் நிகழ்ந்து வருகின்றது.

வாளால் வெட்டுவதின்றிச் சிறு கத்தியாலோ புதைக்குமிடத்தில் கிடைக்கும் காட்டு முள்ளாலோ காதிலோ மூக்கிலோ கீறுகின்றனர். அன்று வீரத் துறக்கம் கிடைக்க வாளால் வெட்டினர். இன்று மந்திரவாதிகள் எடுத்துச் செல்லாமல் இவ்வாறு செய்கின்றனராம். காலப் போக்கில் பழக்கமும்அது பற்றிய நம்பிக்கையும் எவ்வாறு மாறிவந்துள்ளன என்பதை நோக்குமின்.

திருமணக் காலத்தில் கொள்ளும் பழக்கங்கள் 'சாதி' தோறும் இன்று வேறுபடுகின்றன. அன்று நிகழ்ந்த ஒரு பழக்கத்தை முன்பே சுட்டிக்காட்டியுள்ளோம் (இல்வாழ்க்கை என்னும் தலைப்பில் காண்க). திருமணம் செய்துகொள்வதற்கு முன்பு காதலன் தன் காதலிக்கு உறுதிமொழி கொடுக்குங் கால் தண்ணீர் குடிக்கும் பழக்கம் உண்டென்பது

"ஏமுறு வஞ்சினம் வாய்மையில் தேற்றி
அம்தீம் தெண்ணீர் குடித்தலின்"

எனும் குறிஞ்சிப் பாட்டு அடிகளால் (210-211) தெளியலாம். திருமணம் நிகழ்ந்த பின்னர் மணமகனுக்கு மணமகள் சோறு வட்டிக்கும் (பரிமாறும்) நிகழ்ச்சி தொடர்பாகச் சில பழக்கங்கள் இருந்துள்ளன. தொல்காப்பியர் "அடிசிலும் பூவும் தொடுதல்" என்பர் (தொல். பொருள் - 146).

வீரராக இறந்தோர்க்குக் கல் நடும் வழக்கம் இருந்துள்ளது. தொல்காப்பியத்தில், இது

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகுசிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
இரு மூன்று வகையின் கல்லொடு புணர"[1]

---

1. தொல். பொருள்–60

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல் நடுதல் தொடர் பாகப் பல்வகைப் பழக்க வழக்கங்கள் உருவாகியுள் ளன. கல்லில் இறந்தோர் பெயரைப் பொறித்தலும் அவர் புகழ்ச் செயல்களை எழுதுதலும் பின்னர் அக்கல்லுக்கு மயிலிறகு சூட்டுதலும், கள், சோறு முதலியன படைத்து வழிபடுதலும், பூவும் நெல்லும் போட்டுக் கும்பிடுதலும் நிகழ்ந்துள்ளன [1]

இன்றும் ஒருவர் இறந்த பதினாறும் நாளில் கல் நிறுத்திக் காடேத்துகின்றோம். ஆனால் கொள்கை யும் குறிக்கோளும் முறையும் முற்றிலும் மாறி விட்டன.

உரிமையரசு நிலைபெற்றுள்ள அக்காலத் தமிழ் நாட்டில் போர் நிகழ்ச்சி தொடர்பாகப் பல பழக்க வழக்கங்கள் இருந்துள்ளன.

பகை நாட்டின் மீது போர் தொடங்கிப் படை புறப்படுவதற்கு முன்னர் படைத் தலைவர்கள், படை வீரர்கள் ஆயவருடன் அரசர் உடனிருந்து உண் ணும் பழக்கம் இருந்துள்ளது. இதனைத் தொல் காப்பியர் "பிண்டம் மேய பெருஞ் சோற்று நிலை" (தொல் பொருள்-63) என்பர். குறிப்பிட்ட நேரத் தில் படை புறப்படுவதற்கு இயலவில்லை யெனில் அரசின் அடையாளங்களாம் குடையையும் வாளையும் குறிப்பிட்ட நேரத்தில் புறப்படச் செய்யும் பழக்கம் இருந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் "குடை நாட்கோள், வாள் நாட்கோள்" (தொல். பொருள்-68) என்பர்.

போர்க் களத்தில் புறங்காட்டி ஓடுதல் வெறுக் கப்பட்டது. படையழிந்து மாறுதலைப் பேரிழுக்காகக்

1 புறம்-221, 223, 232, 260, 261, 263, 264, 306, 314, 329, 335.

கருதி அவ்வாறு மாறியவரின் அன்னையர் அவர்க்குப் பாலூட்டிய மார்பினை அறுத்து எறியும் வீரமிக்கப் பழக்கமும் இருந்துள்ளது[1] முதுகில் புண்படுதலே கூடாது. பட்டுவிட்டால் உண்ணா நோன்பு கொண்டு உயிர்விட்டனர்.[2]

வீரத்திற்கும் பெருமைக்கும் இழுக்கு நேரும் போதெல்லாம் உண்ணா நோன்பிருந்து உயிர்விடும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். அக்கால மக்கள் மட்டுமின்றி மாக்களும் இப்பழக்கத்தை மேற்கொண்டன என்று புலவர்கள் கூறியுள்ளனர் (புறம்-190). மக்களியல்பைப் பிற உயிர்கட்கு ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்றம் எனும் அணியின் பாற்பட்டதாயினும் "உண்ணா நோன்பிருந்து உயிர் விடும் பழக்கம்" மக்கள் உளத்தில் ஆழமாகக் காழ் கொண்டுள்ளது என்பதனை அறிவிக்கின்றதன்றோ?

எல்லா நாடுகளிலும் ஆண்களுக்கெனவும் பெண் களுக்கெனவும் தனித்தனிப் பழக்கவழக்கங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. தமிழ் நாடும் இதற்கு விதிவிலக்கன்றே.

திருமணமாகாத பெண்கள் சிலம்பு அணிந்து கொள்ளுதலையும், திருமணம் நிகழ்வதற்கு முன்னர் அச் சிலம்பினைக் கழித்துவிடுதலையும் முன்பே குறிப் பிட்டுள்ளோம். மங்கல நாண் அணிந்து கொள்ளு தல் பெண்களுக்கேயுரிய ஒன்று. கணவனை மணக் குங்கால் ஆடைகளும் அணிகலன்களும் அணிந்து

1. புறம்-278
2. புறம்-65

கொள்ளும் பெண்கள், அவன் இறந்த காலத்து அவைகளை நீக்கிவிட வேண்டிய நிலையில் இருந்துள்ளனர். ஆகவே கணவனை இழந்த மகளிரை கழிகலமகளிர் (புறம்-280) என அழைத்துள்ளனர். மகளிர் கணவரை இழந்து நோன்பு கொண்டு வாழ்ந்த வாழ்க்கையை ஆசிரியர் தொல்காப்பியர் 'தாபத வாழ்க்கை' என்பர். கணவரை இழந்த பின்னர் பிரிவாற்றாது உயிர்விட்ட மகளிரும் உண்டு உயிர் விடாது வாழ்ந்தவர்கள் பலவகை இன்பங்களையும் துறந்து துன்புற்று வாழ்ந்தனர்.

பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தன் கணவனை இழந்து தீப்பாயச் சென்றவள் தன்னை அவ்வாறு செய்ய வேண்டாமென்று தடுத்தாரை நோக்கிக் கூறியதாக உள்ள புறநானூற்றுப் பாட்டில்,

"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிர்" (புறம் 246)

எனக் கணவனை இழந்த பெண்கள் நிலை கூறப்பட்டுள்ளது. ஏதோ இலை கலந்த நீர்ச்சோற்றைப் பிழிந்து எள்ளுத் துவையலும் புளிச் சாறும் சேர்த்து நெய்யின்றி வேளைக் கீரை அவியலுடன் உணவாகக் கொண்டு பருக்கைக் கற்கள் பதிக்கப்பட்ட இடத்தில் பாயின்றி உறங்கி வந்தனர் என்று மேற்கூறிய புறநானூற்று அடிகள் அறிவிக்கின்றன. இவ்வளவு

கொடிய துன்ப வாழ்வை ஏற்றுக்கொள்ளும் வழக்கம் எவ்வாறு வந்ததோ அறியோம். இக்கொடிய கைம்மை நோன்பை மகளிர் வெறுத்து உயிர் விடும் பழக்கமும் இருந்துள்ளது என்பது பெருங்கோப் பெண்டின் வரலாறு உணர்த்துவதோடு பின்வரும் குறுந்தொகைப் பாட்டும் வெளிப்படுத்துகின்றது.

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடு நாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே". (குறுந்தொகை-69)

பெண் குரங்கு ஒன்று தன் ஆண் குரங்கு இறந்தவுடன் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ விரும்பாது தன் குட்டிகளைத் தன் சுற்றத்திடம் சேர்த்துவிட்டு வரைபாய்ந்து உயிர் விட்டதாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது குரங்கு ஒன்று இவ்வாறு செய்திருக்குமா என்பது ஐயமே. நாட்டிலிருந்த பழக்கமொன்றைப் புலவர் குரங்கின் மீதேற்றிக் கூறியுள்ளார் என்றுதான் கருதுதல் வேண்டும். இத்தற்குறிப்பேற்றம், கைம்மை நோன்பு அக்கால மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றது.

கைம்மை மகளிர் தம் தலை முழுதும் மழித்துக் கொள்ளலும் இறந்த கணவரை எண்ணிக் கலங்கி மார்படித்துக்கொண்டு அரற்றலும் உண்டு (புறம் - 25).

இவ்வாறெல்லாம் பெண்கள் தம் அழகைச் சீரழித்துக்கொண்டது, காதலரை இழந்த பின்னர்

நல்வாழ்வு பெற விரும்பாமையும் பிறர் காதலிக்கும் நிலை தோன்றுமலிருக்கவும் ஆகும்.

கணவனை இழந்த மகளிர் மீண்டும் மணம் செய்துகொண்டதாக இலக்கியங்களில் கூறப்பட வில்லை. மணவிலக்கும் மறுமணமும் அக்கால மக்கள் விரும்பாதவைகள் போலும். கைம்மை நோன்பு கொண்டவர்கள் நூற்றல் தொழிலில் ஈடுபட்டிருந் தனர் (புறம்-326; நற்றிணை-359).

கணவரை இழந்த மகளிர் நோன்புகொண்டிருந் தது போன்று மனைவியரை இழந்த கணவரும் நோன்பு பூண்டு மறுமணம் செய்துகொள்ளாமல் இருந்துள்ளனர். அந்நிலையை ஆசிரியர் தொல் காப்பியர் "தபுதாரம்" என்று அழைத்துள்ளார்.

அக்காலத்தில் ஆடவர் பல மனைவியரை மணந்து கொள்ளும் பழக்கம் இருந்தது, ஆயினும் ஒரு மனைவியோடு வாழ்தலும் மனைவியிறந்தபின்னர் வேறொரு பெண்ணை மணந்து கொள்ளாமல் அவள் பிரிவாற்றுமையால் வருந்தலும் அக்கால ஆடவர் களிடையே போற்றப்பட்ட சிறப்பியல்புகளாய் இருந்தன (புறம்-71, 73, 245).

பெண்களுக்கே எனச் சில பழக்கங்கள் இருந் தமைபோன்று ஆண்களுக்கு எனவும் ஒரு வழக்கம் இருந்துள்ளது. அதுதான் 'மடலேறுதல்' என்ப தாகும். தான் காதலித்த பெண்ணை அவள் பெற் றோர் கொடுக்க இசையாத காலத்தில், காதலன் அவள் போன்ற உருவத்தைத் திரையில் எழுதிக் கையில் தாங்கிக் கொண்டு பனங்கருக்கால் செய்த

குதிரையின் மீது ஆடையின்றி ஏறிக்கொண்டு எல்லோரும் கண்டு வருந்துமாறு நகர் வலம் வருவது வழக்கமாம் பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரையின் உருளை அவனை ஊறுபடுத்திக் குருதி வடியச் செய்யுமாம். அவனது இரங்கத்தக்க நிலையைக் கண்ட ஊரார், பெண்ணின் பெற்றோரை வற்புறுத்தி அவனுக்கே கொடுக்கச் செய்வார்களாம். இம்மடலேறும் வழக்கம் பெண்களுக்கு உரியதன்று.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான" (தொல்.பொ. 25)

"கடலன்ன காம முழந்து மடலேருப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்" (குறள்-1137)

என்பன காண்க. மடலேறுதல் இலக்கிய வழக்குக்கே உரியதாக இருந்திருக்கக்கூடும். இலக்கிய வழக்கிலும் அப்பழக்கம் பெண்களுக்குரியதன்று என்று தமிழ் நாட்டார் கொண்டனர்; ஆனல் வட நாட்டார் பெண்களுக்கும் உரியதாகக் கொண்டனர்.

மனைக்கு விளக்காகிய மகளிர் இரவின் முற்பட்ட பொழுதில் திருவிளக்கேற்றி, அவ்விளக்குக்கு முல்லை மலர் தூவி, அதனை இல்லுறை கடவுளாக வழிபட்டனர்.

ஏதேனும் குடும்ப நலன்பற்றி அறிய வேண்டியிருப்பின் அவ்விளக்கின் முன் 'விரிச்சி' கேட்டு நிற்பர். ஒருவர் ஒன்றை அறிய விரும்பி விளக்கின் முன் தொழுது நிற்பர்; அவ்வமயம் வேறு யாரேனும் ஒருவர் தாமாக வேருெரு நிகழ்ச்சி பற்றிக் கூறுவர். அவர் கூறுவது விளக்கின் முன் நிற்போர் செவியில் கேட்கும் அதனைக் கொண்டு வினைய

இருக்கும் நன்மை தீமையைத் தெரிந்து கொள்வர். இம்முறையே ‘ விரிச்சி ’ எனப்படும். [1]

இக்காலத்தில் கூட இம்முறை நிலவாமலின்று. நாம் இருவர் ஒரு பொருள் பற்றி உரையாடிக் கொண்டிருக்குங்கால் அதற்குத் தொடர்பாக நம் தொடர்பின்றி அவர் கூறும் சொல் அமையுமேல் அதைக்கொண்டு நிகழப் போவதை முடிவுகட்டுகின் றோம். ஆனால் விளக்கு முன் நின்று பெருமுது பெண்டிர் கேட்பதில்லை

ஒன்றில் வெற்றி பெற்றால் அதைக் கொண்டாட விருந்தும் உண்டாட்டும் கொள்ளும் வழக்கமுண்டு. இவை மாலைக் காலத்தில்தான் நிகழும். [2] இக்காலங் களில் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து மகிழ்வதுமுண்டு. [3]

பல்லி எழுப்பும் ஓசையாலும், கண் துடித்த லாலும் நிகழவிருக்கும் நன்மை தீமையை அறியும் பழக்கம் அன்றும் இருந்தது.

“இனை நல முடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர் ; மனைவயின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே ” [4]

பல்லி இசைத்தலாலும் இடக்கண் துடித்தலாலும் பிரிந்து சென்ற தலைவர் விரைவில் வந்துவிடுவர் என்று தலைவி தோழிக்குக் கூறுகின்றாள். மகளிர்க் குத்தான் இம்முறை யெல்லாம் உரிய.

---

1. முல்லை பாட்டு. வரிகள் 6–11.
2. குறுந்தொகை 155.
3. அகம்–11. வரிகள் 4,5.
4. பாலைக் கலி 10. வரிகள் 19–22.

காகத்திற்குச் சோறிடுதலும், காகம் கரைவதால் விருந்தினர் வருவர் என்று கருதுதலும் அக்கால மகளிரும் அறிந்த வழக்கங்களாகும்.

பிறைதொழுதல், [1] ஞாயிறு வழிபடல் அக்காலத்திலும் போற்றப்பட்டன.

புதுப்புனலாடி மகிழ்தலும் கடல் நீராடுதலும் மக்கள் விரும்பிய நிகழ்ச்சிகளாகும்.

மகளிர் கைகளில் அணியாக வளையல்கள் அணிதலும் தலையில் பூச்சூடிக்கொண்டு விளங்குதலும் அன்றே தோன்றுபடு நிகழ்ச்சிகளாகும். பூக்களையும் தழைகளையும் உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும் மகளிர் மகிழ்ந்து விளையாடினர் பெண்களுக்குப் பூவையர் எனும் பெயருண்டு பூக்களை மிகுதியாக விரும்பி அணிந்ததனால்தான் இப்பெயர் அவர்க்கு உண்டாயிற்று போலும்.

தம் வாழ்க்கைக்குப் பயன்படுவனவற்றையெல்லாம் மதித்துப் போற்றலும் நறுவிரை நன்புகை காட்டி வழிபடுதலும் செய்துள்ளனர்.

பாம்பு, பேய், மரம், இடி, மின்னல் முதலிய வற்றை வழிபட்டதாக எவ்விதக் குறிப்பும் எங்கும் இல்லை. சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள் அவர்களை இருபதாம் நூற்றாண்டினர் போன்றே காட்டுகின்றன.

---

1. மதுரைக் காஞ்சி வரி 193.
2. குறுந்தொகை 295.

# 14. வாணிகம்

மக்கள் நல்வாழ்வில் சிறப்புற்று ஓங்குவதற்கு அவர்கட்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் எக்காலத்தும் குறைவின்றிக் கிடைத்தல் வேண்டும். 'நாடென்ப நாடா வளத்தன' என்று திருவள்ளுவர் குறிக்கோள் நாட்டைப் பற்றிக் கூறியிருப்பினும் ஒரு நாடு தன் மக்களுக்கு வேண்டிய யாவற்றையும் பெற்றிருத்தல் என்பது அரிதே. நாட்டில் உள்ள நகரங்களும் ஊர்களும் அவ்வாறே மக்கள் வாழ்வுக்கு வேண்டிய யாவற்றையும் பெற்றிருத்தல் இயலாது. ஆதலின் ஒருநாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் பொருள் போக்குவரத்து நிகழ வேண்டியுள்ளது. இல்லாத நாடுகள் மிகுதியாகப் பெற்றிருக்கும் நாடுகளி லிருந்து தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்நிலை தொடர்ந்து ஒழுங்காக நடைபெறச் செய்வதுதான் வாணிகம்

'வாணிகம்' எனும் ஒன்று இல்லையேல் மக்கள் வாழ்வு என்பதும் துன்பம் நிறைந்ததாகிவிடும் கிடைத்துள்ள மிகு பொருளால் அதனை முழுதும் பயன்படுத்தும் வகையறியாது அல்லல் படுவதோடு இன்றியமையாது வேண்டப்படும் பொருளும்

கிடைக்கப்பெருது வருந்தி மடிவர் ஆதலின் வாணிகமே மக்கள் வாழ்வின் உயிர்நிலே என்று கூடக் கூறலாம். இவ்வாணிகத்திற் சிறந்துள்ள மக்களே எல்லாவகையாலும் சிறந்த மக்களாவார். வாணிகமே உலகத்தை யாள்கின்றது

சிறப்புறு பயன்மிகு வாணிகத்தில் சங்க கால மக்கள் சிறந்து விளங்கினர். அக்காலத்தில் உள் நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் நன்கு சிறந்து விளங்கியது வாணிகம் மிகு பொருளே விரைவில் ஈட்டுவதற்குப் பெருந்துணே புரிவதாகும். ஓரிடத்தில் இன்றியமையாப் பொருள் ஒன்று இல்லேயேல் அதைப் பெறுவதற்கு மக்கள் எவ்வளவும் கொடுத்தற்குப் பின்னிடார். ஆதலின் தேவையைப் பயன்படுத்தி வணிகர்கள் அறநெறி கடந்தும் மிகு ஊதியம் பெற்றும் செல்வத்தைக் குவித்து மகிழத் துணிந்து விடுகின்றனர். இக்காலத்தில் நாம் காண்பது இக்காட்சிதானே? இருட்டு வாணிகமும் திருட்டுக் கொள்முதலும் எளிதில், இன்றுவறியராய் இருப்போரை, நாளேச் செல்வராக்கி விடுகின்றதன்ருே? "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்" விருப்புற்ருேர் வாணிகத்தைப் புகலிடமாகக் கொண்டு பொருளீட்டத் தொடங்கி அற நெறி பிறழ்ந்து மக்கள் அல்லல்பட்டு ஆற்ருது அழுமாறு செய்து வருகின்றனர் ஆனல் சங்க காலத்தில் வாணிகத்தில் அறநெறியைக் கடைப்பிடித்தனர்.

"கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம்
குறைபடாது பல்பண்டம் பகர்ந்து வீசி."[1]

வாணிகம் செய்தனர்.

1. பட்டினப் பாலேவரிகள் 210, 211

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்" (குறள்-120)

என வாணிகத்திற்கு இலக்கணம் வகுத்துக்கொண்டனர். பிறர் பொருளையும் தம் பொருளையும் ஒருபடியாகவே கருதினர். தம்முடைய பொருளானல் குறைத்துக் கொடுத்துப் பிறர் பொருளானல் நிறையக் கொள்வோம் என்று திட்டமிட்டு ஏமாற்ற எண்ணிலர்,

தொடக்க காலத்தில் வாணிகம் பண்ட மாற்று முறையாகவே இருந்தது. பண்டமாற்று என்பது ஒரு பொருளைக் கொடுத்து இன்னொரு பொருளைப் பெறுவதாகும். ஆதலின் பொருள்களை மிகுதியாக உண்டாக்கும் நாடே வாணிகத்தில் சிறக்க முடியும். அயராது உழைக்கும் மக்களை அக்காலத் தமிழகம் பெற்றிருந்தமையால் விளை பொருள்களும் செய் பொருள்களும் தேவைக்கு மேல் குவிந்தன. அவை வேண்டப்படும் இடங்களுக்கு விரைந்து சென்றன.

நெய்தல் நில உப்பு, மருத நிலத்திற்கு வந்தது; மருத நில நெல், நெய்தல் நிலத்திற்குச் சென்றது.

உள்நாட்டு வாணிகம் ஆட்கள் வழியாகவும், மாடு, கழுதை, குதிரை, வண்டி ஆகியவை வழியாகவும் நடந்தது கூட்டம் கூட்டமாக வாணிகம் செய்யும் முறை நிலவியது. அக்காலத்தில், ஒருவேலி ஆயிரங் கல நெல்லையளித்தது. கரும்புகள் தோடு கொள் வேலின் தோற்றம்போல் நிறைந்து,கரும்பின் எந்திரம் ஓயாது இயங்கி வெல்லமும் கற்கண்டும் மிகுந்து பெருகின. பனை மரச் சாற்றிலிருந்து பனாட்டுகள் உண்டாக்கப்பட்டுக் குவிந்தன.

"கஞ்ச காரரும், செம்பு செய்குநரும்,
மரங்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லரும்,
கண்ணுள் வினைஞரும், மண்ணீட்டாளரும்,
பொன்செய் கொல்லரும், நன்கலம் தருநரும்,
துன்ன காரரும், தோலின் துன்னரும்,
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிச்" [1]

செய்பொருள்களைச் செய்து பெருகின்றனர். இவை யெல்லாம் நாடெங்கும் இல்லாத இடங்களுக்குச் செல்வதற்குரிய பெருவழிகளும் (Trunk Roads), சிறு வழிகளும் நன்கு அமைந்திருந்தன. ஆங்காங்கு வழி முழுவதும் ஆறலை கள்வரை அச்சுறுத்தும காவல் வீரர்கள் வணிகர்க்குக் காவலாக நிறுத்தப்பட் ளனர். நகரங்கள் தோறும் பகலும் இரவும் வாணிகக் கடைகள் ஓயாது விற்பனை செய்து கொண்டே இருந் தன. பகல் கடையுள்ள இடத்திற்கு 'நாளங்காடி' என்றும், இரவுக் கடை உள்ள இடத்திற்கு 'அல்லங்காடி' என்றும் பெயரிட்டிருந்தன. மதுரை யிலிருந்த 'நாளங்காடி' யின் ஓயாத கம்பலை, விழாக் காலத்துப் பேரிரைச்சல் போன்று ஆர்த்ததாகவும், 'அல்லங்காடி' யின் பிற ஒலிகளை அடக்கும் கம்பலை பல வேறு பறவைக் கூட்டங்களின் ஒலி முழக்கம் போன்று இசைத்ததாகவும் மதுரைக் காஞ்சி கூறு கின்றது. அவ்வங்காடிகளில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களையும் அழகுறத் தொடுத்துக்கூறும் நயம் படித்து அறிந்து மகிழத் தக்கது.[2]

அளப்பதற்கும், நிறுப்பதற்கும், முகப்பதற்கும் உரிய அளவை முறைகளும், அவற்றிற்குரிய கருவி

1. சிலம்பு. இந்திர, 28–34.
2. மதுரைக் காஞ்சி வரிகள் 430–454.

களும் செம்மையாக அமைந்து இருந்தமை தொல் காப்பியம் முதலிய சங்க நூல்களால் அறியலாம்.

பொன்,வெள்ளி, செம்பு முதலியவை கண்டுபிடிக் கப் பட்டு அணியும் அணிகலன்களுக்கும் உண்ணும் கலன்களுக்கும் பயன்படுத்தியவர்கள், காசுகளைப் படைத்து வழங்கியவர்கள் வாணிகத்தில்மிகுதியாகக் காசுகளை வழங்காமை குறிப்பிடத்தக்கது. காசுகளாம் நாணயம் வாணிகத்தில் நுழைந்த பிறகே மக்கள் நாணயம் (Honesty) மறையத் தொடங்கிவிட்டது போலும். உழைப்போர் தொகை சுருங்கி உழையாது வாழும் மக்கள் கூட்டமும் பெருகத் தலைப்பட்டு விட்டது. விலையேற்றமும் பணவீக்கமும் தோன்றி வருவாயும் செலவும் பொருந்திக் கூடும் நிலையின்றி வாழ்க்கைப் புள்ளி நஞ்சு போல் நாளும் உயரத் தொடங்கிவிட்டது.

அன்று, முதலிலாது ஊதியம் பெற விழைந்து செய்யும் துணிவு முறையும், ஆக்கம் கருதி முதலிழக் கும் பேரவாப் பிடர் பிடித்துந்தும் செய்வினையும் கொண்டாரிலர்.

உள்நாட்டு வாணிகத்தைப் போன்றே வெளி நாட்டு வாணிகமும் சிறப்பாக நடந்தது. உள் நாட்டு வாணிகத்திற்கு உல்கு வரி கிடையாது. வெளிநாட்டு வாணிகத்திற்கு உல்கு வரி உண்டு. ஆனால் இன்ன பொருள்தான் இன்ன நாட்டிலிருந்துதான் வரலாம் என்ற கட்டுப்பாடு கிடையாது. இவ்விரண்டு வாணிகக் கொள்கைகளால் அக்காலவாணிகம் ஓங்கி உயர்ந்து நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற்றிருந்தனர். கட்டற்ற வாணிகமுறையால் வெளிநாட்டு வாணிகம் வளர்ந்தோங்கியது. அன்றியும் தமிழ்நாட்டின்மூன்று

பக்கங்களிலும் நீண்ட கடற்கரை நெடிது வளைந்து கிடந்தது. பல துறைமுகங்கள் பாங்குற அக்கடற் கரையை அணி செய்தன. கப்பல் கட்டும்தொழிலிலும் அதனை அஞ்சாது ஆழ்கடலிலும் ஓட்டும் வினை யிலும் தமிழர்கள் தமக்கு நிகர் தாமே என்று புகழ் பெற்றிருந்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் காயல்பட்டினம், தொண்டி முசிரி முதலியன உலகப் புகழ் பெற்ற துறைமுகங் களில் தலைமையானவை. "உலகு கிளர்ந்தென்ன உருகெழுவங்கம் புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ இரவும் எல்லையும் அசைவின்றுகி"[1] விரைந்து சென்று கொண்டிருந்தன. "அருங்கலம் தரீஇயர் நீர் மிசை நிவக்கும் பெருங்கலிவங்கம்"[2] திசைகள்தோறும் திரிந்தன. "நெடுங்கொடி நுடங் கும் நாவாய்கள்"[3] துறைமுகங்கள் தோறும் தோன் றின. பெரிய மரக்கலங்கள் கூம்புடனே மேல் விரிக் கப்பட்ட பாயையும் மாற்றுமல் அதன் மேற்பாரத்தை இறக்காமல் நுழையக் கூடிய துறைமுகங்களும் இவ்வாறு வரும் மரக்கலங்களால் வந்து நிறையும் பல்வகைப் பண்டங்களையுடைய கடற்கரைப் பட்டி னங்களும் உடையனவாய் இருந்தன, அக்காலத் தமிழகம் என்பதனை,

........"கூம் பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரம் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல்பல் தாரத்த நாடுகிழ வோயே" (புறம்.30)

1. அகம்-255.
2. பதிற்றுப்பத்து.
3. அகம்-110.

எனச் சோழன் நலங்கிள்ளியை உறையூர் முது கண்ணன் சாத்தனர் பாராட்டுவதிலுல் அறியலாம்.

பல்வேறு நாடுகளிலிருந்தும் பொருள்கள் வந்தன என்பதை,

"வேறுபல் நாட்டுக் கால் தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை"
(நற்றிணை-295)

என்று கூறுவதனல் அறியலாம்.

நாட்டுக்கு வேண்டிய விலையுயர்ந்த பண்டங்கள் பெரிய கப்பல்களில் வந்து இறங்கி மலைபோல் குவிந்து கிடந்தன என்பதையும், கப்பல்கள் அஞ்சத் தகும் கடலில் அலைகளைப்பிளந்து கொண்டு கடுங் காற்ருேடு கரை சேர்தலும் இன்னிசை முழங்க அவை வரவேற்கப்படுதலும் உண்டு என்பதையும்,

"வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய இரும் பௌவத்துக்
கொடும்புணரி விலங்கு போழக்
கடுங்கா லொடு கரைசேர
நெடுங்கொடி மிசைஇதை எடுத்து
இன்னிசைய முரசு முழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்குஇழிதரும்
ஆடியற் பெரு நாவாய்
மழைமுற்றிய மலை புரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடல்" (மதுரைக்காஞ்சி வரிகள் 75-86)

என்று கூறுவதனல் தெளியலாம். இது பாண்டிய நாட்டுத் துறைமுகத்தின் காட்சி. துறைமுகங்கள்

தோறும் கப்பல்கள் ஏற்றிவந்த பண்டங்களை இறக்குதலும், வெளிநாடுகட்குச் செலுத்தவேண்டிய பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றுதலும், ஓய்வு ஒழிவு இன்றி நிகழ்ந்து கொண்டிருந்தன. ஏற்றுமதி இறக்குமதிக் காப்பு வரிகள் இருந்தும் பொருள்கள் வருதலும் போதலும் குறையவில்லை. பெரிய காவல் ஏற்பாடுகள் இருந்தன. வலிமை வாய்ந்த வீரர்கள் பணிபுரிந்தார்கள். வெளி நாட்டுக்குச் செல்லும் பொருள்களின் மீது சோழ அரசின் அடையாளமாகும் புலிப் பொறியைப் பொறித்தனர். அங்குப் பணி செய்வோர்கள் நாட்டுப் பற்றும் அரசர் பற்றும் உடையோராய்ப் பொருள்களைக் காக்கும் தொழிலில் ஞாயிறு போன்று நாள்தொறும் அயர்வின்றி உழைத்தனர். இவர்கள் எல்லோரும் இவ்வகைத் தொழில்களை வழி வழியாகச் செய்து புகழ் பெற்றவர்கள்.

கட்டற்ற வாணிகம் (Free trade) நடந்தது. கடலிலிருந்து நீராவியாகச் சென்ற நீர் மலையில் பெய்வதும், மலையில் பெய்த நீர் மீண்டும் கடலுக்கு வருவதும் இயற்கையாக மாறி மாறி நிகழ்வது போன்று பொருள்கள் இந்நாட்டிலிருந்து வெளி நாட்டுக்குச் செல்வதும் வெளி நாட்டிலிருந்து இந்நாட்டுக்கு வருவதும் தங்கு தடையின்றி நடந்து கொண்டிருந்தன, இவ்வாறு வாணிகச் சிறப்புடன் விளங்கியது சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம். கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் பெரும்புலவர் கவினுறக் கூறுவது பின்வருமாறு :

“ நல்லிறை வன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழில் மாக்கள்
காய் சினத்த கதிர்ச் செல்வன்

தேர்பூண்ட மா அபோல
வைக ரொறும் அசை வின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்புஅறியாமை வந்துஈண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போர்"     (பட்டினப்பாலை வரிகள் 122-137)

இவ்வாறு சிறந்திருந்த காவிரிப்பூம்பட்டினத்தைத் துறைமுகமாகக் கொண்ட தமிழ்நாடு—சிறப்பாகச் சோழநாடு.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு" [1]

உடையதாகச் சிறப்புற்றிருந்தது.

1. பட்டினப்பாலை வரிகள் 185–193.

யவன நாடுகளிலிருந்து பாவை விளக்குகளும், தண் கமழ் தேறலும் தமிழ் நாட்டுக்கு வந்துள்ளன.[1] யவன நாட்டுக் கப்பல்கள் பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்தன.[2]

'யவனம்' என்பது முதலில் கிரேக்க நாட்டையும் பின்னர் உரோம நாட்டையும் குறித்தது. பின்னர் மேனாட்டனைத்தையும் குறிக்கும் சொல்லாகி அரபிய நாட்டையும் குறிக்க வழங்கியுள்ளது.

சங்க காலத்தில் பல நாட்டு வணிகர்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து தங்கியிருந்தனர். வேற்றுமை யுணர்வின்றி அனைவரும் ஒன்றுபட்டு உறைந்தனர். என்றும் விழா நடக்கும் ஊர்போலவே மக்கள் கூட்டம் உடையதாய்க் காவிரிப்பூம்பட்டினம் காட்சியளித்தது.[3] அக்காலத்தில் பட்டினம் என்றாலே அது காவிரிப்பூம்பட்டினந்தான் என்று அறியும் அளவு புகழ் பெற்றிருந்தது.

சங்ககாலத் தமிழ்நாடு வெளி நாட்டு வாணிகத்தாலும் நன்கு செழிப்புற்று ஓங்குவதற்குத் துணையாகக் கப்பலோட்டும் மாலுமிகள் ஆழ்கடலிலும் அச்சமின்றிச் சென்றனர். அவ்வாறு செல்வோர்க்குப் 'பெரு நீரோச்சுநர்' என்னும் பட்டம் அளித்துப் பாராட்டினர். கடற் கரைகளில் கப்பல்கள் இரவில் கரைவந்து சேர்வதற்கு உதவியாகக் கலங்கரை விளக்கங்கள் இருந்தன. 'கலங்கரை விளக்கம்'

1. நெடுநல்வாடை வரி 101. புறநானூறு 56, வரி 18.
2. அகம்–149.
3. பட்டினப்பாலை 216,217.

எனும் சொல்லே நம் நாட்டுக் கப்பல் செலவுச் சிறப்பை நன்கு விளக்கும் தன்மையதாய் உள்ளது. "திரை கடல் ஓடியும் செல்வம் தேடு" என்பது நம் நாட்டுப் பழமொழியன்றோ?

# 15. போர்கள்

'போர்' என்பது இன்று எல்லோராலும் வெறுக்கப்படும் ஒன்ருக முழங்கப்பட்டு வருகின்றது. ஆயினும் ஆங்காங்கே போர் ஆயத்தங்களும் போர் முழக்கங்களும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. "அமைதியை நிலை நாட்டவே போர் ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளோம்" என்று பறைய றையும் அரசுகளும் உள. கட்சிக் கொள்கை, சமய வேறுபாடு, பொருட்பற்று, பதவி விருப்பம் ஆயவை பற்றி ஆங்காங்கும் போர் இயல் காட்டும் நிகழ்ச்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன.

" ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத் தியற்கை" (புறம்-76)

என்று இடைக்குன்றூர் கிழார் இயம்புவது மனித இயல்பை எடுத்துக் காட்டுவதாகும். எல்லா உயிர்கட்கும் இயல்பாக உள்ள பிறவிப் பண்புகளுள் போர் விருப்பமும் ஒன்ருகும். போர் முனைப்பை அடக்கி அன்பும் அருளும் பொருந்த வாழ்வதே உயர் வாழ்வாகும் என்ற நல்லறிவு வரப்பெற்று வாழப் பழகி வருவது மக்களினம் ஒன்றே. ஆயினும் உரிமையைக் காக்கவும், மான இழிவைத் தடுக்கவும், தற்காப்புக்

காகவும் போர் வேண்டப்படுகிறது. ஒருவருடைய தனி வாழ்வைத் துன்பமின்றி இன்பமுறக் கொண்டு செல்வதின் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டு விட்டதால் தனி ஒருவர் போர் முயற்சியில் ஈடுபடுவதற்குரிய கட்டாய நிலை கிடையாது. ஆனால் அரசு தன் குடி மக்களிடையே அமைதி வாழ்வை நிலைநாட்டவும், அயல் நாட்டார் அற நெறி மீறிய வன்முறைச் செயல்களை எதிர்த்து ஒடுக்கவும் அது போர் முயற்சியை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகின்றது. அதனால்தான்,

> ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு" (குறள்-987)

என்று அறம் உரைத்த திருவள்ளுவரும் பொருட்பாலின் முதற்பாவின் முதற்சொல்லாகப் போர்க்குரிய 'படை'யை வைத்து,

> ''படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு'' (குறள்-381)

என அரசுக்குரிய இன்றியமையாதன ஆறனுள் படைக்கே முதன்மை கொடுத்துள்ளார். பின்னரும் 'படை மாட்சி', 'படைச் செருக்கு' என இரண்டு இயல்களை வைத்துள்ளார். ஆதலின் 'போர்' என்பது அறவே விலக்கமுடியாத ஒன்று என்று தெளிய வேண்டியுள்ளது. எல்லோரும் திருவள்ளுவர் கூறும் செவ்விய அறநெறிப்படி வாழும் இயல்பைப் பெறுவரேல் போரும் இராது; படையும் வேண்டாம்; நாட்டெல்லைப் பூசலும் மறையும்; உலகமே ஒரு குடும்பமாகும். அந்நாள் என்று வருமோ? விரைவில் வருவதாக.

இஃது இவ்வாருகப் பழந்தமிழ் நாட்டில் நிலவிய போர்க் கொள்கை, நிகழ்ந்த போர்கள் இவை பற்றி இனி ஆராய்வோம்:

சிலர் "பண்டைத் தமிழர்கள் ஓயாது போரிட்டுக் கொண்டு மடிந்தவர்கள்தாமே; தமிழ் இலக்கியம் அறிவிக்கும் உண்மை இது தானே" என்று தாம் ஏதோ பிறர் அறியாத உண்மையை அறிந்துவிட்டதாக எண்ணி இறுமாந்து உரைப்பர். சில வரலாற்ரு சிரியர்களும் இவ்வாறே எழுதியுள்ளனர். அவர்கள் 'புறம்' பற்றிய சில பாடல்களை மட்டும் படித்துவிட்டு இவ்வாறு கூறிவிட்டார்களே யன்றித் தொல்காப்பி யத்தையும், சங்க இலக்கியங்களையும் முழுதும் நன்கு கற்றறிந்து இவ்வாறு கூறினர்கள் என்று கருதுதல் இயலாது.

தமிழிலக்கியப் பகுப்பாம் 'அகம்', 'புறம்' என்பன வற்றுள் 'புறம்' என்பது போர் பற்றியும் கூறும் பாடல்களைப் பெற்றிருக்குமே யன்றி முழுதும் போரி லக்கியங்களாகவே இரா என்பதனை அவர் அறியார். அன்றியும் போர் பற்றிய பாடல்களை நாம் ஆராய் வோமானல் கி. மு. ஏழாம் நூற்ருண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்ருண்டு வரையுள்ள சங்க இலக்கி யங்களால் அறியவரும் போர்கள் ஒன்பதே ஒன்பது தான். ஒன்பது நூற்ருண்டுகளில் ஒன்பது போர் என்பது ஒரு நூற்ருண்டுக்கு ஒன்று வீதமன்ரே கொள்ளவேண்டும். கல்வியும் நாகரிகமும் பண் பாடும் மிகுந்துள்ளதாகக் கருதப்படும் இவ்விருப தாம் நூற்ருண்டில் கால் நூற்ருண்டுக்குள் இரு பெரும் போர்களை உலகம் கண்டுளதே.

இதனை நோக்கும்போது சங்ககாலத் தமிழர்கள் போர்வெறி பிடித்துப் போர்செய்தே வாழ்நாட்களைக் கழித்தார்கள் என்பது எங்ஙனம் பொருந்தும்?

தொல்காப்பியத்தில் புறத்திணையியலில் போர் பற்றி இயற்றுவதற்குரிய இலக்கியங்கட்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலியன போர் முறை பற்றிய இலக்கியங்களுக்குரியனவே. அவற்றைப் போர்க்குரியனவே எனக் கொண்டு "போரையும் கலையாக்கிக் கொண்டனர்; போர்க் கலையில் திளைத்தனர் போர் வெறியர்கள்'' என எண்ணி விட்டனர் போலும்.

அன்றியும் போர்த் தொடக்கம் நிரை கவர்தலாக இருத்தலானும், போர்த் திணைகட்குரியோர் ஒவ்வொரு வகையான பூக்களைச் சூடிக்கொள்வர் என்று அவ்வப்பூக்களால் திணைகட்குப் பெயரிட்டிருத்தலானும், இவ்வொழுக்கங்களெல்லாம் மிக மிகப் பழங்காலத்துக்குரியன என அறுதியிட்டு அதன் விளைவாய்ச் சங்க காலத் தமிழ் மக்களைக் காட்டுவாழ் மக்கள் காலத்தவராகக் (People of the primitive age) கொள்ளும் வரலாற்றாசிரியரும் உளர். தொல்காப்பியத்தில் கூறப்படுவனவற்றுள் பல செய்திகள் அவர் காலத்துக்கு முந்தியனவும் உள. தொன்று தொட்டு வருகின்ற இலக்கிய மரபுகளைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுகின்றார். புறத் திணையின் போர் பற்றிய செய்திகள் எல்லாம் தமிழ்நாட்டில் அவர்க்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே நிகழ்ந்து வந்தன. அவற்றை இலக்கியத்தில் கூறுவது எவ்வாறு என்பதற்கே

திணை, துறை வகுத்து இலக்கணம் கூறுகின்றார். "புறத்திணை இலக்கணம்" என்று அவரே கூறுகின்றார். ஆதலின் புறத்திணையில் கூறப்படுவன முழுவதும் அவர் காலத்து நடந்தநிகழ்ச்சிகள் என்று கருதுதல் சாலாது.

அன்றியும் போர்பற்றி அவர் கூறும் விதிகள் இக்காலத்து நிலவும் உயர்ந்த கொள்கைகளாகவே இருக்கின்றன. இக்காலத்தில் போர் ஆயத்தத்திற்கு எனப் படைகளைப் பெருக்கும் வல்லரசுகள் கூறுவதென்ன? அமைதியை நிலைநாட்டவும் வன்முறையில் காரணமின்றி ஈடுபடும் அரசை அடக்கவும், தற்காப்புக்காகவும் போர்க் கருவிகளைப் பெருக்குவதாகக் கூறிக்கொள்கின்றனர் அன்றோ? தொல்காப்பியர் 'வஞ்சி' என்பதற்கும் 'தும்பை' என்பதற்கும் கூறும் இலக்கணம் யாது? 'வஞ்சி' என்பது,

"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்றே"
(தொ. பொ- 62)

என்று கூறுகின்றார். அஃதாவது நாடுகளை வென்று தனதாக்கிக் கொள்ளும் விருப்பில் குறையாத குணத்தினையுடைய அரசன் நாட்டின்மீது படையெடுங்குங்கால், அவனைத்தடுத்து நிறுத்தி வெல்லுதல் வேண்டும் என்பதாகும். 'தும்பை' என்பது,

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப" (தொ.பொ-70)

என்று கூறுகின்றார். அஃதாவது தனது வலிமையொன்றினையே உலகில் நிலைநாட்ட எண்ணங் கொண்டு படையெடுத்து வந்த வேந்தனைத் தன்

நாட்டு எல்லையைக் கடப்பதற்கு முன்பே சென்று அவன் வலிமையை அழித்து வெல்லுதல் வேண்டும் என்பதாகும். ஆகவே போர் என்பது தற்காப்புக்காக வும் முறைகடந்து நாடு பிடிக்கும் விருப்பிலும் வலிமையை நிலை நாட்டும் நோக்கிலும்வரும் அரசரை அடக்கிச் செந்நெறிப் படுத்துவதற்காகவும் மேற் கொள்ளப்படவேண்டிய ஒன்று என்று தொல்காப்பி யர் தெளிவுற வரையறுத்துள்ளார். இன்று கூறப் படும் கொள்கையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு சங்க காலத் தமிழ் நாட்டுப் பெரியோர் கூறி யுள்ளனர் என்பது அறிந்து மகிழத் தக்கது. போர் பற்றிய உயர்ந்த குறிக்கோளை வெளியிட்டவர்களைப் போர் வெறியர் என்பது அன்புக் கடவுளை அரக்கப் பேய் என்பது போலாகுமன்றோ?

தொல்காப்பியர்க்குப் பின் ஒன்பது நூற்றாண்டு களில் ஒன்பது பெரும்போர்கள் தாம் நிகழ்ந்துள்ளன வாகக் குறிப்பிட்டோம். எல்லாப் போர்களும் தொல் காப்பியர் வகுத்த குறிக்கோள்படியே நடந்தன என்று கொள்ளுதல் முடியாதுதான். மன்னர்களில் ஒருவரிருவர் அறநெறிகடந்தும் சென்றிருக்கலாம். அவ்வாறு நிகழ்ந்த ஒருவர் இருவர் போர் வெறிச் செயலை ஒரு நாட்டு மக்கள் மீது எக்காலத்துக்கும் உரியதாக ஏற்றிக் கூறுதல் அறத்தொடு பட்ட தாகாது. தவறுவது மக்கள் இயல்புதானே. ஆயினும் சங்ககாலத் தமிழ் அரசர்கள், ஓயாது தவறி உலகையே போர்க்களம் ஆக்கிலர்.

சங்க காலத் தமிழரசர்கள் அமைதி நோக்கோடு அருள் நோக்கமும் உடையவராவர். இக்காலத்தில் இரு பகை நாடுகள் போரிலீடுபட்டிருக்கும்போது

அவ்விரு நாடுகளையும் சாராது, இரு நாட்டுப் படைகளிலும் துன்புறுவோர்க்குச் செஞ்சிலுவைச் சங்கம் எனும் அருள்நெறி அமைப்பு அன்போடு சென்று ஆம் உதவிகளைச் செய்கின்றது. இது போன்றே அக்காலத்தில் உதியன் சேரலாதன் எனும் சேர நாட்டுப் பெருமன்னன், பாரதப் போர் நிகழ்ந்த காலத்து, பாண்டவர் கௌரவர் எனும் இருசார் மன்னரின் படைகளுக்கும் பெருஞ்சோறு அளித்து அறச் செயல் ஆற்றியுள்ளான். இச்செயலை முரஞ்சியூர் முடிநாகர் ஆயர் எனும் பெரும் புலவர்,

"அலங்கு உளைப்புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"
(புறம்-2)

எனப் பாராட்டினர்.

உதியன் சேரல் வழிவந்த இளங்கோ அடிகள் கற்றோர் நெஞ்சைக் கவரும் சிலம்பில்,

'ஓரைவர் ஈரைம்பதின்மர் உடனெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்" (சிலம்பு-29 ஊசல்வரி)

எனச் சிறப்பித்துள்ளார்.

உதியன் சேரல் ஆதன், இவ்வாறு பலரும் பாராட்டும் வகையில் 'பெருஞ்சோறு அளித்த காரணத்தால் 'பெருஞ்சோற்று உதியன்' என அழைக்கப் பெற்றுள்ளான். வரலாற்றாசிரியர்களிற் சிலர் இப்பெருஞ்சோறளித்த செய்தியைப் புலவரின் கற்பனையால் எழுந்தது என்று புறத்தே தள்ளுவர். ஆனால் பாரதக்கதை உண்மையாக நடந்தவரலாறே

என்பர். பாரதக் கதை உண்மையாக நடந்த வரலாருக இருப்பின் பெருஞ்சோறு அளித்த நிகழ்ச்சியும் உண்மை என்று கொள்வதில் தடையென்னே? உண்மை என்று கொண்டால் தமிழர்க்கு உண்டாகும் புகழை நினைந்து உளம் புழுங்கிப் பொய்யென மறுக்க முயல்கின்றனர் போலும்!

அக்காலப் புலவர் பெருமக்களும் சான்றோரும் போர் நிகழாது தடுத்து அமைதியை நிலைநாட்டுவதில் கண்ணுங் கருத்துமா யிருந்துள்ளனர்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர் சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கு வீற்றிருந்த காலத்து இருவரையும் நோக்கி "இன்றே போல்க நும் நட்பு" என வாழ்த்திக் கூறியுள்ள அறிவுரை இருவரையும் என்றும் நட்பினராக்கும் ஆற்றல் மிக்கதாகும். "புலிக்கொடியும் மீனக்கொடியும் சேர்ந்தே பறக்கட்டும்" என்று நட்பரசினர் ஒழுகலாற்றைப் புலப்படுத்தும் சீர்மை இன்றும் பாராட்டற்பாலது.

"ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர், இருவீரும்
உடல்நிலை திரியீராயின் இமிழ் திரைப்
பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே" (புறம்-58)

என "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" எனும் கொள்கையால் வரும் நன்மையை எடுத்துரைத்து வேண்டியுள்ளமை அக்காலப் புலவரின் அமைதி நிலை நாட்டும் தொண்டை நன்கு அறிவிக்கின்றது.

அதியமான் நெடுமான்அஞ்சிக்கும் தொண்டைமானுக்கும் இடையே நிகழவிருந்த போரை ஒளவையார் தமது "இவ்வே பீலி யணிந்து" எனும் அங்கதம்பொருந்திய நயமிக்க பாட்டால் தடுத்து நிறுத்திய செய்தி நாடு அறிந்த ஒன்றாகும்.

சோழன் நலங்கிள்ளிக்கும் சோழன் நெடுங்கிள்ளிக்கும் போர் நடந்த காலத்து இருவரையும் நோக்கிக் கோவூர்கிழார் எனும் அமைதிப்பெரும் புலவர்,

"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே;
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் உங்குடியே
இருவீர்வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
குடிப்பொருளன்று நும் செய்தி; கொடித்தேர்
நும்மோரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்விகலே" (புறம்-45)

எனத் தருக்க முறையில் உண்மை நிலையை விளக்கி அவர்களை ஒன்றுபடுத்திய செயலைத் தமிழுலகம் அறியும். இவ்வாறெல்லாம் புலவர்கள் அமைதிக் கொள்கையைப் பரப்பி வந்தமையால் மக்கள் எல்லாரும் "இருமுந்நீர்க் குட்டமும், வியன்ஞாலத் தகலமும் வளிவழங்கு திசையும் வறிது நிலைஇய காயமும்" பற்றி ஆராய்ச்சி நடத்தும் வாழ்வில் ஈடுபட்டனர் அறிவும் ஈரமும் பெருங்கண்ணோட்டமும் பெற்றிருந்தனர். அவர்கள் நாட்டில் "சோறுபடுக்கும் தீயும் செஞ்ஞாயிற்றுத் தெறலும்" தான் இருந்தனவேயன்றி, அணுக்குண்டு, வளிக்குண்டு

வெப்பங்கள் தோன்றில. வானவில்லைத்தான் அறி வார்களேயன்றிக் கொலைவில்லையறிந்திலர். அம்பு கள் அரண்களில் உறங்கிக்கொண்டிருந்தன. அறம் துஞ்சும் செங்கோல் ஆண்டது. மக்கள் எவ்வித நடுக்கமுமின்றி ஏமக்காப்புடையாராய் இனிதேவாழ்ந் தனர். எங்ஙனமாவது போர் நிகழ்ந்தாலும் படைக் கும் படைக்குந்தான் போரே ஒழிய மக்களுக்கும் போருக்கும் நேரிடைத் தொடர்பு இராது. போர் தொடங்குவதற்குமுன் அறிவிப்புச் செய்து போரில் தொடர்பற்ற மக்களையும் மாக்களையும் போர் நிகழும் இடத்துக்கப்பால் இருக்கச் செய்துவிட்டே போர் தொடங்கும் நியதியை ஏற்றுக்கொண்டிருந்தனர். போர்ப்பறை கேட்டதும் மக்கள் தக்க காவல் இடத்தை அடைந்து விடுவர். அவ்வாறு அடைய முடியாத ஆவும் பிறவும் காணப்படுமேல், அவை களைப் படையெடுத்து வருவோரே அப்புறப்படுத்த முயல்வர். இவ்வாறு மக்களுக்குப் பயன்படும் ஆநிரையை அப்புறப்படுத்தலே பின்னர் போர்த் தொடக்கத்தின் முதல் நிகழ்ச்சியாகி விட்டது.

அக்காலத்தில் மரங்களை வளர்த்தலில் எல்லோரும் கருத்துச் செலுத்தினர். அக்கருத்தை வலியுறுத்து தற்காக ஒவ்வொரு அரசரும் தங்களுக்கு விருப்ப மான ஒரு மரத்தை வளர்க்கத் தொடங்கினர். அவ்வாறு அரசரால் வளர்க்கப்பட்ட மரம் சிறப்புறு காவலுக்கு உள்ளாயது. அதனால் அதற்குக் காவல் மரம் எனும் பெயர் உண்டாயது. போர்செய்ய விரும்பும் பகையரசர், எந்த நாட்டின்மீது படை யெடுக்க விரும்புகின்றாரோ அந்நாட்டு அரசரின்

காவல் மரத்தை வெட்ட முயல்வார். பின்னர் இரு படைகளுக்கும்போர் உண்டாகி வெற்றி தோல்வியை அங்கேயே முடிவு செய்து விடுவர். காவல் மரம் வெட்டப்பட்டு விட்டால் அம்மரத்துக் குரிய அரசர் தோல்வியுற்றவராகக் கருதப்படுவர். இம் முறையால் படையிழப்பு மிகுதியாக இராது மக்களுக்கும் தொல்லே இராது.

'போர்' எனின் படைகளும் வேண்டுமன்றே? அக்காலத்தில் நான்கு விதப் படைகள் இருந்தன. அவை,

"கடுஞ் சினத்த கொல்களிறும்
கதழ் பரிய கலிமாவும்
நெடுங் கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும்" (புறம்-55)

எனப் பாராட்டிப் போற்றப்பட்டன. போர்க்களத்தில் பயன்படுத்திய கருவிகள் வில், அம்பு, வாள், தோல் (கேடயம்) முதலியன இவற்றுள் பலவகை யுண்டு. இக் கருவிகளேக் கொண்டு நால்வகைப் படைகளுடன் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி பொருத காட்சியைப் பரணர் என்னும் பெரும் புலவர், வண்ணித்துள்ள பாடல் போர்க்கள நிலையை நம் அகக்கண்முன் அப்படியே கொண்டு வருகின்றது.

"வாள், வலந்தர மறுப்பட்டன்ன
செவ்வானத்து வனப்புப் போன்றன.
தாள், களங்கொளக் கழல் பறைந்தன
கொல் லேற்றின் மருப்புப் போன்றன.
தோல், துவைத்து அம்பின் துளே தோன்றுவ
நிலைக்கு ஒரா அ இலக்கம் போன்றன.

மாவே, எறிபதத்தான் இடங் காட்டக்
கறுழ் பொருத செவ்வாயான்
எருத்து வவ்விய புலி போன்றன.
களிறு, கதவு எறியாச் சிவந்து உராய்
நுதி மழுங்கிய வெண் கோட்டான்
உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன.
நீயே, அலங்குஉளை பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ
அனையை ஆகல் மாறே
தாயில் தூவாக் குழவிபோல
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே" (புறம்-4)

இவ்வாறு நம் தமிழகத்துக்குள்ளேயே நிகழ்ந்த போர்களை அவை நிகழ்ந்த இடத்தின் பெயரால், வெண்ணிப்போர், தலையாலங்கானப்போர், கழுமலப் போர், மோகூர்ப்போர், தகடூர்ப்போர், பறம்புப் போர், ஆவூர்ப்போர், கோவலூர்ப்போர், கொடு கூர்ப்போர் என அழைக்கலாம். இவைபற்றிச் சங்கஇலக்கியங்களால் ஒருவாறு அறியலாமேயன்றி விரிவாக அறிய இயலாது. இவற்றுள் வெண்ணிப் போரும் தலையாலங்கானப்போரும் பல புலவர்களால் பாடப் பெற்றவை. வெண்ணிப்போர் கரிகாலனுக்கும் ஆலங்கானப்போர் பாண்டியன் நெடுஞ்செழிய னுக்கும் வெற்றித்திருவைக் கூட்டி வைத்தன.

தமிழக மூவேந்தர் மரபிலும் இமயம் வரையில் சென்று தத்தம் கொடிகளை இமயமலையில் நாட்டிப் புகழ் நிறுவியவர்களும் உளர். வில், புலி, மீன் பொறித்த கொடிகள் பனிபடு நெடுவரையில்

பறப்பதைக் கண்டு மகிழ்வதில் இன்பங் கண்டனர் அக்காலத் தமிழ் மக்கள்.

இவ்வாறு தம்மவரோடும் அயலவரோடும் போர் புரிந்து வாகை சூடுவதற்கு உதவியாகப் படைகளும் அவற்றை நடத்திச் செல்லும் படைத்தலைவர்களும் அன்று மிக்கிருந்தனர். 'போர் எனிற் புகழும் புனை கழல் மறவர்' நாட்டுப் பற்று மிக்கோராய்,

> ''என்ஐ முன் நில்லன்மின் தெவ்வீர்; பலர் என் ஐ
> முன் நின்று கல் நின்றவர்" (குறள் - 771)

என மொழிந்து போரிட்டுப் புரந்தார் கண் நீர்மல்கச் சுழலும் இசைவேண்டி உயிரை வேண்டாராய்ப் போர்க்களத்தில் பொருது வீழ்ந்தனர். அவரைக் கல்லில் நட்டுக் கடவுளாய்ப் போற்றினர் நாட்டு மக்கள். வந்த போரை விடாது வலிய போர்க்குச் செல்லாது வாழ்ந்தனர் சங்க காலத் தமிழர்.

## 16. புலவர்கள்

புலவர்களே நமது மொழியின், பண்பாட்டின், நாகரிகத்தின் புரவலர்கள் ஆவார்கள். புலவர் எனும் தமிழ்ச் சொல் மிகவும் பொருள் பொதிந்த ஒன்ரு கும். வெறும் மொழிப் புலமை மட்டும் உடையோர் புலவர் ஆகார். மொழிப் புலமையுடன் பண்பு நலன் சான்று, ஏதேனும் ஒரு துறையில் வல்லுநராகவும், பிறர்க்கென வாழும் பெற்றியராகவும் இருப்போரே புலவர் எனும் பெயர்க்கு உரியவராவார். சங்ககாலப் புலவர்கள் அனைவரும் இவ்விலக்கணத்துக்கு உரிய ராகவே இருந்தனர்.

சங்க காலப் புலவர்கள் தமிழுக்கென வாழ்ந்த னரேயன்றித் தமக்கெனத் தமிழால் வாழ்ந்திலர். தம்மை நினைந்து தமிழைமறவாது, தமிழை நினைந்து தம்மை மறந்தனர். ஆதலின் அவர்களை மன்னரும் மக்களும் ஒருங்கே போற்றினர்.

புலவர்களை மன்னர்கள் போற்றியமைக்குச் சான்ருகப் பல நிகழ்ச்சிகளைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பெருமன்னன் வஞ்சினம் மொழியுங்கால்,

“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை” (புறம்-72)

எனக் கூறித் தாம் புலவர்பால் கொண்டுள்ள பெரு மதிப்பை வெளிப்படுத்தியுள்ளமை காண்க.

மோசிகீரனுர் எனும் புலவர் ஒருகால் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் காணச் சென்றபொழுது, களைப்பு மிகுதியால் முரசு கட்டில் என்று அறியாது அதில் ஏறித் துயின்று விட்டார். அவ்வாறு ஏறித் துயின்றது வாளால் வெட்டி வீழ்த்துதற்குரிய மாபெரும் குற்றமாகும். ஆயினும் அரசன் அவரைத் தெறுவர இருபாற்படுக் கும் வாள்வாய் ஒழித்து அவனுடைய மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென அவர் துயிலெழுந் துணையும் கவரி கொண்டு வீசிக்கொண்டிருந் தான். களைப்பு நீங்கி விழித்தெழுந்த புலவர் இந்நிகழ்ச்சியைச் சுட்டி இனிய பாடலொன்று இயம்பினர்.

“மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை

அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நற்றமிழ் முழுது அறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவண் இசை யுடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்குஇது செயலே. (புறம்-50)

வாளால் வெட்டி வீழ்த்த வேண்டிய அரசன் அடக்க ஒடுக்கமாய் வணங்கிப் பணியாள் போன்று அவர் களைப்பு நீங்கக் கவரி வீசிய செயல், அவன் புலவர் பால் கொண்டுள்ள பெருமதிப்பைப் புலப்படுத்து கின்றதன்றோ?

இன்னும் பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்ததும், கபிலர்க்குப் பல ஊர்கள் அளித்த தும், அரண்மனை நோக்கிவரும் புலவர்கட்கு என்றும் அடையா நெடுவாயில்களில் நின்று வரவேற்று ஆவியன்ன அவிர் நூற்கலிங்கமும் கொட்டைக் கரைய பட்டுடையும் நல்கி உடீஇ, அருங்கடித் தீஞ்சுவை அமுதொடு பிறவும் விருப்புடை மரபின் கரப்புடை அடிசில், மீன் பூத்தன்ன வான்கலம் பரப்பி மகமுறை நோக்கி முகனமர்ந்து ஆனாவிருப் பின் தானின்றூட்டி, நெருப்பென ஒளிவிடும் பொற்றாமரைப் பூக்களைச் சூட்டி, சங்கு போன்ற வெண்ணிறம் வாய்ந்த குதிரைகள் நான்கு பூட்டிய நற்றேரில் ஏற்றி, ஏழடி பின் தொடர்ந்து விடை கொடுத்துப் போக்கியதும், புலவர்கள்பால் அரசர்

கட்குள்ள பெருமதிப்பை வெளிப்படுத்தும் செயல்களன்றோ?

மன்னர்கள் இவ்வாறு சிறப்புச் செய்து போற்ற மக்கள் வாளா இருப்பரோ? புலவர்களைக் கடவுளர் எனக்கருதிப் போற்றி வழிபட்டுள்ளனர். இறைவனை வணங்கும் திருக்கோயில்களில் புலவர்களின் வடிவங்களை வைத்து வழிபட்டனர் இன்றும் ஒண் தமிழ்க் கூடலாம் மதுரையின் அங்கயற்கண்ணியின் துங்க நற்கோயிலில் நாற்பத்தொன்பது புலவர் படிவங்களும் இறைவன் படிவத்துடன் இணையாக வைக்கப் பட்டிருப்பதைக் காணலாமே. ஆங்காங்குச் சில ஊர்களில் நக்கீரர்க்கும் ஔவைக்கும் பிறர்க்கும் எடுத்த கோயில்கள் காலவயப்பட்டுக் காணுமற் போகாமல் எஞ்சி நின்று ஏத்துமின் என்று அழைக்கின்றனவே. ஆகவே மக்களும் புலவர்களைப் போற்றினர் என்பது வெற்றுரையன்று என்று தெளியலாம்

இவ்வாறு புலவர்கள் போற்றப்பட்டது எதனுல்? கொடுக்கில்லாதாரைப் பாரியே என்று கூறிக் கூறையும் கூழும் பெற்று வாழ்ந்திருப்பின் சங்க காலப் புலவர்களை எவர்தாம் மதித்திருப்பர். அக்காலப் புலவர்கள் ‘ தன்மானம் ’ மிக்கவர்கள்; தம் நேர்மை யுள்ளத்தையும் சான்ருண்மையையும் பொன்னுக்காக இழந்தாரல்லர். மன்னர்களின் பரிசைப் பெற்று வாழ்ந்தவரும் உளராயினும் மதியாது வழங்கிய பொருளை எவ்வளவுதான் மதிப்புடையதாயினும் பெருது விடுத்தனர், பெருஞ் சித்திரன் என்னும் புலவர் குமணனை நோக்கி,

"உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறுபெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென்; உவந்து நீ
இன்புற விடுதியாயின், சிறிது
குன்றியும் கொள்வல், கூர்வேல் குமண!" (புறம்-159)

என்று தம் வீறு தோன்றக் கூறியுள்ளமை காண்க. தமிழுணர்ச்சியும் புலமைப் பற்றும் இல்லாதார் கொடுக்கும் செல்வத்தைச் சிறிதும் விரும்பிலர். அவர் செல்வத்தைப் போற்ருது நல்லறிவுடையோர் வறுமையைப் போற்றினர். மதுரைக்குமரனுர்.

"மிகப்போர் எவ்வம் உறினும்; எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடமை யுள்ளேம்;
நல்லறிவு உடையோர் நல்குரவு உள்ளுதும்"

என்று செம்மாந்து உரைப்பதை நோக்குமின்.

இவ்வாறு தம் பெருமைக்கும் புலமைக்கும் இழுக்கு நேராத வகையில் குறிப்பறிந்து கொடுக்கும் வள்ளல்களை நாடி வாழ்ந்த புலவர்களும் தாம்பெற்ற பொருள்களைத் தமக்கென வைத்துக்கொண்டாரிலர். எல்லோர்க்கும் கொடுத்து ஈத்துவக்கும் இன்பம் துய்த்து வாழ்ந்தனர். மண்ணுள் செல்வம் எய்திய மன்னரைப் போன்று, செம்மல் உள்ளம் பெற்றுப் பிறர்க்குத் தீதறியாது ஒழுகினர்.

தமக்கெனத் தொழில்கள் பல கொண்டு பொருளீட்டி வாழ்ந்த புலவர்களும் உளர். ஆகவே அவர்கள் உள்ளத்தெழுந்த கருத்துக்களை அச்சமின்றி உலகுக்கு உரைத்தனர். மன்னரையும் இடித்துக் கூறும் மாண்புடையராய் இருந்தனர்.

கி. மு. 1000 முதல் கி. பி. 100 வரை வாழ்ந்த புலவர்களுள் 473 புலவர்கள் பாடிய பாடல்கள் 2279

தாம் நமக்குக் கிடைத்துள்ளன. இவையன்றி 102 பாடல்கள் உள. இவற்றின் ஆசிரியர்கள் இன்னர் எனத் தெரிந்திலர்.

தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆய மூவரும் தனிச்சிறப்புடையவர்கள் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பே தமிழ் வளர்ப்பதற்கெனச் சங்கம் தோன்றியிருக்க வேண்டும். ஆதலின் சங்க காலத்துக்கு முற்பட்டவராவார் தொல்காப்பியர். தொல்காப்பியர் காலம் கி. மு. ஏழாம் நூற்றுண்டு எனவும் திருவள்ளுவர் காலம் கி: மு. முதல் நூற்றுண்டு எனவும், இளங்கோ அடிகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு எனவும் கொண்டுள்ளோம். சங்க காலத்தை கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்குப் பின்னர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை என வரையறுக்கலாம்.

மொழி வளர்ச்சிக்கெனப் புலவர்கள் சங்கம் அமைத்த நற்பெருஞ்செயல் உலகிலேயே முதன் முதல் நம் தமிழகத்தில்தான் நிகழ்ந்துள்ளது. மொழி வளர்ச்சியை ஒழுங்குபடுத்தித் திருத்தமுற்ற நெறியில் செல்ல விதிகள் அமைத்து இலக்கியம் இயற்றுவதற்கு இலக்கணம் கண்டதும் நம் தமிழகத்தில்தான். தொல்காப்பியம் போன்றதொரு இலக்கணம் வேறு எம்மொழியிலும் அன்றும் தோன்றவில்லை; இன்றும் தோன்றிடக் கண்டிலோம்.

திருக்குறள் போன்றதொரு அற நூலும், சிலப்பதிகாரம் போன்றதொரு காப்பியமும் தமிழுக்கே உரிய சிறப்பினையுடையன ஆதலின் "யாமறிந்த

புலவர்களிலே தொல்காப்பியர் போல், திருவள்ளுவர் போல் இளங்கோ அடிகள்போல், இந்நில உலகில் யாங்கணுமே பிறந்திலரே; உண்மை; உண்மை; வெறும் புகழ்ச்சியிலை" என மலையுச்சிமீது நின்று மாஞாலத்திற்கு உரைக்கலாம். ஏனைய புலவர்களும் அவர்கள் பாடியுள்ள பாடல்களால் பெரும் புலவர்கள் என மதிக்கத்தக்கவர்களாகவே உள்ள னர் இற்றை மேனாட்டு இலக்கிய ஆராய்ச்சி யாளர்கள் இலக்கியத்திற்கு வரையறுத்துள்ள இலக் கணங்கள் யாவும் அவை பெற்றுள்ளன. 'இலக் கியம் என்பது மக்கள் வாழ்க்கை அடிப்படையில் இயற்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு தோன்றுதல் வேண்டும்' என்பர். பழந்தமிழ் இலக்கியங்கள் யாவும் அவ்வாறே தோன்றியுள் ளன. சங்கப் புலவர்கள் அரண்மனைகளில் தொடர்பு கொண்டிருந்தபோதும் மக்களை மறந்திலர்; மக்கள் புலவராகவே மக்களுக்காகவே வாழ்ந்துள்ளனர்; மக்களுக்காகவே இலக்கியம் என்று கொண்டனரே யன்றி இலக்கியத்திற்காக மக்கள் என்றுகொண் டிலர்.

இலக்கியத்திற் கொள்ளப்படும் பொருள்களைத் தமிழிலக்கண நூலார் முதல், கரு, உரி என வகுத்தனர்.

முதல் கரு உரி என்பனவற்றுள் உலகமே அடங்கி விடுகின்றது. 'முதல்' என்பது நிலமும் பொழுதும்; 'கரு' என்பது தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் முதலியன; 'உரி, என்பது குறிஞ்சி பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம் அகவொழுக்கம்.

"முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (தொல். பொ-3)

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். தொல்காப்பியர்க்கு முன்னும் பின்னும் வாழ்ந்த சங்கப் புலவர்களின் இலக்கியங்கள் இந்நெறி ஒட்டியே தோன்றியுள்ளன.

'இலக்கியம்' எனும் சொல்லையே நோக்குக 'இலக்கு' 'இயம்' எனப் பிரித்துக் குறிக்கோளை இயம்புவது எனப்பொருள் கொள்ளல் வேண்டும். வாழ்க்கையின் குறிக்கோளை இயம்புவதே இலக்கியமாகும். வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? அறநெறியில் பொருள் ஈட்டி இன்பம் துய்ப்பதேயாகும். இம்மூன்றும் இலக்கியத்திற்குரியன என்பதைத் தொல்காப்பியர் செய்யுளியலில்,

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல். பொ-418)

எனக் கட்டுரைத்துள்ளார்.

இயற்கை, கடவுள் உணர்வை அடிப்படையாகக் கொண்ட மக்கள் வாழ்வு, மக்கள் வாழ்வின் மும்முதற் பொருளாம் அறம் பொருள் இன்பம் எனும் இவற்றை உயிராகக்கொண்டு, இயற்றப்பட்ட சங்க இலக்கியங்கள் உயர்பேர் இலக்கியங்கள் எனக் கொள்ளுவதில் தடையென்னை? இவற்றைப் பாடியவர்கள் உயர்பெரும் புலவர்கள் என்பதில் தவறு என்னை?

இப்புலவர் பெருமக்கள் இயற்கையை எழிலுறப் பாடுவதில் இணையற்றவர்கள்

கார்காலம் தொடங்குகின்றது. பருவ காலத்தில் பெய்வதில் தவருத வானம் புதுமழை பொழிந்தது. இடையர்கள் தம் நிரையை நீர் நிரம்பிய இடத்திலிருந்து ஒதுக்கி வேறு இடங்கட்கு ஓட்டிச் செல்கின்ருர்கள். குளிர் உடலை வாட்டுகின்றது. குளிரைப் போக்க வெப்பம்தரும் கொள்ளிகளைக் கைகளில் வைத்துள்ளனர். பல் வரிசை ஒன்ருேடொன்று மோதிக் கன்னம் நடுங்குகின்றது. மக்கள் மட்டுமா குளிரால் வருந்துகின்றனர்? பிற உயிர்களும்தான் வருந்துகின்றன. ஆடு மாடுகள் மேய்வதைக்கூட மறந்து விடுகின்றன. ஓடியாடும் குரங்குகள் அசைவற்றுக் குந்திக் கொண்டிருக்கின்றன. மரக்கிளைகளில் இருந்த பறவைகள் குளிரால் பிடி தவறி விழுகின்றன. கன்றுகள் ஆவலுடன் பால் உண்ணச் செல்கின்றன. ஆனல் கறவை மாடுகளோ அவை வாய் வைப்பதால் உண்டாகும் குளிருக்கஞ்சி அவைகளைக் காலால் உதைத்துத் தள்ளுகின்றன. குன்றுகள்கூடக் குளிரால் வருந்துகின்றன போன்ற குளிர் காலம், மாலை நேரம். இதனை அறிவிக்கின்றன. அப்பொழுது மலர்கின்ற பெரிய முசுண்டைப் பூவும் பொன் போன்ற பீர்க்கம் பூவும்.

பசிய கால்களையுடைய கொக்குக் கூட்டம் நாரைகளுடன் எங்கும் செல்கின்றன. கால்வாய்களில் ஓடும் நீரை எதிர்த்துக் கயல்கள் பாய்கின்றன.

என இவ்வாறு 'நெடுநல்வாடை' எனும் பாடலில் தோலா நாவினராம் நக்கீரர், குளிர்காலத்தை நன்கு ஓவியப்படுத்திக் காட்டியுள்ளார். வாடைக்காலம் வந்தது என்ருல் அது எவ்வாறு வரும் என்பதைக் கவிஞறக் காட்டும் திறம்தான் என்னே!

"'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்து என
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம் பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொதிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த ஈர வெண்மணல்
செவ்வரி நாரையோடு எவ்வாயும் கவரக்
கயல்அறல் எதிரக் கடும்புனல் சாஅய்........"

என்னும் அடிகளும் பிறவும் இயற்கை எழிலை இனிதே எடுத்துக் காட்டும் பெற்றியன.

இயற்கையைக் கூர்ந்து நோக்கித் துய்த்தலும் மக்கள் வாழ்வை வளமுறக்காண்டலும் புலவர்தம் பெரும் பொழுது போக்காகும். 'கபிலர்' என்னும் புலவர் பெருமான் இயற்கையையும் மக்கள் வாழ்வையும் இணைத்து இன்பங்காணுகின்றார்.

அக்காலத் தமிழ் மக்கள் இயலிசை நாடகங்களிலும், நடனங்களிலும் இன்பங் கண்டனர். அக்கால நடனம் எவ்வாறு நடந்தது என்பதை இயற்கைக் காட்சியில் இன்புறக் காட்டுகின்றார்.

இங்கு நடனப் பெண்ணாக மயில் தோன்றுகிறது. பார்த்து மகிழும் அவையினராக மந்திகள்

அமருகின்றன. குழலிசையை இயற்கையில் துளை பட்ட மூங்கிலில் கோடைக்காற்று சென்று எழுப்புகின்றது முழவாக அயலில் ஓடும் அருவியின் இன்னிசை இயம்புகின்றது. தூம்பு முழக்கமாகக் குரங்குக் கூட்டங்களின் குரல் கேட்கிறது. யாழிசையாக வண்டொலி இசைக்கின்றது. விழாக் காலத்தில் நடனமும் அதன் பின்னிசையும் எவ்வாறு மக்களை மகிழ்விக்கும் என்பதனைக் கற்போர் உள்ளங்களிக்குமாறு அமைத்துக் காட்டும் கவின் தான் என்னே!

"ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழல் இசை யாகப்
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதை குரலாகக்
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக்கலி சிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்
விழவுக்கள விறலியில் தோன்றும் நாடன்" (அகம்-82)

இவ்வாறு இயற்கையில் ஈடுபட்ட புலவர்கள் மக்களை மறந்து விடவில்லை. புலமையின் சிறப்பு புலவர் கையாளும் உவமைகளாலும் புலப்படும்; உவமை தான் இலக்கிய இன்பத்தைப் பெருக்குவது. உவமைகள் புலவர்களின் சூழ்நிலைக் கேற்பவே அமையும். கண்டதைக் கொண்டு காணாததை நிலை நாட்டுவதே உவமையின் பயன். ஆகவே புலவர்கள் தாம் எண்ணாததைக் காணாததை உவமையாகக் கூறார்.

தலைமகன் தலைவியை மணப்பதற்கு உடன்பட்டு விட்டான். திருமண நாளையும் உறுதி செய்து

விட்டான். நடக்குமோ நடவாதோ என்று ஐயப்பாட்டிற்கு உள்ளாகியிருந்த தோழிக்கு இச்செய்தி பெருமகிழ்ச்சியைத்தரும்என்பதில் ஐயமில்லை. தோழி எவ்வாறு மகிழ்ந்தாள் என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். மக்கள் வாழ்வில் கருத்துடைய கபிலர் தோழியின் மகிழ்ச்சிக்கு மக்கள் மகிழ்ச்சியை உவமையாகக் காட்டுகின்றார்

மழையற்று நாடு வறண்டுவிட்டது. கலப்பைகள் எல்லாம் செயலற்று உறங்குகின்றன குன்று போன்று உயர்ந்த கரைகளையுடைய பெரிய ஏரிகளில் எல்லாம் நீரே இல்லை. பறவைகள் அவைகளை நாடிச் செல்வதே இல்லை. இவ்வேரிகளை நோக்கி வாழும் மக்கள் உளம் எவ்வாறு இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? இந்நிலையில் ஏரிகள் நிறையுமாறு பெருமழை பெய்தது. இரவு முழுவதும் பெய்து நின்றது. விடியற்காலையில் இதனையறிந்த மக்கள் உள்ளங்கள் கரைகாணு மகிழ்ச்சியை உற்றன.

மழை பெய்ததால் உவகையுற்றவர் பலர். நாட்டு மக்களில் உழவுத்தொழிலில் ஈடுபட்டோர் எல்லாரும் பெருமகிழ்வு உற்றிருப்பர். இந்நினைவு கபிலர்க்கு வந்தது. பலர் அடைந்த உவகைப் பெருக்கெல்லாம் சேர்ந்தால்தான் தோழியின் உவகைக்கு ஈடாகும் என எண்ணினர். அதனை ஒப்புமையாக்கினர். காதல் நிறைவேறும் என எண்ணியதால் உண்டாகும் உவகைக்கு உழவர் உவகையைக் காட்டும் கபிலரை மக்கள் புலவர் என்றழைப்பின் மாறுபடுவாரும் இருப்பரோ?

"நாடு வறங்கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்று கண்டன்ன கோட்ட யாவையும்
சென்று சேக்கல்லாப் புள்ள உள்ளில்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுட் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே" (அகம்-42)

'ஏர்கள்' செயலற்றிருப்பதைத் 'துஞ்ச' என்னும் சொல்லால் 'உறங்குகின்றன' என்று நயம் நோக்குமின். மக்கள் எல்லோரும் என்று கூருது 'பல்லோர்' என்றதனுல் எவ்வளவு நுட்பமாக மக்கள் நிலை வேறுபாட்டை வெளிப்படுத்துகின்ருர் என்று அறிகின்ரும் அன்ரே?

இல்லறவொழுக்கத்தில் கணவன் மனைவி ஆய இருவரிடையே உண்டாகும் ஊடல் தொடர்பான நிகழ்ச்சியை மிக நயம்பட உரைக்கும் ஆற்றல் சங்க காலப் புலவர்கட்கேயுள்ள தனிச் சிறப்பாகும்.

காதற் கணவன் பரத்தையை நாடி அவளுடன் கூடி மகிழ்ந்துவிட்டு வீட்டுக்கு வருதல் செய்யாது அங்கேயே பின்னும் அவளையே நச்சி அவள் வீட்டுப் புறத்திலேயே சுற்றித் திரிகின்ருன். காதல் மனைவி அவனைக் காணப்பெருது சுற்றத்திடையே தனித்திருந்து வருந்துகின்ருள். ஊடல் மிகுகின்றது. அவனும் வந்து சேர்கின்ருன். அவள் ஊடலைப் போக்க அவள் காலில் விழுகின்ருன். அதைக்கண்டு அவள் அகமகிழ்ந்து முகமலர்ந்து நகுகின்ருள்.

இந்நிகழ்ச்சியை உள்ளடக்கி உள்ளுறை தோன்றப் பாடியுள்ளார் மருதனிள நாகனார்.

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும்பு ஊர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கண் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கொழு பொய்கையுள்
துனிசிறந்து இழிதரும் கண்ணில்நீர் அறல்வார
இனிதுஅமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு
நனிவிரைந்து அளித்தலின நகுபவள் முகம்போலப்
பனியொடு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉம் தண்டுறை நல்ஊர!"[1]

இப்பாடலுள் ஞாயிறு எழுதலும் தாமரை மலர்தலும் தேன் வடிதலும் அதனை உண்ண வண்டு சூழ்ந்து திரிதலும் ஆய இயற்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதன் வாயிலாய்த் தலைவன் தலைவி ஊடலும் கூடலும் அழகுறக் காட்டப்பட்டுள்ளமை உணர்ந்து சுவைத்தற்குரியது. தாமரை மலர், இலைகளிடையேயும் மொட்டுக்களிடையேயும் தனியாக ஓங்கி மலர்ந்து தேன் வடிந்து நிற்றற்கு உவமையாகத் தலைவியின் மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கும் நகைமுகம் கூறப்பட்டுள்ள அழகுதான் என்னே!

இவ்வாறு சங்ககாலப் புலவர்கள் இனிய இலக்கியங்களை இன்றும் போற்றிப் புகழும் வகையில் இயற்றித் தந்துள்ளனர். இவர்கள் இன்றைய உலகப் பெரும் புலவர்களோடு ஒப்பிடத் தக்க புலமையும் பெருமையும் உடையவர்கள். இவர்கள் அமைச்சர்

---

1. கலித்தொகை–மருதம் 71.

களாகவும், தூதர்களாகவும், ஆளுநர்களாகவும், மெய்யுணர்வாளர்களாகவும், மக்கள் துயர்போக்கும் சான்றோர்களாகவும், பிறர்க்கென வாழும் பெரியோர் களாகவும் வாழ்ந்து, நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றினர். இவர்கள் அளித்துள்ள இலக்கிய இலக்கணங்களே இன்று நமக்குக் கிடைத்துள்ள வரலாற்றுக் கருவூலங்களா கும் இவை பெற்றுள்ளமையால் தான் "தமிழ னென்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா" என்று முழங்குகின்றோம் இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பே உலக ஒற்றுமைக்கும் மனித இன உறவுக்கும் உரிமைக்கும் அயராது தொண்டாற்றிய இவர் தம் வழி நின்று தமிழைப் போற்றுவோம்; தமிழரை உயர்த்துவோம்; உலகத்தோடு ஒட்டி வாழ்வோம்; உரிமை கெடாது உறவு வளர்ப்போம்.

"சங்கத் தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்போம்
எங்கும் உறவுகொண்டு ஏற்றநிலை காண்போம்"